குமரிக்கண்டம்

மற்றும்

சிந்துவெளி மாநாட்டு மலர்

1994

*புதிய கண்டுபிடிப்புகள் *புதிய திருப்புமுனை



விலை ரூ. 50

டாலர். 50.

குமரிக் கண்டம்

&

சிந்துவெளி

மாநாட்டு மலர்

(13 - 14 மே 1994 சென்னை)

தமிழ் அன்னைக்கும் மற்றும் உண்மை
ஆய்வைப் போற்றுபவர்களுக்கும் காணிக்கை.

மலர்க்குழுவினர்

சாத்தூர் சேகரன்
இரா.முத்துக்குமாரசாமி
இராமநாதன்
டாக்டர் பஞ்சாட்சரம்

முனைவர் இரா. மதிவாணன்
முனைவர் மலையமான்
ஊ. ஜெயராமன்
சொ. பாஸ்கரன்

பன்னாட்டு மொழிமையம்

பதிவு எண் 85 / 94 (இன்டர்நேஷனல் லிங்குஸ்டிக் சென்டர்)

2 ஏ - சுப்புராய நகர் 4 ஆம் தெரு,

கோடம்பாக்கம், சென்னை - 600 024.

புரவலர்கள்

அருட்செல்வர்
டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள்

மேன்மைமிகு ஏ.சி. முத்தையா "

" டாக்டர் மருதப்பிள்ளை "

" டாக்டர் வி.ஜி.சந்தோசம் "

" எம். ஜி. முத்து "

" வாசன் "

" டத்தோ சாமிவேலு (மலேசியா) "

" டாக்டர் இராசாமணி "

" ஸ்ரீனிவாசன் "

" கல்யாணசுந்தரம் "

ஆலோசகர்கள்

முனைவர் வி. ஐ. சுப்ரமணியம் (திருவனந்தபுரம்)

" பொற்கோ (சென்னை)

" ஆர். இ. ஆஷர் (எடின்பரோ)

" ஜான் மார் (இலண்டன்)

" ஜி. கே. மேனன் (லைடன்)

" செம்பருத்தி (உட்ரக்ட், ஹாலந்து)

" தாமோதரன் (ஐடல்பர்கு, ஜெர்மனி)

" இஸ்ரயேல் (மதுரை)

" மெய்யப்பன் (அண்ணாமலை)

" பத்மநாபன் (ஹம்பர்கு, ஜெர்மனி)

" ஜெயப் பிரகாஷ் (இலண்டன்)

" ஹக் பாக்ஸ் (மிச்சிகன், யு.எஸ்.ஏ)

" ஜி. இராமச்சந்திரனார் (மண்ணிவாக்கம், சென்னை)

முனைவர் அருணபாரதி (காசி)

" திண்ணப்பன் (சிங்கப்பூர்)

" மகாலிங்கம் (கௌஹாத்தி)

" திலகவதி அவர்கள்

" அன்பன் "

" குழந்தைசாமி "

" அகத்தியலிங்கம் "

" மகாலிங்கம் "

" ஸ்ரீனிவாசன் "

உறுப்பினர்கள்

இரா.முத்துக்குமாரசாமி எம்.ஏ: தலைவர்

சாத்தூர் சேகரன்: செயலர்

சொ.பாஸ்கரன் பிகாம்.: பொருளாளர்

டாக்டர் பஞ்சாட்சரம் எம்.ஏ. உறுப்பினர்

டாக்டர் திருமலை நடராசன் பி.ஓ.எல். "

முனைவர் மலையமான் "

இராமநாதன் "

ஊ.ஜெயராமன் "

பாலசுப்பிரமணியம் எம்.ஏ. "

மணிமாறன் பிகாம். "

ஆதரவாளர்கள்

முனைவர் இராமச்சந்திரன்:

திருவாளர்கள் மா. சு. சம்பந்தம்:

" தண்டபாணி, பொறியாளர்

" கு.வெங்கடாஜலம்

" பார்த்தசாரதி

" நல்லதம்பி

டாக்டர் ஆ. ஞானம் F.N.A., F.M. Asc.

துணை வேந்தர்
புதுவைப் பல்கலைக்கழகம்

ஆர். வெங்கடராமன் நகர்,
புதுச்சேரி - 605 014
தொலைபேசி: அலுவலகம் - 852175
இல்லம் - 33363

புப-து.வே-94/853

ஏப்ரல் 20, 1994

வாழ்த்துரை

பொள்ளாச்சி வள்ளலாகவும், வள்ளலார் புகழ் பரப்புநராகவும் விளங்கும் திரு. நா. மகாலிங்கம் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கும் "பன்னாட்டு மொழி மையம்" எதிர்வரும் மே 13, 14 ஆகிய இரு நாள்களில் குமரிக் கண்டம் பற்றியும் சிந்துவெளி பற்றியும் கருத்தரங்கு நடத்தவிருக்கும் செய்தி மகிழ்ச்சிக்கும், பாராட்டுக்கும் உரியது.

நம்முடைய பெருமைகளுக்குச் சான்று நம்முடைய நம்பிக்கைகளாக மட்டும் இருந்துவிடுதல் ஆகாது. உலக அறிஞர்கள் ஒப்புக் கொள்ள வேண்டுமெனில், அறிவியல் நெறிப்படுத்துவதான கண்டுபிடிப்புகளே முதல் தரவுகளாக இருக்க முடியும். குமரிக் கண்டம், சிந்து வெளி பற்றிய அறிஞர்களின் முடிவுகள் பல்வேறு முனைகளில் தேடித் தொகுத்த தரவுகளை வகுத்தும், தொகுத்தும் முடிவு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அவ்வாறே இருக்கும் என நம்புகிறேன். வாழ்த்துகிறேன்.

(Sd./-)
ஆ. ஞானம்
துணைவேந்தர்.

* * * * * * * * * * * * * * * * *

மாநாடு நல்ல முறையில் நடந்தேற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்
வே. ஞானப்பிரகாசம்
துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை
அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை.

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்
தமிழ்க்கலை இல்லம்
சென்னை – 600 030.

அன்பினீர் !

வாழிய! வணக்கம்!

குமரிக்கண்டத்தின் தொன்மை பற்றியும் சிந்து வெளியின் சிறப்பினைப் பற்றியும் இரு மாநாடுகள் தங்கள் மையம் நடத்த இருப்பதறிந்து பெரு மகிழ்வுற்றேன். தங்கள் தொண்டு தேவையானது – வளர வேண்டியது – தமிழர் வாழ்வை தலை நிமிர்த்து நிற்கச் செய்ய வழிகாட்ட வேண்டியது.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன்" என்று தமிழரால் தம் வாழ்வை வளமாக்கிக் கொள்வோர் வாழும் இந்நாளில் தமிழ் நாட்டில் தமிழ் வாழுமா அன்றிப் பாரதியின் "மெல்லத் தமிழ் இனிச்சாகும்" என்ற வாக்கு பலிக்குமா என்ற நிலையில் இங்குள்ள அனைவரும் எங்கோ திசை திரும்பிக் கொண்டிருக்கும் இந்நாளில், அன்றைய தமிழின் பெருமையை – தமிழின் சிறப்பை – தொன்மையை – துளக்கலாகாத் தூய நிலையினை நிலை நாட்ட முனைந்துள்ள தங்கள் செயல் போற்றக் கூடியது. வாழ்த்தி வரவேற்கக் கூடியது.

"இழுந்தலெமூரியா கண்டம்" "சிந்துவெளி நாகரிகம்" என்ற இரு பெரு நூல்களை வருந்தி, உழைத்த, கண்டு தெளிதத்த உலகுக்கு எழுதி தந்த – நம் தமிழர் பெருமையை என்றும் வாழ வைத்த் அந்த இரு மேலைநாட்டு அறிஞர்களை வணங்கக் கடமைபட்டிருக்கிறோம். அவற்றின் விரிவாக – விளக்கமாக – தெளிவான சிந்தனைக்கு உணவாக தெற்கே பெரும் பரப்புள்ள நாற்பத்தொன்பது நாடுகளைப் பற்றியும் வடக்கே இமய எல்லையில் அன்று வாழ்ந்த தமிழர்தம் வளமார்ந்த வாழ்வினைப் பற்றியும் இரு பெருமாநாடுகள் நடத்த முயன்ற தங்கள் பெருஞ்செயல் வையம் உள்ளவும் வணங்கிப் போற்றத்தக்கதாகும்.

என்றுமுள தென் தமிழ் – இனிய தமிழ் – யாண்டும் நிலவிய பைந்தமிழ் – இதை ஒரு வேளை தமிழர் மறந்து கைவிட்டாலும் உலகின் பிற பகுதிகளில் சிறக்க வாழும் வாய்ப்பு உள்ள நிலையினை என் நூல்கள் ஒன்றிரண்டில் குறிப்பிட்டுள்ளேன். இன்று உங்கள் செயல் தமிழ் நாட்டில் தமிழைத் தழைத்தோங்கி உயர்ந்த வாழ வழி வகுக்கும் எனும் – துணிபுடையேன் – தமிழ் – தமிழர் – அவர்தம் மாநாடு, நாகரிகம் – பிற சிறப்பியல்புகள் அனைத்தும் சிறந்து – வைய முழுவதும் பரவி ஓங்க, தங்கள் மாநாடுகள் வழி காட்டி வரலாறு படைப்பனவாக! தீர்மானங்கள் இயற்றி அமைதி பெறுவதோடன்றிச் செயலாற்றி வருங்காலத்தில் தமிழ்ப்பண்பைத் தரணி முழுவதும் ஓங்கச் செய்யும் வழியில் ஆக்கப் பணி பல புரியத் தங்கள் மாநாடுகள் வழிவகுத்து நெறிகாண்பதாக.

"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்பது இன்று போல் வெறும் ஆரவாரு முழக்கமாக, தம் தனி வாழ்வை வளர்த்துக் கொள்ளும் முழக்கமாக இல்லா வகையில் உண்மையில் அக்கொள்கை வையகம் முழுதும் பரவும் வகையில் தங்கள் மாநாடுகள் வழிகாட்டுவனவாக.

மாநாட்டின் பங்கு கொள்வோர் அனைவருக்கும் என் வாழ்த்தும் வணக்கமும்.

பணிவுள்ள
அ. மு. பரமசிவானந்தம்

இனிது வாழியர்

அறிஞர்கள் கூறும் உரைஎலாம் கேட்டு
வறிஞர் பெற்ற புதையல் நிகர்த்து
பண்பும் மகிழ்வும் உணர்வும் பெற்று
இன்பத் தமிழர் இனிது வாழியர் !

பெரும் புலவர்
இர. திருஞானசம்பந்தர்
சென்னை - 88.

WITH BEST COMPLIMENTS FROM

SAKTHI FINANCE LIMITED

Regd. & Head office : 475 Dr. Nanjappa Road

COIMBATORE 641 018

Phone : 31471 - 4 (4 Lines)

Telex : 0855 - 648 SFS IN
0855 - 479 SAF IN

Grams : SAFIN

BRANCHES AT :

Coimbatore	:	R S Puram, Avinashi Road
Madras	:	Mylapore, T.Nagar, Adyar, Ashok Nagar, Anna Nagar, George Town
Madurai	:	North Veli Street, Anna Nagar
Bangalore	:	Richmond Circle, Jayanagar
Bombay	:	Nariman Point, Chembur, Santacruz

Erode, Karaikudi, Kumbakonam, Namakkal, Pollachi, Sakthi Nagar, Salem, Tirunelveli, Trichy, Tuticorin, Vellore, Calicut, Trivandrum, Ernakulam, Palakkad, Trichur, Kottayam, Cannanore, Visakhapatnam, Vijayawada, Delhi and Pondicherry.

WITH BEST COMPLIMENTS FROM

N. MAHALINGAM & COMPANY

468, Dr. Nanjappa Road, Coimbatore - 18

Phone : 30357 (3 Lines) Grams : "ENNEMCO"

DEALER FOR

1. MATADOR 4 WHEELERS, TEMP TRAVELLER, TEMPO TRAX JEEP AND DIESEL ENGINE FOR AMBASSADOR CAR
2. KINETIC HONDA SCOOTER, LUNA MOPEDS, TFR PLUS, DOUBLE PLUS, LUNA SUPER, SWIFT GT, SPARK MOBIKE AND LUNA MAGNUM
3. PHILIPS RADIOS, TRANSISTORS, STEREO EQUIPMENTS, COLOUR, BLACK AND WHITE T.Vs
4. KURL-ON COIR PRODUCTS
5. RALLIS HOME APPLIANCES
6. TITAN WATCHES
7. INDANE DOMESTIC FUEL GAS
8. SOUTHERN GAS - INDUSTRIAL GASES
9. BHARAT PETROLEUM PRODUCTS
10. VIDEOCON TV, VCR, AUDIO AND WASHING MACHINES
11. T.V.S. WASHING MACHINES

After Sales, Service facilities can be availed in our Well Equipped Service Stations

BRANCHES AT :

1. Tirunelveli
2. Trivandrum
3. Ootacamund
4. Udumalpet
5. Pollachi
6. Erode
7. Tuticorin
8. Nagercoil

With Best Compliments From

SRI SAKTHI TEXTILES LIMITED

Coimbatore Road, Post Box No.36,
POLLACHI - 642 001.

Manufacturers of High Quality Yarn
Carded and Combed Yarn of Fine and
Superfine Varieties for Local and
Export Markets

Phone : 4131, 4132, 4133

Gram : SAKTHI

ARC RETREADS THE TYRES WITH
MRF PRECURED TREADS TO SERVE AS
NEW TYRES.
WE UNDERTAKE ALL SIZES OF TYRES FROM
SCOOTER TO TRACTOR FOR PROCESSING

Please Contact :-

THE ANAMALLAIS
RETREADING COMPANY

HEAD OFFICE:
472, Dr. Nanjappa Road,
Coimbatore - 641 018.
Phone : 34500

BRANCH:
10-A/1, Trivandrum High Road,
Tirunelveli - 627 002.
Phone : 72960

SISTER CONCERN :
The Anamallais Retreading Corporation,
104, Mount Road, Guindy,
Madras 600 032.
Phone : 2350286, 2350287 & 2350288

ABT - UNIT

THE INDO-SWISS SYNTHETIC GEM MANUFACTURING COMPANY LIMITED

14-1-60 & 61 MAIN ROAD, METTUPALAYAM - 641 301

Phone :	Office	: 2136	Grams	:	"INDOSWISS"
	Factory	: 2137 & 2087	Telex	:	0855 287 GEMS IN

Manufacturers of:

Rough Synthetic Gem Stones Spinal & Corundum in various colours and finished roundels in different sizes

(Used in Jewellery and for the manufacture of Watch Jewels, Cup Jewels, etc.)

Sole Distributors

G. P. & COMPANY

No.6, Jaffer Sahib Street,
Tiruchirapalli - 620 008
Phone : 32548
Grams : "GEEPEECO"

Rastha Gopalji
Jaipur - 302 003
Phone : 46814
Grams : "MANEK"

With Best Compliments From

GOKUL HOMES

28, C.V. Raman Raod, Alwarpet, Madras 600 018.
Phone : 4993114, 4992979 & 4993454

Single, Double & Trible Bed Room Flats and Deluxe Apartments
Available at Madras in the following prominent locations

* ADYAR * ALWARPET * MYLAPORE
* ZOCKARIA COLONY * KODAMBAKKAM
* PORUR * T. NAGAR * WEST MAMBALAM
* SRINIVASA AVENUE

Quality Construction
Value for Money

Timely Delivery
Designer Homes

Housing Loans can be arranged suitable for Bank Employees

With Best Compliments From

BHARATH ENGINEERING COLLEGE

SELAIYUR, MADRAS 600 073

SREE BALAJI DENTALL COLLEGE & HOSPITAL

NARAYANA PURAM, PALLIKARANAI,
MADRAS 601 302

SREE BALAJI COLLEGE OF NURSING

NARAYANAPURAM

SREE BALAJI COLLEGE OF PHARMACY

BHARATH SCHOOL OF MANAGEMENT STUDIES

Admn. Office: SRI LAKSHMI AMMAL EDUCATIONAL TRUST
29, TILAK STREET, T. NAGAR,
MADRAS 600 017. Phone : 825 1865

With Best Compliments From

GOLD SPOT
LIMCA
THUMPS UP
CITRA
MAAZA
&
BISLERI CLUB SODA

SAKTHI SOFT DRINKS LIMITED

422, Poonamallee High Road
Arumbakkam
Madras 600 106.

Phone : 48 37817

With Best Compliments From

GEM GRANITES

58, Cathedral Road,
Madras - 600 086, INDIA.
Phone : 8278490 / 8266107 / 8255772
Telex : 041 - 7492 **KAGU IN** / 041 - 6844 **GRAN IN**
Telefax : 044 - 8257338

Manufacturers and Exporters of
Polished and Flame Finished Granite
Building Slabs Tiles, Memorials, Markers, etc.,
in many Colours

Factory :
146, Injambakkam
Madras - 600 041
Phone: 4925885 / 4926355

'BUILDING INDIA'S PRESTIGE IN GRANITES'

SAKTHI SUGARS LIMITED

A PACE SETTER FOR RURAL PROSPERITY

SAKTHI SUGARS have emerged as the first in the country to have handled over one crore tonnes of sugarcane and converted the same into superior quality white crystal sugar within nineteen years of its insception.

SAKTHI SUGARS have engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in the yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs.7,500/- per acre.

SAKTHI SUGARS have enriched the springs of rural life by contributing over Rs.40 crores as sugarcane price annually to over twenty thousand farmers (a bulk of whom are small and marginal farmers) and generating gainful rural employment to over one lakh families in the primary, secondary and teritiary sectors.

THE DISTILLERY AT SAKTHINAGAR has the capacity to produce 27,500 kilo litres of Industrial Alcohol per annum. With the Bio-Methanisation process, the Bio-gas generated from the Distillery effluent serves as a valuable fuel for the boilers while endeavouring a pollution free environment.

SAKTHI SUGARS have established a modern foundry for producing superior quality S.G. / Grey Iron Castings for automobile industry in the country.

SAKTHI SUGARS have promoted a number of rural development programmes viz, (1) Sakthi Higher Secondary School, (2) Sakthi Institute of Technology, (3) V.M. Kailasam Hospital with a chain of Mini Primary Health Centres, (4) Voluntry Health Services - Leprosy Hospital etc.

SAKTHI SUGARS spread sweetness to millions of homes with her superior quality white crystal sugar. SAKTHI SUGARS stand poised for greater strides in the years to come.

HEAD OFFICE:

180, Race Course Road,
Coimbatore 641 018.

REGD. OFFICE & FACTORY - UNIT - I

Sakthinagar : 636 315
Erode R.M.S.

FACTORY - UNIT - II

Kannariruppu - Mathur
Padamathur Post
Sivaganga : 623 560
Pasumpon Muthuramalinga Thevar Dist.

ஆழ்வார்கள் ஆய்வு மையம்

நந்தம்பாக்கம், குன்றத்தூர் வழி – 600 069

எங்கள் முதல் வெளியீடு

நாலாயிர திவ்வியப் பிரபந்தம் நயவுரை

டாக்டர் ஜெகத்ரட்சகன் விலை ரூ.300

விலை ரூ.300/-

கிடைக்குமிடங்கள்

திருமகள் நிலையம்
வேங்கட நாராயணன் சாலை
தியாகராய நகர்
சென்னை – 17

சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம்
154, டி. டி. கே சாலை
சென்னை – 18

With Best wishes from

* Anand Builders
* Arul Migu Kalasalingam College of Engineering
* Arul Migu Kalasalingam Poly Technic
* Arul Migu Kalasalingam College of Pharmacy
* Arul Migu Kalasalingam Industrial Training Institute

Anand Builders
14, Sriram Srinivasan Road,
Alwarpet, Madras - 600 018.

WITH BEST COMPLIMENTS OF

1. **அரசு காஸ்டிங் ஒர்க்ஸ்,**
   சென்னை - 81.

2. **M/S RADHA OFFSET PRESS,**
   3, Lotus Ramasamy Street, Royapuram, Madras - 13.

3. **M/S S.M.K. MOHIDEEN & CO,**
   (Iron & Steel Merchants)
   18, Police Quarters, Broadway, Madras -108.

4. **M/S CHEENA STEEL TADERS,**
   (Iron & Steel Merchants)
   33, Malayappan Street, Mannady, Madras - 1.

5. **M/S S.A. CANY & CO,**
   (Iron and Steel Merchants)
   3 / 35, Mannady Street, Madras - 1.

6. **M/S M.S. SHANMUGASWAMY & SONS,**
   (Grains & Pulses)
   63, Varadamuthiappan Street, Madras - 1.

7. **M/S SHREE AYYANAR TIMBER,**
   27, Basin Bridge Road, Madras - 79.

8. **M/S BALAJI & CO,**
   (Commission Agents)
   49, Govindappa Naicken Street, Madras - 1.

9. **M/S ANAND TRADERS,**
   (Dhall Merchants)
   26 / 2, Rama Naicken Street, R oyapuram, Madras - 13.

குமரிக்கண்டமும் – சிந்துவெளியும்

- டாக்டர் நா. மகாலிங்கம்

இந்தியத் துணைக்கண்டத்தின் இன்றைய தெற்கு முனைக்கு அப்பால் விரிந்து பரந்திருக்கும் கடல் பரப்பில்தான் குமரிக்கண்டம் இருந்தது. அதைப்பற்றிப் பல மேடைகளில் பேசியிருக்கிறேன். பல கட்டுரைகளும் எழுதி இருக்கிறேன்.

மொரிஷியஸ் தீவில் நடைபெற்ற ஏழாவது உலகத்தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டேன். அந்த மாநாட்டிலும் குமரிக்கண்டம் பற்றி என் ஆய்வுரையை நிகழ்த்தி இருக்கிறேன்.

சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகம்தான். இதில் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு உண்டு.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக, குமரிக்கண்டம், சிந்துவெளி பற்றிய புதிய புதிய கண்டுபிடிப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தினப்பத்திரிகைகளிலும், வாரப் பத்திரிகைகளிலும், மாதப்பத்திரிகைகளிலும் குமரிக்கண்டம் - சிந்துவெளி பற்றிய விவரங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

சென்ற பத்தாண்டுகளாக இவைப் பற்றிய புதிய புதிய செய்திகள் ஆதார பூர்வமாகவும், விஞ்ஞான பூர்வமாகவும் வந்து கொண்டிருக்கின்றன.

உலகமொழிகளை ஒப்பிட்டு அறிந்தவர் சாத்தூர் சேகரன். அவர் என்னோடு உரையாடும் போது தமிழ் மொழியின் சிறப்பான இலக்கணக் கட்டுக்கோப்பு பற்றிச் சொல்வது வழக்கம்.

குமரிக்கண்டம் என்பதை அவர் லெமூரியா என்று கூறி வந்தார்.

லெமூரியாவின் காலம் கோடிக்கணக்கான ஆண்டுகளாக இருக்கலாம். அந்தக் காலத்தில் வாழ்ந்த மனிதர்களைப் பற்றியோ - அவர்கள் பேசிய மொழியைப் பற்றியோ தெளிவாக வரையறை செய்ய முடியாது என்று அவரிடம் சொன்னேன்.

அவரும் ஏற்றுக்கொண்டார்.

பின்னர் குமரிக்கண்டத்தின் காலம் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு மேலே இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தோம்.

சாத்தூர் சேகரன் குமரிக்கண்டத்தில் வழங்கியது தமிழ் மொழிதான் என்று சொன்னார். அதற்குப் பல தமிழ்ச் சொற்களையும் மேற்கோளாகக் காட்டினார். அதைக் கேட்டு நான் வியந்தேன்.

அவர் சொன்ன குமரிக்கண்டச் சொற்கள் எவை? அவற்றைத் தமிழ் மொழிச் சொற்கள்தான் என்று நிரூபிப்பது எப்படி?

என்னுடைய இந்த சந்தேகத்தைச் சாத்தூர் சேகரிடம் கேட்டேன்.

அவர் குமரிக்கண்டத்தில் வழங்கி வந்த மொழி தமிழ் மொழிதான் என்பதற்கு, பல தமிழ்ச் சொற்களை அறிவியல் விதியுடன் எடுத்துத் தெளிவாக விளக்கிக் காட்டினார்.

குமரிக்கண்ட மக்கள் அங்கிருந்து வெளியேறிய காலம், முதல் கடல்கோள் நிகழ்ந்த காலம்தான். இத்தகைய கடல் கோள்கள் பல தொடர்ந்து நிகழ்ந்திருக்கின்றன. முதல் கடல் கோள் நடைபெற்ற காலம் இன்றைக்கு 52 ஆயிரம் ஆண்டு களுக்கு முந்தியது ஆகும்.

இந்தக் காலகட்டத்தில் குமரிக்கண்டத்தில் இருந்து அவ்வப்போது வெளியேறிய தமிழ் மக்கள் ஆஸ்திரேலியக் கண்டத்திலும் அமெரிக்கக் கண்டத்திலும், ஆப்பிரிக்கக் கண்டத்திலும் குடியேறி இருக்கிறார்கள்.

அவர்கள்தான் ஆஸ்திரேலிய பழங்குடி மக்களும், அமெரிக்க செவ்விந்திய மக்களும், ஆப்பிரிக்கப் பழங்குடி யினரும் ஆவர்.

அவர்கள் பேசுகின்ற மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவற்றைத்தான் சாத்தூர் சேகரன் குமரிக்கண்டத் தமிழ் மக்கள் பேசிய தமிழ் சொற்கள் என்பதை வகுத்தும் தொகுத்தும், அறிவியல் பூர்வமாக விளக்கிச் சொல்லுகிறார்.

குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மக்கள் பலர் நிலத்தின் வழி யாக வட இந்திய முதலிய பல இடங்களில் குடி ஏறினார்கள்.

அவர்கள் இந்தியாவுக்கு வடகிழக்கே இருக்கும் தாய்லாந்து, இந்தோசீனா மலேசியா, சீனா முதலிய நாடுகளிலும் குடி ஏறினார்கள்.

இந்தியாவுக்கு வடக்கிலும், வடமேற்கே உள்ள நாடுகளிலும், மத்திய ஆசியா, மேற்கு ஆசியா முதலிய நாடுகளிலும் குடி ஏறினார்கள்.

இப்படி அவர்கள் குடியேறிய நிகழ்ச்சி இன்றைக்கு 17,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏழாயிரம் ஆண்டுகள் வரையில் நடைபெற்று இருக்கிறது.

இவர்கள் பேசுகின்ற மொழி குமரிக்கண்ட தமிழ் மொழியில் இருந்து சிறிது வேறுபட்டு இருப்பதைக் காண முடிகிறது.

இன்றைக்குப் பன்னிரெண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஐரோப்பாக் கண்டத்தைப் பெரும் பனி மூடி இருந்தது. அந்தப் பனி உருகியது. அந்தப் பகுதி மக்கள் வாழத் தகுந்த நிலப் பகுதியாக மாறியது. அங்கும் குமரி நாட்டுத் தமிழர்கள் குடி ஏறினார்கள்.

குமரிக்கண்டத் தமிழர்கள் ஆசிய நாடுகள், பசுபிக் தீவுகள் பலவற்றிலும் குடியேறினார்கள்.

குமரிக்கண்டத்தின் அழிவு இன்றைக்கு 12 ஆயிரங்களுக்கு முன்பிருந்து மூவாயிரம் ஆண்டுகள் வரையில் தொடர்ந்து நிகழ்ந்து இருக்கிறது. அந்தக்காலத்தில் பல கடல் கோள்கள் ஏற்பட்டு வந்தன.

அதனால் குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மக்கள் உயிர் வாழ்வதற்காக அடிக்கடி பல நாடுகளில் சென்று குடி ஏறி இருக்கிறார்கள்.

அப்போது அவர்கள் குடி ஏறிய நாடுகளில் வழங்கிய மொழிகளையும் அவர்கள் தங்கள் மொழியுடன் சேர்த்து பேச வேண்டிய சூழலுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அதனால்தான் குமரிக்கண்டத்தின் தமிழ் சொற்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

பழங்காலத் தமிழர்கள் நிலவை, 'உவா' என்றும், 'உவவு மதி' என்றும் அழைத்து வந்தனர்.

ஏறத்தாழ ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் குமரிக்கண்டத்தில் இருந்து ஆஸ்திரேலியாவில் குடியேறியவர்கள் குமரிக்கண்டத் தமிழ் மக்கள். அவர்கள் இன்றும் நிலவு என்ற தமிழ்ச் சொல்லையும் மாதம் என்ற தமிழ்ச் சொல்லையும் குறிப்பிடுவதற்கு 'உவா' என்ற பழந்தமிழ்ச் சொல்லைத்தான் வழங்கி வருகின்றனர்.

இந்தச் சொல்லே இன்று மேற்கு ஆசியப் பகுதிகளிலும் பிற இடங்களில் உ என்ற எழுத்து மறைந்து 'வாவு' என்றும் திரிந்து வழங்கி வருகிறது.

இப்போது வழக்கில் இருக்கும் தமிழில், கண் என்ற சொல்லுக்கு மட்டும் 30க்கு மேற்பட்ட சொற்கள் இருக்கின்றன. 'புலம்' என்பது கண்ணைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல். இதை மொழி ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்தப் புலன் என்ற சொல்லே 'புலன் விசாரணை' என்ற சொற்றொடரில் இருப்பதைக் காணலாம்.

ஆஸ்திரேலியப் பழங்குடியினர் இன்றும் 'கண்' என்பதற்கு 'புலம்' என்ற சொல்லைத் தான் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு ஏறத்தாழ 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் குமரிக்கண்டத்தை விட்டு அமெரிக்காவில் குடியேறிய மக்களை அந்த நாட்டு பழங்குடி மக்கள் என்றும் அவர்கள் செவ்விந்தியர்கள் என்றும் அழைத்து வருகின்றனர்.

செவ்விந்தியர்கள் 'அம்மா' என்ற சொல்லை 'அன்னை' என்றே அழைத்து வருகின்றனர்.

ஆனால் நாமோ அன்னையை இலக்கியச் சொல்லாக நாடகங்களில் மட்டும் பயன்படுத்தி வருகிறோம்.

அந்தக் கால கட்டத்தில் ஆப்பிரிக்காவில் குடியேறிய குமரிக்கண்டத் தமிழர்கள் இன்றும் அதிஅற்புதமான தமிழ்ச் சொற்களையே பயன்படுத்துகின்றனர்.

தமிழ் சுட்டு பெயர்கள் பலவற்றை அப்படியே பயன்படுத்துகின்றனர்.

குமரிக்கண்டத் தமிழ் தொடக்க காலத்தில் அவன், அவள், அது என்பதை அ - ஆ என்றும், இவன், இவள், இது, என்பதை இ - ஈ - ஒ என்றும் குறிப்பிட்டனர்.

சில வேளைகளில் இந்த ஒருமைச் சொற்களே பன்மைச் சொற்களுக்கும் பயன்பட்டன.

பழைய ஆப்பிரிக்க மொழிகளில் இவை இடப் பெயராகவும் சுட்டுப் பெயராகவும் இப்போதும் பயன்பட்டு வருகின்றன.

பிற கண்டங்களில் உள்ள சில மொழிகளில் இவை மூன்று இடப்பெயர்களாக வழங்குவதைக் காண முடிகிறது.

இந்தச் சொற்களே இடைக்காலத்தில்தான் - அவன் - அவள் - அது, இவன் - இவள் - இது என்றும்,

தாம் - அவர் - இவர், அவை - இவை என்ற பொருளில் பயன்பட்டு வருகின்றன.

சில ஆப்பிரிக்க மொழியிலும் இப்படியே இவை வழக்கில் இருக்கின்றன.

சீன மொழியிலும் இவை, படர்க்கையில் மூன்று இடப் பெயர்களாக வழங்கி வருகின்றன.

தானி - என்ற தெலுங்குச் சொல் தமிழின் பழமைக்குக் கட்டியம் கூறும்.

சமஸ்கிருத மொழியிலும் குமரிக்கண்டத்தின் தமிழ் ஆதிக்கம் இருக்கிறது.

அவ்வளவு ஏன் ?

இன்றைய ஆங்கிலச் சொல்லான (THEY) 'தே' என்பதன் பழைய ஆங்கில வடிவம் 'THAM' (தாம்) என்பதுதான். இப்போது மகர மெய் கெட்டு 'தா' (THA) என்று வழங்கி வருகிறது.

சீன மொழியில் இறைச்சி என்ற தமிழ்ச் சொல் 'றச்சி' என்றும் நிறங்கள் என்ற தமிழ்ச் சொல் 'ரங்' என்றும் 'பூ' என்ற தமிழ்ச் சொல் 'ஹூ' என்றும் வழங்கி வருகின்றன. ப என்ற தமிழ் எழுத்தை 'ஹ' என்று கன்னட மொழியில் வழங்கி வருகிறார்கள். இதேபோல இன்னும் பல தமிழ்ச் சொற்கள் கன்னடத்தில் சிதைந்து ஒலிக்கின்றன. எ.கா. பத்து (10) - ஹத்து. பல் (லு) என்ற தமிழ்ச் சொல் 'ஹல்லு' என்றும் கன்னட மொழியில் இன்றும் வழங்கி வருகிறது. கண் என்ற தமிழ்ச் சொல் கண் என்றும், காண் என்ற தமிழ்ச் சொல் காண் என்றும் சீன மொழியில் வழக்கத்தில் இருந்து வருகின்றன.

சீன மொழியில் ஏறத்தாழ ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் சிதைந்து உச்சரிக்கப்பட்டு வருகின்றன.

சிதையாத 300 க்கு மேற்பட்ட தூய தமிழ்ச் சொற்கள் சீன மொழியில் வழக்கத்தில் இருக்கின்றன.

இந்தச் சொற்களை நீக்கி விட்டால் சீன மொழி இயங்காது என்று ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டுகிறார் சாத்தூர் சேகரன்.

தமிழில் குதிரையை 'மா' என்று சொல்லுகிறோம்.

தாய்லாந்து மொழியிலும் சீன மொழியிலும் குதிரையை 'மா' என்றுதான் சொல்லுகிறார்கள்.

மேற்கு ஆசிய மக்களுக்கு எழுதுவதற்குப் பனை ஓலை கிடைக்கவில்லை. அதனால் எளிதாகவும் மலிவாகவும் கிடைத்த ஈரக்களி மண்ணில் எழுதி இருக்கிறார்கள். ஈரக்களி மண்ணை ஏடு போலச் செய்து அதில் நீண்ட மூங்கில் கழி அல்லது மரக்குச்சி கொண்டு எழுதி இருக்கிறார்கள்.

கைத்தடம் ஈரக்களி மண்ணில் படாமல் இருப்பதற்காக இடமிருந்து வலமாக எழுதுவதைக் காட்டிலும் வலமிருந்து இடமாக எழுதுவது அவர்களுக்கு சுலபமாக இருந்திருக்கிறது.

இதனால் தமிழ் எழுத்துக்கள் பிறழ்ந்து பட்டன.

நாம் தனி உயிர் எழுத்தை எழுதுவதைப் போன்று அவர்கள் எழுதாமல் உயிருக்கான குறியீட்டை மட்டும் எழுத்தின் மேலோ கீழோ இட்டு எழுதினார்கள்.

இவ்விரண்டு கருத்தையும் உள்ளடக்கியதே சாத்தூர் சேகரனின் பிம்ப விதி (லா ஆப் மிரர் இமேஜ்) அல்லது பிறழ்ச்சி விதி ஆகும்.

உலக அறிஞர்கள் மொழி இயலில் இது ஒரு மாபெரும் கண்டுபிடிப்பு என்று சாத்தூர் சேகரனின் பணியை வியந்து பாராட்டுகின்றனர்.

வ் + ஆ = வா. வட இந்தியர்கள் வல இடமாக எழுதியதால் ஆவ் என்று எழுதி இருக்கின்றனர்.

வட இந்திய மொழிகள் பலவற்றில் ஆவ், ஆவோ என்றால் 'வா' என்பதுதான் பொருள்.

அரபி மொழியில் முன் ஒட்டு 'ஜ்' பெற்று 'ஜ் - ஆவ்' என்று கூறுகின்றனர்.

ம் + ஆ = மா. 'மா' என்றால் மாம்பழம் என்று நமக்குத் தெரியும்.

வட இந்தியர்கள் இதை 'ஆம்' என்கிறார்கள். சமஸ்கிருத மொழியில்கூட 'ஆம்ர' என்றுதான் எழுதப் படுகிறது.

பழைய தமிழில் அம்பு என்பதற்கு; அப்பு என்பதற்கும் தண்ணீர் என்றுதான் பொருள்.

இலக்கிய அரபி மொழியில் 'அம்' என்ற சொல்

பிறழ்ச்சி விதிப்படி 'ம' என்று மாறி வருகிறது. இதற்கு அரபி மொழியில் தண்ணீர் என்றுதான் பொருள்.

அரபிய பேச்சு மொழியில் தண்ணீர் என்பதை மயி, மொயி என்று திரித்து ஒலிக்கிறார்கள்.

அல்ல (-இல்லை) என்ற தமிழ்ச் சொல் 'அல்' என்று குறுகி, பிறழ்ச்சி விதிப்படி அரபி மொழியில் 'ல' என்று மாறி எதிர்மறைப் பொருளான இல்லை என்ற பொருளையே தருகிறது.

'லல' என்றால் அரபி மொழியில் 'இல்லை இல்லை' என்றுதான் பொருள்.

தமிழில் பெண்களைக் குறிப்பிடுவதற்கு 'பெண்டு' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறோம். இது குமரிக் கண்டக்காலத்தில் இருந்து வழங்கிவரும் தமிழ்ச்சொல்.

பெண்டு என்பது அரபி மொழியில் 'பின்ட்' என்று திரிந்து ஒலிக்கிறது. எழில் என்பது 'எ - ய - ஜ' என மாறும்.

எழில் என்று தமிழ்ச் சொல் தான் அரபி மொழியில் 'ஜமில்' என்று வழங்குகிறது.

'எழிலான பெண்டு' என்ற தமிழ்ச் சொல் தொடர், பிறழ்ச்சி விதிப்படி 'பின்ட் ஜமீலா' என்று அரபி மொழியில் வழங்குகிறது.

இதை ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன் சாத்தூர் சேகரன் விளக்கிய போது நான் வியந்து போனேன்.

இதைத்தவிர 'ஏண்டா, ஏண்டி' என்று நாம் வேலையாளையோ சிறுவர், சிறுமியையோ அழைக்கிறோம்.

இந்தச் சொல்லை அப்படியே இராக்கி மொழி தன் முன்னிலை ஒருமை இடப்பெயராக வழங்குகிறது.

இந்தச் சொல் அரபி மொழியில் 'அந்தா, அந்தி' என்று வழங்குகிறது.

தமிழின் வசவுச் சொல்லைக்கூட, உலக மொழிகள் தம் இலக்கியச் சொல்லாக வைத்து இருக்கின்றன.

உலக மொழி இலக்கணங்கள் எல்லாம் தமிழில் இருந்து பெறப்பட்டவைதான்.

இப்படிப்பட்ட பல நூறு செய்திகளையும், ஆதாரங் களையும் புரிந்து கொண்டால் தமிழ்தான் உலக

மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி என்று அழுத்தமாகக் கூறலாம்.

இன்றைக்கு 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஐரோப்பா கண்டம் முழுவதும் பல கிலோ மீட்டர் உயரம் பனி படிந்து இருந்தது. இதைப் பெரும்பனிக் காலம் என்று சொல்வார்கள். பிறகு அந்தப் பனிப்பாறை உருகத் தொடங்கியது. அதனால் உலகின் கடல் மட்டம் 400 அடிக்கு மேல் உயர்ந்தது. குமரிக்கண்டத்தின் பெரும்பகுதி அழிந்தது.

முதற்சங்கம் அழிந்த காலமும் இந்தக் காலத்தை ஒட்டியே நிகழ்ந்திருகிறது.

குமரிக்கண்டத்தில் வாழ்ந்த பல நூறாயிரம் மக்கள் கண நேரத்தில் கடல் ஊழியில் மறைந்து இருக்கிறார்கள்.

இந்தக் கடல் கோளில் இருந்து தப்பிப் பிழைத்த குமரிக்கண்ட தமிழர்களின் நெஞ்சில் தங்கள் மூதாதையர்கள் பொக்கென்று மறைந்து போன கொடுமை அழியாமல் நிலைத்து நின்று வந்தது.

இதனால்தான் தெற்குத் திசையைக் கூற்றுவன் திசை என்றனர்.

திருவள்ளுவர்கூட இறந்த முன்னோரைத் தென்புலத்தார் என்று கூறி வணங்கத்தக்கவர் வரிசையில் இறைவனுக்கு அடுத்து வைத்து இருக்கிறார்.

ஐரோப்பாவில் குமரிக்கண்டத் தமிழர்கள் மூன்று வகையில் குடியேறி இருக்கிறார்கள்.

வடக்கு ஆப்பிரிக்கா மூலமாக, பலர் குடி ஏறி இருக்கிறார்கள்.

மேற்கு ஆசியாவில் இருந்தும் பலர் குடி ஏறி இருக்கிறார்கள்.

வேறு சிலர் கடல் மார்க்கமாகச் சென்று உலகின் பல பகுதிகளில் குடியேறி இருக்கிறார்கள்.

ஐரோப்பாவில் குமரிக்கண்ட மக்கள் எப்படிக் குடியேறினார்கள்? எங்கே குடியேறினார்கள்? என்ன என்ன பெயர்களைப் பெற்றார்கள் என்பதைப்பற்றி எல்லாம் சாத்தூர் சேகரன் குமரிக்கண்டம் என்ற தமது ஆய்வு நூலில் ஆதாரபூர்வமாக விளக்கி இருக்கிறார்.

ஐரோப்பாவில் முதலில் குடியேறிய குமரிக்கண்டத்

தமிழர்கள் செல்டிக் மக்கள், - பாஸ்க் மக்கள், - எத்ருஸ்கள் மக்கள், மத்திய தரைக்கடல் மக்கள் என்று நாலு வகையாகப் பிரிந்திருக்கிறார்கள்.

கிரீட் தீவிலிருந்து குடிபெயர்ந்து கிரேக்கப் பகுதிகளில் குடியேறிய குமரிக்கண்ட மக்கள் கிரேக்கர் ஆயினர்.

மேற்கு ஆசிய ஹிடைட் பகுதிகளிலிருந்து குமரிக்கண்ட மக்கள் ஐரோப்பாவில் பல இடங்களில் குடி ஏறினார்கள்.

இன்றைக்கு 2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னால் ஆயுதங்களுடன் சிற்சில ஐரோப்பியப் பகுதிகளை வென்று அவற்றில் குமரிக்கண்ட மக்கள் குடி ஏறி இருக்கிறார்கள்.

மேற்கு ஆசியாவில் குடி ஏறிய குமரிக்கண்ட மக்கள் பலர்.

இவர்களில் பலர் வடஇந்தியாவில் இருந்து, மேற்கு ஆசியா, ஐரோப்பா முதலிய நாடுகளுக்குச் சென்றவர்கள்.

கடைசியாகச் சென்ற ஐரோப்பியர் இவர்கள் ஆதலின் இவர்கள் மொழியிலும் ஏராளமான நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன.

'கோன்' என்ற சொல் அரசனைக் குறிப்பிடும் சொல். கோன் என்ற சொல்லே மேற்கு ஆசியாவில் 'கான்' என்று திரிந்து வழங்கி வருகிறது.

ஜர்மன் மொழியில் சுதே சொல் 'கொனிக்' என்று திரிந்து வழங்கி வருகிறது.

ஆங்கில மொழியில் 'கிங்' (KING) என்று திரிந்து ஒலிக்கிறது.

'தாரகை' என்ற சொல் 'விண்மீன்' என்ற பொருளில் தமிழில் வழங்கப்படுகிறது.

'தாரா' என்று வடஇந்தியாவில் வழங்கப்படுகிறது.

'சி - த்தாரா' என்று அரபி மொழியில் வழங்கப்படுகிறது.

'ஸ்டெல்லா' என்று லத்தீன் மொழியில் வழங்குகிறது.

'ஸ்டார்' என்று ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது.

இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் நல்ல தமிழ்ச் சொற்கள் ஆயிரக்கணக்கில் இப்போதும் வழக்கத்தில் இருக்கின்றன. திரிந்த நிலையில் பல தமிழ்ச் சொற்களும் வழக்கத்தில் இருக்கின்றன.

ஒரு வேடிக்கை என்னவென்றால் மரக்கப்பலை மரக்கப் என்று அரேபிய மொழியும் கூறுகிறது. தமிழ்ச் சொற்கள் எப்படி எல்லாம் சிதைந்து இருக்கின்றன என்பதையும், அவை தமிழின் கிளை மொழிகள்தான் உலகமொழிகள் என்பதையும் சாத்தூர் சேகரனின் நூல்கள் மூலமாக எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் வாழும் மக்களின் பெயர்கள் திரிந்த தமிழாகவே இருக்கின்றன.

ஊர்ப் பெயர்கள் - ஏன் தெருப் பெயர்கள்கூட நல்ல தமிழாகவோ, திரிந்த தமிழாகவோ இருப்பதைப் பார்க்கலாம்.

பெருமாள் சுல்தான், லீலா சுல்தான் என்றுகூட இசுலாமிய சுல்தான்கள் பெயர்கள் இருக்கின்றன என்று சாத்தூர் சேகரன் ஆதாரபூர்வமாக விவரித்த போது நான் வியந்தேன்.

இந்தோனேசிய தலைவர் சுகர்னோவினுடைய இசுலாமிய மனைவியின் பெயர் இரத்னா தேவி என்பது நமக்கு எல்லாம் தெரிந்த செய்திதான்!

கப்பல் - மரக்கப்பல் என்பதை பாலினேஷிய மக்கள் 'கெப்பல்' என்றும் 'மரக்கப்' என்றும் வழங்குகிறார்கள்.

இன்றைய தாய்லாந்து மன் னின் சிறப்புப் பெயர் சுழலும் கர ன். இதற்கு வாளை வேகமாகச் சுழற்றும் வீரன் என்று பொருள்.

அரசரின் மனைவியின் பெயர் சீர் கீர்த்தி.

தோண்டத் தோண்ட பொன்னும் மணியும் கிடைப்பது போல ஆராய ஆராய தமிழுக்குச் சாதகமான செய்திகளே மிகுந்துள்ளன.

எனவே குமரிக்கண்ட மாநாடு இப்படிப்பட்ட வரலாற்றுச் செய்திகளை வாரி வாரி வழங்குகிறது.

குமரிக்கண்ட ஆய்வின் ஒவ்வொரு துளியும் தமிழுக்குப் பெருமை அளிப்பதாக இருக்கிறது. அதன் தொன்மையைக் காட்டுகிறது.

இரண்டாம் நாள் மாநாடாக சிந்துவெளி மாநாடு நடைபெறுகிறது.

நூற்றுக்கு மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்

பெருமக்கள் சிந்துவெளி நாகரிகம் தமிழ் நாகரிகமே என்று அறுதி இட்டு கூறி இருக்கின்றனர்.

சில அறிஞர் பெருமக்கள் தக்க காரணமோ சான்றுகளோ தராமல், மறுக்கின்றனர். இதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இருப்பினும் இன்று வேர்ச்சொல் அகரமுதலித் திட்ட இயக்குநர், இரா. மதிவாணன் சிந்துவெளி முத்திரைகளைத் தமிழ் என்று தெளிவாகப் படித்து காட்டி இருக்கிறார். யாராலும் மறுக்க முடியாதபடி சிந்துவெளியில் வழங்கிய மொழி தமிழ்தான் என்றும், சிந்துவெளி எழுத்துக்கள் தமிழ் மொழியின் ஆதி வரி வடிவங்கள் என்றும் நிரூபித்துக் காட்டி இருக்கிறார்.

நான் வேர்ச்சொல் அகரமுதலித் திட்ட இயக்குநர் இரா. மதிவாணன் கண்டுபிடிப்பைப் சரிபார்க்கும்படி சாத்தூர் சேகரனிடம் கேட்டுக்கொண்டேன்.

அவரும் 400க்கு மேற்பட்ட சிந்துவெளி முத்திரைகளைச் சரிபார்த்து 'தமிழ் எழுத்துக்களே' என்றும், டாக்டர் இரா. மதிவாணன் ஆய்வுகள் அசைக்க முடியாத சான்றுகளுடன் இருக்கின்றன என்றும் கூறினார்.

ஒரு நாள் சாத்தூர் சேகரன் உலக எழுத்துக்கள் அடங்கிய ஒரு கோப்புடன் என்னைச் சந்தித்தார்.

சிந்துவெளி எழுத்துக்களின் தொடர்ச்சியே தமிழ் வட்ட எழுத்தும், தமிழ் பிரம்மி எழுத்தும் ஆகும்.

குமரிக்கண்ட காலத்திலேயே தமிழுக்குச் சிலவகை எழுத்து வரிவடிவ வகைகள் இருந்திருக்க முடியும் என்று பல எழுத்துக்களை எழுதிக் காட்டினார்.

திருமூலர் தமிழ் 51 எழுத்துகளைக் கொண்டது என்று கூறி இருக்கிறார்.

தொல்காப்பிய இலக்கணமோ தமிழ் எழுத்துகள் உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துகளும் ஆக 33 எழுத்துகள்தான் என்று சொல்கிறது.

மொழி இயல் நிபுணர்களும் போனிம்ஸ் - ஒலியன்கள் உலக மொழிளுக்கெல்லாம் முப்பத்து மூன்றுதான் என்று சொல்லி இருக்கிறார்கள்.

எனவே உலக எழுத்துக்கள் எல்லாம் தமிழ் எழுத்துக் களில் இருந்துதான் தோன்றி இருக்கின்றன என்பதைத் தகுந்த ஆதாரத்துடன் சாத்தூர் சேகரன் கூறினார்.

அவர் அதற்குச் சான்றாக எடுத்துக்காட்டி இருக்கும் எழுத்துகளைப் பாருங்கள். தமிழ் சிந்துவெளிப் பகரம், வட்ட எழுத்துப்பகரம் இந்த வடிவங்களையே உலக மொழிகள் பக்கவாட்டு வசமாகவோ வலமாக இடமாகவோ, கோடுகளைச் சாய்த்தோ தம் எழுத்தை உருவாக்கியுள்ளன.

பகரம்



எகிப்து (ஒலிப்புப் பகரம்)		ஹிட்டைட் (ப்)	
சீன எழுத்து (பி)		சிறியா மொழி (ஒலிப்பு)	
சீன எழுத்து (பு)		கிழக்கு சிறியா	
வடக்கு எத்ருஸ்கன்		சிறியா மொழி	
கோத்திக் (ஒலிப்புப் பகரம்)		அரபி (ஒலிப்பு)	
		அரபி ()	
கோத்திக்		அரபி (பஃவ)	
உம்பிரியன் (தொடக்க இலத்தீன்)		வட இந்திய பகரம்	
		வட இந்தியப்ப	

இங்குக் குறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் யாவும் சிந்துவெளி எழுத்து,

தமிழ் வட்ட எழுத்து, தமிழ் பிரம்மி எழுத்து இவற்றின் திரிபே என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

தமிழில் இருப்பதைத் தலைகீழாகவோ பக்கவாட்டிலோ போட்டிருக்கின்றன பிற மொழிகள்.

சிலவற்றில் பக்கக்கோடு உயரக்கோடு ஆகியவை இருக்கின்றன.

சில எழுத்துக்கள் தமிழின் வடிவங்களான 'ப' போன்றன இடுங்கிக் கோணக்கோடுகளாக மாறியுள்ளன. ,

ஒலிப்புப் பகரம், இரட்டைத் தமிழ் பகரமாகக் கூடி சில மொழிகளில் அமைகின்றன.

இதுபோல உலகில் உள்ள எல்லா எழுத்துக்களும் தமிழில் இருந்தே தோன்றியுள்ளன என்பதற்கான சான்றுகளைச் சாத்தூர் சேகரன் வைத்திருக்கிறார். விரைவில் சாத்தூர் சேகரனின் உலக எழுத்துக்களின் ஆய்வை, நூலாக வெளியிடுவதற்கும் ஏற்பாடு செய்து வருகிறேன்.

சில சான்றுகளற்ற வாதங்களால் தமிழ் மொழியையும் அதன் வளமையான இலக்கியங்களையும் அசோகன் கல்வெட்டு காலத்திற்குப் பின் வந்தவை என்று சொல்வது எத்தனை அறியாமை என்பது புலனாகிறது.

"ஓம் சக்தி" இதழில் திராவிடர், ஆரியர் பற்றிச் சில கட்டுரைகள் எழுதி இருக்கிறேன். எல்லாரும் தமிழர்கள்தான். ஆரியர் என்று ஓர் இனம் இருந்ததே இல்லை.

ஆரியர் என்ற சொல்லை இனவழியில் பயன்படுத்துவதை ஐக்கிய நாடு மன்றம் தடை செய்து இருக்கிறது.

"யாதும் ஊரே; யாவரும் தமிழர்!" இதுதான் உலகில் நின்று நிலைக்கப் போகிற தத்துவம்.

இந்தியா அன்றுமட்டுமல்ல என்றுமே தமிழ் இந்தியா வாகவே இருந்து வருகிறது.

நாகரிகம், பண்பாடு, கலை, இசை, நாட்டியம், சித்திரம், சிற்பம் என்று எதை எடுத்து ஆராய்ந்தாலும் எல்லாம் தமிழின் சார்பாகவே இருக்கின்றன.

இந்திய மக்களின் பெயரும் பல இலட்சக்கணக்கான ஊர்களின் பெயர்களும் தமிழாகவே இருக்கின்றன என்பதைத் தகுந்த சான்றுகளுடன் சாத்தூர் சேகரன் தம் புத்தகங்களில் விளக்கி இருக்கிறார்.

தமிழும் சமஸ்கிருதமும் இந்திய நாட்டின் கலாசார மொழிகள்.

தமிழில் 'மகள்' என்ற சொல் சமஸ்கிருதத்தில் 'மக்ளா' என்று வழங்குகிறது. 'மகிளா' என்ற சொல்லே 'மகிஷா' இப்போது மாறி வழங்குகிறது.

தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டுமே - ஒரு மொழி - வேர்ச் சொற்கள் உண்டு. தமிழின் அரும்பெரும் நூல்களைத் தம் முன்னோர்கள், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர் களுக்காக சமஸ்கிருத வைப்பு அறையில் வைத்துள்ளனர்.

டாக்டர் தசரதன், புலவர் கன்னையன் போன்றோர் நான்

பொருளாளராக இருக்கும் ஆசிய இயல் நிறுவனத்தில் ஆய்வாளர்களாக இருக்கிறார்கள்.

பெருமுக்கல்லில் சிந்துவெளிக்கு முற்பட்ட கல்வெட்டுக்களை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இன்னும் பல அறிஞர்கள் பல புதிய கண்டுபிடிப்புகளைக் கண்டு அறிந்து வெளியிட்டு இருக்கிறார்கள்.

மறுக்க முடியாத இந்த ஆய்வுகளைத் தமிழ் மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் உலக மக்களுக்கும் புரியும்படி செய்ய வேண்டும் என்பது என் அவா.

குமரிக்கண்டத்தைப் பற்றியும், சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றியும் ஒரு நாள் மாநாடு நடத்தலாம் என்றார் சாத்தூர் சேகரன்.

ஒரே நாளில் குமரிக்கண்டத்தைப் பற்றியும் - சிந்துவெளிப் பற்றியும் தெளிவாக விளக்க முடியாது.

ஒரு நாள் குமரிக்கண்ட மாநாடு நடத்தலாம்; மற்றொரு நாள் சிந்துவெளி மாநாடு நடத்தலாம் என்றேன்.

என்னுடைய கருத்தைச் சாத்தூர் சேகரன் ஒப்புக்கொண்டார்.

சாத்தூர் சேகரனும் மற்ற நண்பர்களும் தமிழ் மொழியின் பழமையை நிலைநிறுத்த முயன்று வருகிறார்கள். இதற்கு இன்னும் ஆழ்ந்த ஆய்வுகள் தேவை.

இன்று தமிழ் அறிஞர்கள் மத்தியில் எளிய, இலகுவான தலைப்புகளில் தான் ஆய்வுகள் நடைபெறுகின்றன.

ஆழ்ந்த பொருள் பற்றியும் - பழங்காலத்து சரித்திரங்கள் பற்றியும் ஆய்வுகள் செய்ய வேண்டும்.

இவ்வாறு ஆய்வுகள் செய்வதற்குப் பல்மொழிப் புலமை வேண்டும்.

சீனம், ஜப்பான், லத்தீன், கிரேக்கம், அரபி, பாரசிகம் முதலிய மொழிகளில் ஞானம் இருக்க வேண்டும்.

இந்த மொழிகள் எல்லாவற்றிலும் ஆழ்ந்த புலமையுடன் நடுநிலையில் இருந்து ஆய்வுகள் செய்ய வேண்டும்.

இந்த மொழிகளை எல்லாம் படிப்பதற்கு தமிழகத்தின் பல்கலைக்கழகங்களில் வசதி இல்லை.

நமது கனவை நிலைநிறுத்துவதற்குப் பெரும் முயற்சி செய்ய வேண்டும். தொடர்ந்து முயற்சிகள் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

அந்தத் திடமான பல்மொழிகளின் ஞானத்துடன் கூடிய முயற்சியை எதிர்காலத் தமிழ் இளைஞர்களும், இந்திய மக்களும் செய்ய வேண்டும். மறைக்கப்பட்ட இந்திய வரலாற்றை வெளிக்கொணர வேண்டும்.

இந்தியாவின் பண்பாடு, நாகரிகம், ஆன்மீக ஞானம், பொருளாதார வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி எல்லாவற்றிலும் தமிழ் மக்கள்தான் முன்னோடிகள் என்பதைச் சரித்திரம் அறிவுறுத்துகிறது.

முதல் 1925 இல் சிந்துவெளி எழுத்து வடிவத்தை ஆராய்ந்தவர் எல். ஏ. வேடல் என்பவராவர். அவர் சுமேரிய எழுத்துக்கும் சிந்துவெளி எழுத்து வடிவங்களுக்கும் இடையே ஒப்புமை இருப்பதாகக் கூறினார். சுமேரிய நாகரிகமும் ஆரிய நாகரிகமும் ஒன்றெனக் கருதியவர் அவர். இதற்கு அவர் அடிப்படையாகக் கொண்ட சான்றுகள் ஐயப்பாட்டிற்கு உரியனவாக உள்ளன. (அவர்) பின்பற்றிய ஆய்வு முறைகளும் அனைவராலும் ஒப்புக் கொள்ளத் தக்கவையாக அமையவில்லை.

- க. த. திருநாவுக்கரசு.

சிந்து வெளி எழுத்து வடிவங்கள்.

தமிழகமும், ஹரப்பன் நாகரிகமும்

நடன. காசிநாதன்

இயக்குநர், அகழ்வாராய்ச்சித் துறை

இந்திய நாட்டின் மிகப் பழமையான நாகரிகம் என்பது ஹரப்பன் கால நாகரிகம் ஆகும். ஹரப்பன் கால நாகரிகம், மொஹஞ்சதாரோ மற்றும் ஹரப்பா ஆகிய இடங்களில் நிலவிய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுவதாகும். இந் நாகரிகம் நிலவிய காலம் கி.மு. 2300 முதல் கி.மு. 1750 முடிய என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்நாகரிகத்தை உருவாக்கியவர்கள் யார் என்பதில் இன்னமும் ஒரு முடிவுக்கு வந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் இந்நாகரிகம் திராவிடர்களின் முன்னோர்களைச் (Proto Dravidians) சார்ந்தது என்னும் கருத்தே மேலோங்கி நிற்கிறது. அதற்கான சான்றுகளாகக் கீழ்க்காணும் காரணங்கள் கூறப்படுகின்றன.

1. இந்நாகரிகம் நகர வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது.
2. மண்சுவர் மற்றும் செங்கற் சுவர்களால் கட்டடங்கள் காணப்படுவது.
3. எழுத்துக்கள் உருவ அமைப்பில் உள்ளன.
4. கடவுளர் உருவங்கள் காணப்படுகின்றன.
5. எழுத்துக்கள் வலப்புறமிருந்து இடப்புறம் எழுதப்பட்டுள்ளன.
6. பசுபதி மற்றும் சக்தி வழிபாடு நிலவியிருக்கிறது.
7. குதிரை பயன்படுத்தப்படவில்லை.
8. கோட்டை அமைப்பு, தானிய கிடங்குகள், நீராடும் பெரும் குளம் ஆகியவை காணப்படுகின்றன.
9. வேள்விச் சாலைகள் யாதும் இல்லை.
10. சோப்புக்கல் அல்லது மாவுக்கல் எனும் மிருதுவான கல்லில் செதுக்கப்பட்ட காளை, நீர்யானை (ரினோசரோஸ்), யானை, ஒட்டகம், நாய், மனிதன், பறவைகள் போன்ற உருவங்களோடு சில உருவ எழுத்துக்கள் அதிக அளவில் கிடைத்துள்ளன.

ஹரப்பன் நாகரிகத்தைப் புலப்படுத்தும் இடங்களாக இதுவரை 1000 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[1] மத்திய ஆசியப் பகுதியிலிருந்து, இந்தியாவில் குஜராத் மாநிலம் வரை பல இடங்கள் தெரிய வந்துள்ளன. இந்நாகரிகத்தின் தொடக்க நிலை, நல்ல வளர்ச்சியடைந்த நிலை, சார்ந்த நிலை ஆகிய அனைத்து நிலைகளின் சான்றுகளும் கிடைத்துள்ளன. குறிப்பாக உருவ எழுத்துக்கள் செதுக்கப்பெற்று, முத்திரைகள் கணிசமான அளவில் அனைத்து இடங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டுள்ளன.

இம் முத்திரைகளில் காணப்பெறும் உருவ எழுத்துக்களைப் படிக்க முயன்ற அறிஞர்களில் இங்கிலாந்து நாட்டு ஹண்டர்[2], ஸ்பெயின் நாட்டு ஹீராஸ் பாதிரியார், வேடல், மார்ஷல், ருஷ்ய நாட்டு கொரானோ, பின்லாந்து நாட்டு அஸ்கோ பர்போலோ, இந்திய நாட்டு டாக்டர் எஸ். ஆர். ராவ், தமிழ்நாட்டு ஐ. மகாதேவன், அமெரிக்க நாட்டு ஃபேர்சர்வீஸ் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேற்காணும் அறிஞர்களின் ஆய்வில் தெரிய வந்துள்ள இரண்டு முக்கிய கண்டுபிடிப்புகள்:-

1. உருவ எழுத்து வலப்பக்கமிருந்து இடப்பக்கம் எழுதப்பட்டிருப்பது.

2. இவ்வுருவங்களின் சில சொல்லையும் (Logo) சில எழுத்துத் தொகுப்பையும் (Syllables) குறிக்கின்றன என்பதாகும்.

மற்றபடி இதுவரை யாரும் இவ்வெழுத்துக்களை, அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் படித்து விடவில்லை. இவ்வெழுத்துக்களை, ர்னைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் படித்தல் வேண்டுமாயின் எகிப்தின் ரோசட்டா என்னுமிடத்தில் கிடைக்கப்பெற்றுள்ள இருமொழிக் கல்வெட்டு போன்று தெரிந்த எழுத்திலும் தெரியாத ஹரப்பான் உருவ எழுத்திலும் எழுதப் பெற்ற கல்வெட்டு கிடைத்தல் வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை இந்நாகரிகம் திராவிடர்களின் முன்னோர்களைச் சாரந்தது எனக் கூறி வந்த ஐ. மகாதேவன், அதை உறுதியாகச் சொல்ல இயலாது என்று அண்மையில் தம் கருத்தை மாற்றியுள்ளார்[3]. ஆனால் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஃபேர்சர்வீஸ் என்னும் புகழ் பெற்ற தொல்லியலாளர் இந்நாகரிகம் தமிழ் கன்னட மொழி பேசியோரைச் சேர்ந்ததாகும் என்று அறிவித்துள்ளார்.[4]

இலங்கையைச் சார்ந்த யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ள ஆனைக் கோட்டையில் அகழாய்வின் போது ஒரு செப்பு முத்திரை கிடைத்துள்ளது. இதில் ஒரு வரியில் ஹரப்பன் கால உருவ எழுத்துக்களும், மற்றொரு வரியில் பண்டைத் தமிழ் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆய்வு செய்த டாக்டர் இந்திரபாலா அவர்கள் 'கோவேந்தன்' என்ற தமிழ்ச்

சொல் இரு வகை எழுத்துக்களிலும் காணப்பெறுவதாகக் கொள்ளலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.[5] அவர் கூறியுள்ள கருத்து சரியானது எனில் இவ்விரு உருவ எழுத்துக்களும் 'அரசன்' என்னும் பொதுப் பெயரைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

தமிழ் நாட்டில் பெருங்கற்காலப் பானை ஓடுகளில் கணிசமான அளவில் குறியீடுகள் (Graffiti) ஹரப்பன் கால உருவ எழுத்துக்களையே ஒத்துள்ளன. இக்குறியீடுகள் ஹரப்பன் கால உருவ எழுத்துக்களின் வளர்ச்சியாக இருக்கலாம் என்று பி. பி. லால் தெரிவித்துள்ளார்.

அண்மையில் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், கீழ்வாலைப் பாறைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெருங்கற்கால ஓவியங்களின் அருகே சில குறியீடுகள் வரையப்பெற்றிருப்பதுவும் தெரிய வந்துள்ளன.[7] சக்கரம். மத்தளம் போன்ற குறியீடுகள் காணப்படுவதால் இவை ஹரப்பன் கால எழுத்துக்களோடு தொடர்பு கொண்டவை என்பது உறுதியாகிறது. அவ்வாறெனில் பெருங்கற்காலத் தொடக்கத்தில் ஹரப்பன் கால உருவ எழுத்துக்கள் தமிழகத்தில் இருந்தது என்பதும் அதை மக்கள் நன்கு அறிந்திருந்தனர் என்பதும் தெரிய வருகிறது.

இக்கருத்துக்கு வலியூட்டுவதாக யாப்பருங்கல உரையில் காணப்பெறும் மேற்கோள் பாடல்கள் அமைந்துள்ளன.[8]

"காணப்பட்ட உருவமெல்லாம்
மாணுக்காட்டும் வகைமைநாடி
வழுவிலோவியன் கைவினைபோல
எழுதப்படுவது உருவெழுத்தாகும்"

உருவெழுத்து பற்றிய குறிப்பு தமிழிலக்கியத்தில் மட்டுமே காணப்பெறுவது குறிப்பிடத் தக்கதாகும்.

பண்டைத் தமிழகத்தில் எழுத்துக்கள் பல்வகை உருவ எழுத்துக்களாக இருந்திருக்கின்றன என்பதும் தெரிய வருகிறது.[9]

அண்மைக் காலத்தில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் இராமநாதபுரம் மாவட்டம் அழகன் குளத்தில் (பண்டைய மருங்கூர்ப்பட்டினம்) அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ள சொக்கட்டானில் சில குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் நேர்க்கோடு ஒன்றும், மறுபக்கத்தில் சேவியினுள் உள்ள மரத்தில் நுனியில் இடப்பக்கம் படுக்கைக்கோடும், அடுத்த பக்கத்தில் அதே போன்ற உருவத்தில் வலப்பக்கத்தில் படுக்கைக்கோடும் நான்காம் பக்கம் உருவம் யாதும் இல்லாமலும் காணப்பெறுகின்றன. மேலே கூறப்பெற்ற உருவங்கள் ஹரப்பன் கால எழுத்துக்களிலும் காணப்படுகின்றன. சொக்கட்டானில் உருவங்கள் ஒன்று,

இரண்டு, மூன்று என்ற எண்களைக் குறிப்பதாக இருக்கலாம். ஆதலால் இத்தகைய ஹரப்பன் கால எழுத்துக்களும் எண்களையே குறிப்பதாகக் கருதலாம்.[10]

ஒரு சில நாட்களுக்கு முன்பாக அழகன்குளத்தில் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ள செப்பு நீள் சதுரக் காசில் காணப்பெறும் காளை உருவம் ஹரப்பன் முத்திரைகளில் செதுக்கப்பட்டுள்ள காளை உருவங்களை நினைவுபடுத்துகின்றன. இக்காளையின் வாய்ப் பகுதிக்குக் கீழே காணப்பெறும் தொட்டி போன்ற உருவமும் குறிப்பிடத்தக்கதாகும்.[11]

தமிழ்ப் பல்கலைக் கழகம் நடத்திய கொடுமணல் அகழாய்விலும் சில குறியீடுகள் பானை ஓடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[12] இவை போன்றே மதுரை மாவட்டம் மாங்குளம், கொங்கர புளியங்குளம்[13] போன்ற இடங்களில் காணப்பெறும் பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்களோடும் இலங்கையில் கிடைக்கப்பெறும் பிராமிக் கல்வெட்டுக்களோடும்[14] காணப்பெறும் சில குறியீடுகளுக்கும் ஹரப்பன் கால உருவ எழுத்துக்களுக்கும் கூட தொடர்பு இருந்திருக்கலாம்.

இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்தும் வண்ணம் அண்மைக் காலத்தில் டாக்டர் இரா. மதிவாணன் அவர்கள் தமிழகப் பாறை ஓவியங்களின் அருகில் ஹரப்பன் கால உருவ எழுத்துக்கள் சிலவற்றைக் கண்டறிந்துள்ளதாக அறிவித்துள்ளார். அளக்குடி ஆறுமுக சீதாராமன் கரூரில் ஒரு முத்திரை மோதிரத்தைக் கண்டு பிடித்துள்ளார்.[15] இதில் சில குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்குறியீடுகளுக்கும் ஹரப்பன் கால உருவ எழுத்துக்களுக்கும் தொடர்பு இருக்குமோ என்று ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். எனவே மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள அண்மைக் காலக் கண்டுபிடிப்புக்களால் தமிழகம் மற்றும் இலங்கைக்கும் ஹரப்பன் நாகரிகத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருந்திருப்பது புலனாகிறது. எதிர்காலத்தில் இது தொடர்பான சில சான்றுகள் தமிழகத்திலும் இலங்கையிலும் கிடைக்கக்கூடும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

அடிக்குறிப்புகள்

1. Kamil V. Zvelabil, 'Indus Valley to Mekgong Delta' Ed. by N. Karashima. p. 152

2. Ibid P.154 G.R. Hunter, "The Script of Harappa and Mohanjadaro and its connection with other scripts, London 1934.

3. Indus Valley to Mekong Delta, p. 187

4. Ibid, p. 164

5. Ragupathy, P. Early settlement in Jaffna, An Archaeological Survey, Madras 1987, pp. 200-202.

6. Ancient India No.16, pp 4-14

7. அனந்தமங்கலம் கிருஷ்ணமூர்த்தி கண்டுபிடித்து மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

8. Natana Kasinathan, Hero Stones in Tamil Nadu pp. 56-60

9. T.N. Subramanian, S.I.T.I., Vol. II pp 1580-81

10. Natana Kasinathan (Editor) A. Abdul Majeed (One of the authors), A Preliminary report on Alagankulam excavations.

11. Indian Express, dt. 17.4.94

12. கா. இராஜன், குறியீடும் பிராமி எழுத்தும். ஆவணம், இதழ் 4 (1994) பக்கம் 76-85

13. தமிழாசிரியர்கள் பத்தாவது கருத்தரங்கு, 'ஆய்வுக்கோவை' பக்கங்கள் 58-62

14. S. Paranavitana Inscriptions of ceylon Vol.I Introduction pp XXV - XXVI.

15. 'ஆவணம்' இதழ் 4, பக்கங்கள் 86-87

பண்பாட்டு மணம் வீசும் மண்மலர்கள்

(முனைவர் மலையமான்)

ஓர் இனத்தின் தொன்மையை உணர்ந்து கொள்வதற்கு இன்றியமையாத கூறுகள் சில உள்ளன. 1. அந்த இனத்தாருடைய மொழியில் உள்ள இலக்கியவளமும், மிகப் பழமையான இலக்கியங்களும் 2. கல்வெட்டுகளும் செப்பேடுகளும் 3. ஆட்சி புரிந்தவரின் நாணயங்கள் 4. அகழ்வாய்வுகள் ஆகியவற்றை அந்தக் கூறுகளாகக் குறிப்பிடலாம்.

தமிழிலுள்ள தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் மொழி வழித் தொன்மைக்கு வழி வகுக்கின்றன. மொகஞ்சதாரோ, ஹரப்பா கண்டுபிடிப்புகள், அகழ்வாய்வு மூலம் காலத் தொன்மைக்குச் சாலை அமைக்கின்றன.

சிந்து வெளிப் பண்பாட்டின் ஆய்வுக்கு 1826 ஆம் ஆண்டிலேயே கால்கோள் போடப்பட்டது. அந்த ஆண்டில் மேசன் (Masson) என்பவர், சிந்துநதிக் கரையிலிருந்த சில பகுதிகளைக் குறிப்பிட்டு அவை ஆய்வுக்கு உரியவை என்று கருத்து தெரிவித்தார். கன்னிங்காம் (Cunningham) என்ற அறிஞர் 1853 ஆம் ஆண்டிலும், 1873 ஆம் ஆண்டிலும் அந்த இடங்களைப் பார்வை இட்ட பிறகு 1921 இல் சர் ஜான் மார்ஷல் மொகஞ்சதாரோ பகுதியில் தன் கவனத்தைச் செலுத்தினார். அவருக்கு ஒத்துழைப்பு நல்கி, அகழ்வாய்வில் ஈடுபட்ட எர்னெஸ்டு மேக்கே (Ernenst Mackay), ஹரப்பாவின் கண்டுபிடிடபுக்குக் காரணமாக இருந்தவர் ஆர். டி. பானர்ஜி என்று கூறியுள்ளார்.

கி. பி. 150–300க்கு இடைப்பட்ட காலத்திற்குரிய புத்த தூபியை ஹரப்பாவில் அகழ்வாய்வு செய்யும் பணியில் 1922 இல் ஈடுபட்டிருந்தார் பானர்ஜி. அந்த ஸ்தூபியின் ஒரு பகுதி சுட்ட செங்கற்களாலும் மற்றொரு பகுதி சுடாத செங்கற்களாலும் அமைந்திருப்பதைக் கவனித்தார். அந்தச் சுட்ட செங்கற்கள் காலத்தால் மிகவும் பழைமையானவை என்று உணர்ந்தார். (அந்தச் செங்கற்கள் 2600 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அவை ஹரப்பா நாகரிகத்திற்கு உரியவை. அவற்றைக் கண்டுடெடுத்த புத்தத் துறவிகள் அவற்றைத் தம் பணிக்குப் பயன்படுத்திக் கொண்டனர் என்பது பின்னர் தெரிந்தது). எனவே அந்த இடத்தில் அகழ்வாய்வை அவர் தொடங்கினார்.

ஹரப்பா நிலப்பகுதி அந்தக் காலத்தில் வேறு வகையில் மக்கள் மனத்தைக் கவர்ந்திருந்தது. அது செங்கல் தோண்டி எடுக்கும் இடமாகச் சிலருக்குப் பயன்பட்டது. அங்குக் கிடைத்த பெரிய செங்கற்கள் இருப்புப் பாதையின் கீழே பரப்பப்பட்ட அடிக்கற்களாகவும் பயன்பட்டன.

சர் ஜான் மார்ஷல் மொகஞ்சதாரோ அகழ்வாய்வில் முனைப்பாக ஈடுபட்டார். அவருக்குத் துணையாக எம். எஸ். வாட்ஸ் (M.S. VATS) என்பவர், 1923-24 வரை செயல்பட்டார். அடுத்த ஆண்டில் கே. என். தீட்சித் என்பவர் அப்பணியில் துணைநின்றார். அவருக்குப் பிறகு ஆர். பி. டி. எஸ். ராம் சஹ்னி (R.B.D.S. Ram Sahni) என்பவரும் ஏர்னெஸ்டு மெக்கேவும் அகழ்வாய்வில் உறுதுணை புரிந்தனர். இதற்கிடையில் சிந்து நதிக்கரைப் பகுதிகளில் தொன்மைப் பண்பாட்டுத் தடயங்களைத் தேடும் நோக்கத்துடன் பானர்ஜி பயணம் மேற்கொண்டார்.

திரு ராம் சஹ்னியும் மேக்கேவும் ஹரப்பா அகழ்வாய்விலும் பங்கு கொண்டனர். வாட்சும் அந்த ஆய்வில் பிறகு கலந்து கொண்டார். வடக்குப் பலுச்சிஸ்தானத்தில் நல் (NAL) என்னுமிடத்தில் 1925 இல் ஹார்கிரீவ்ஸ் (Hargreaves) தொல்பொருள் ஆய்வு மேற் கொண்டார். 1927 இல் சர் ஆரல் ஸ்டீன் (Sir Aurel Stein) பெரியானோகுண்டை (Periano Gundai) ஆகிய இடங்களில் அகழ்வாய்வு நடத்தினார். இங்கும் சிந்து வெளி நாகரிகத்தின் சுவடுகள் கிடைத்தன.

1935 ஆம் ஆண்டில் இந்திய ஈரானிய ஆய்வுக்குரிய அமெரிக்கக் கல்வித்துறையினர் (American School of Indo-Iranian Studies) சானுதாரோ (Chanudaro) எனும் இடத்தில் தோண்டினார். அங்கும் சிந்து வெளி நாகரிகம் மீண்டும் வெளிப்பட்டது. இதற்குத் தலைமை ஏற்று வழிகாட்டியவர், டாக்டர் நார்மன் பிரவுன் (Dr. Norman Brown) என்பவர். இந்த இடத்திலும் மெக்கேவின் உதவி தொடர்ந்தது. 1936 ஆம் ஆண்டில் சானுதாரோ அகழ்வாய்வு அறிக்கை அவரிடமிருந்து அவனிக்குக் கிடைத்தது.

உலகப் பெரும்போர் காரணமாகவும் பொருளாதாரத் தட்டுப்பாடு காரணமாகவும், சிந்துவெளிப் பகுதியில் அகழ்வாய்வு இடைஇடையே தடைப்பட்டது. பின்பு அப்பணி தொடர்ச்சி பெற்றது. இந்தியாவின் தொல்பொருள் ஆய்வுத்துறையின் தலைமை இயக்குநராக இருந்த மார்ட்டிமர் வீலரும் (Dr. R.E. Mortimer Wheeler) சிந்து வெளி அகழ்வாய்வில் ஈடுபட்டு மகிழ்ச்சி கண்டார்.

ஜூக்கர் (Jukar) ஜாங்கர் (Jaangar) ஆகிய இடங்களில் அகழ்வாய்வுகள் நடந்தன. அங்கும், தொன்மை நாகரிகத்தின் சின்னங்கள் கிடைத்தன.

1955-57 ஆம் ஆண்டுகளில் பர்கிஸ்தானத்தில் அம்ரி (Amri) கோட்டிஜி (Kotdiji) என்ற இடங்களில் தோண்டப்பட்டன. அங்கும் சிந்துவெளி நாகரிகத்தின் கிளைகள் தலை உயர்த்தி, நலம் உரைத்தன. இராஜஸ்தானத்தில்

காளிபங்கன் எனும் பகுதியில் அகழ்வாய்வு நடந்தது. முந்திப் பிறந்த சிந்து வெளி நாகரிகம் அங்கும் கிடைத்ததை வரலாறு குறிப்பெடுத்துக் கொண்டது.

ஃபேர்செர்விஸ் (Fairservis) என்ற ஆய்வாளர் பாகிஸ்தானத்தில் அல்லாடினா (Alladina) என்ற இடத்தில் அகழ்ந்தாய்ந்தார். அந்த நாட்டிலேயே, டேல்ஸ் (Dales) என்ற ஆய்வறிஞர், பாலாகட் (Balakot) என்ற இடத்தில் ஆராய்ச்சி நடத்தினார். அந்த ஈரிடங்களிலும் பார் போற்றும் சிந்து வெளியின் சீர் தூக்கும் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பின்பு சூரஜ்பன் (Surajbhan) என்பவர் மிட்டார்தல் (Mitarthal) என்ற இடத்தில் அகழ்ந்து பார்த்தார். பிஷ்ட் (Bisht) என்ற அறிஞர் பானாவில் (Banaval) எனும் தடத்தில் ஆராய்ந்தார். டிரிஷட் வாட் (Drishadwad) என்ற ஆய்வாளர் ராகி கார்கி (Raki Kargi) என்ற இடத்தில் ஆராய்ச்சி செய்தார். இந்த இடங்களிலெல்லாம் சிந்து வெளி நாகரிகம், விரிந்து பரந்து கிடந்ததை உலகம் அறிந்து மகிழ்ந்தது. பஞ்சாபில் ரூபர் (Rupar) எனும் பகுதியிலும், டெல்லிக்கு வடக்கில் ஆலம்கிர்பூர் (Alam Girpur) எனும் பாகத்திலும் தோண்டிப் பார்த்த போது ஆண்டு மறைந்து விட்ட சிந்து வெளி நாகரிகம் அங்கும் ஊன்றி இருந்ததை ஞாலம் உணர்ந்தது.

அகழ்வாய்வு நடைபெற்ற பின் வரும் இடங்கள் சிந்து வெளி நாகரிகம் என்ற தொன்மைப் பண்பாட்டின் மணம் வீசும் மண் மலர்களாக, வரலாற்றுத் தோட்டத்தில் வீற்றிருக்கின்றன. மொகஞ்சதாரோ, ஹரப்பா, சானுதாரோ, நல், கள்ளி, ஜூக்கர், ஜாங்கர், அம்ரி, காளிபங்கன், கோட்டிஜி, லோகன்ஜதாரோ நின்டோவர், சட்கஜென்டார், ஜூடெய்ப்ஜதாரோ, நௌஷாரோ, முசக்கல், நுகாட்டு, பாலகட், அல்லாடினா, ரூபர், பானவலி, லோத்தால், ராகிகார்கி, அலம்கிர்பூர், டெசால்பூர், சர் கோடாடு, ரங்பூர், ரோஜிடி, சுக்கூர், தோலாவீரா முதலிய இடங்களில் சிந்துவெளி நாகரிகம் தற்போது ஆய்வுலகில் வெளிப்பட்டிருக்கிறது. இவை தவிர மேலும் பல இடங்களில் இந்தத் தொன்மைப் பண்பாடு மறைந்து கொண்டிருக்கலாம் என்று சிலர் எண்ணுகிறார்கள்.

தென்னிந்தியாவிலும், சிந்து வெளித்தடங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. கீழ்வாலை, பனைமலை, பெருமுக்கல் முதலிய இடங்களில் நடந்த அகழ்வாய்வுகளில் கிடைத்த தொல்பொருள்கள் சிந்து வெளியினருக்கும்; பழந்தமிழருக்கும் இடையில் முன்பு வழங்கிவந்த உறவின் செழுமையை உணர்த்துகின்றன.

ஆந்திராவில் சித்தூர் மாவட்டத்திலுள்ள குப்பம் என்ற ஊரில் 15.7.1993 அன்று நடைபெற்ற 21ஆம் திராவிட மொழியியல் பற்றிய அனைத்திந்திய மாநாட்டில், சிந்துவெளி நாகரிகத்திற்கும், திராவிட நாகரிகத்திற்கும் இடையே

இருந்த உறவு அகழ்வாய்வு, மொழியியல், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் உறுதிப்பட்டிருக்கிறது என்று வலியுறுத்தப்பட்டது.

உலகத்தின் முதல் பழம்பெரு நாகரிகங்கள் நான்கு என்று கூறப்படுகிறது. எகிப்தில் நைல் நதி பள்ளத்தாக்கில் உருவான நாகரிகம் டைகிரீஸ், யூப்ரடீஸ், ஆற்றிடையே தோன்றிய மொசபடோமிய நாகரிகம், சீனாவில் ரிவாங்ஹோ பள்ளத்தாக்கில் தோன்றிய நாகரிகம் என்ற மூன்றுடன் ஒருங்கு வைத்துப் போற்றப்படுவது சிந்துவெளி நாகரிகம்.

நாம், அந்தத் தொல் பெரும் நாகரிகத்தின் நல்வழிப் பரம்பரையினர் என்பதை எண்ணும் போது மகிழ்ச்சி பொங்குகிறது. இதயம் விம்முகிறது. கண்களில் இன்பக் கண்ணீர் வழிகிறது.

அயலார் பார்வையில் சிந்துவெளி நாகரிகம்

(முனைவர் சரளா இராசகோபாலன்)

மறைவாக நமக்குள்ளே பேசுவதில் பயன் இல்லை, தரமான நிலையை அயல் நாட்டார் போற்றுதல் வேண்டும் என்று புதுமைக் கவிஞர் கூறினார். இது எல்லா நிலைக்கும் பொருந்தும். சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி நாமே நமக்குள் பேசிக் கொள்வதை விட, அயல் நாட்டார் அதைப் பற்றிக் கூறுவதை அறிந்து கொள்வது நலம் தரும்.

"என்சைக்குளோபீடியா அமெரிக்கானா" என்பது உலகப் புகழ் பெற்ற கலைக் கலைஞ்சியம். அது சிந்து வெளி நாகரிகம் பற்றிப் பின் வருமாறு கூறுகிறது. "சிந்து வெளி நாகரிகம் சுமார் கி. மு. 4000 ஆம் ஆண்டில் தொடங்கியது. இது சிற்றூர் (கிராமக்) குடியேற்றமாக முதலில் அமைந்தது. இது செம்பு க் காலத்தின் தொடக்க நிலைக்கு உரியது. சிற்றூர் நாகரிகம் பின்னர் நகர நாகரிகமாக மாறியது. நகரங்கள் கோட்டைகளைக் கட்டிக் கொண்டன" என்று அந்தக் கலைக்களஞ்சியம் அறிவிக்கிறது.

"காம்ப்டன் என்சைக்ளோபிடியா" கூறுவது மொகஞ்சதாரோ நாகரிகம் (நகர வாழ்க்கை) கி. மு. 2500 க்கும் கி. மு. 1750க்கும் உட்பட்டது. முதல் குடியேற்றம், சிந்துநதி கடலுடன் கலக்குமிடத்தில் ஏற்பட்டது. பிறகு அதுவளர்ச்சி பெற்று வடக்குப்புறத்திலும் கிழக்குத் திசையிலும் பரவிற்று" என்று கூறுகிறது.

டாக்டர் ஏர்னஸ்ட் மேக்கே என்பவர், சர் ஜான் மார்ஷலுடன் சிந்து வெளி அகழ்வாய்வில் பங்கு ஏற்றவர். இவர் "முற்காலத்திய சிந்துவெளி நாகரிகம்" (Early Indus Civilization) என்ற நூலை எழுதியவர். அதில் "மொகஞ்சதாரோவிலும் ஹரப்பாவிலும் வாழ்ந்த மக்கள் ஆரிய இனத்தவருக்கு முற்பட்டவர்கள். ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு, ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முன்பு - அந்த மக்களுடைய நகரங்கள் செழிப்புடன் இருந்தன" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வி. கார்டன் சைல்டு (V. Gorden Childe) என்ற ஆய்வாளர், "கி. மு. 3000த்தில் இந்தியா, எகிப்துக்கும் பாபிலோனியையுக்கும் சமமாக இருந்தது. அது தனிப்பட்ட பிறரைச் சாராத, தனக்கே உரிய நாகரிகத்தைப் பெற்றிருந்தது. மற்ற இரண்டையும் விட தொழில் நுணுக்கத்துறையில் மேம்பாடு கொண்டிருந்தது. அது இந்திய மண்ணிலேயே வேர் ஊன்றியிருந்தது. குறிப்பிட்ட சூழலுக்குள், மனிதர் ஒத்து வாழ்ந்ததை அது தெரிவிப்பதாக உள்ளது. இந்தியாவின் தற்காலப் பண்பாட்டிற்கு அது அடித்தளமாக அமைந்தது" என்று அறிவித்திருக்கிறார்.

சர் அலெக்சாண்டர் கன்னிங்கேம் (Sir Alexander Cunningham) என்ற சிந்து வெளி ஆராய்ச்சியாளர் "சிந்துவெளி எழுத்துமுறையிலிருந்தே இந்தியாவின் பிராமி எழுத்துமுறை உருவானது" என்று கூறி இருக்கிறார். அவருடைய முடிவை, பேரா. ஸ்டீபன் லாங்டன் (Prof. Stepen Langdon) என்பவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

"அந்த எழுத்துமுறை தற்கால மொழிகள் ஒன்றுடன் உறவு கொண்டிருக்கும் என்றால் அது திராவிட மொழியாகவே இருக்கலாம்" என்று என்சைக்ளோ பிரிட்டானிக்கா அறிவிக்கிறது. சிந்து வெளி எழுத்து முறையைப்படிப்பதற்குப் பல ஆண்டுகள் முயற்சி நடந்தது. இத்துறையில் ரஷிய குழு ஒன்று ஒய். நாரோசோவ் (Y. Knorozon) தலைமையில் முயற்சி செய்தது. ஸ்காந்திநேவியக் குழு, பர்போலா (Parpola) என்ற அறிஞரின் வழிகாட்டலில் ஈடுபட்டது. இந்த எழுத்துமுறை பழந்தமிழை ஒத்த திராவிடமொழிக்கு உரியது என்று அறிவித்து, அதைப் படித்துவிட்டதாக ஸ்காந்திநேவியக்குழு உரிமை கொண்டாடுகிறது. ஆனால், இதைச் சில அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அதே கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

"மொகஞ்சதாரோவில் கிடைத்த விதானம் மூடப்பட்ட மாட்டு வண்டி, படகு, பொம்மைகள் ஆகியவை இன்று வரை இந்தியாவில் மாறவில்லை. வளையல் பற்றிய ஆசை, மூக்குத்தி வகைகள் ஆகியவை இந்தியருக்கு உரியவை. சிந்து வெளியிலிருந்த மதம், பிற்கால இந்தியாவின் தனித்தன்மைக்குரியன வற்றை அறிவிப்பதாக உள்ளது. காளை, புலி, யானை ஆகிய இரண்டின் கலப்புத் தோற்ற விலங்கு, தவம் செய் கடவுள், மரம், ஆவி, ஆண்குறி வடிவம் கொண்ட- சிவனைக் குறியீடாகக் காட்டும் சிவலிங்கம் ஆகிய இவை பிற்கால இந்திய நாகரிகத்தின் வழி முறையைத் தெரிவிப்பனவாக உள்ளன" என்று அந்தப் பிரிட்டானியா கலைக் களஞ்சியம் கூறுகிறது.

"சிந்து வெளி நாகரிகத்திற்குரிய நகரங்கள் ஒரே விதமான அமைப்பைக் கொண்டிருந்தன என்பதை அகழ்வாய்வுகள் அறிவிக்கின்றன. சிந்துவெளியிலுள்ள மொகஞ்சதாரோ, மேற்கு பஞ்சாபிலுள்ள ஹரப்பா, ராஜஸ்தானத்திலுள்ள காளிபங்கன், குஜராத்திலுள்ள லோத்தால் ஆகிய நகரங்கள் (நீண்ட இடைவெளிப் பகுதிகளில் அமைந்திருந்த போதிலும்) ஒரே மாதிரியான நகரமைப்புத் திட்டத்துடன் இருந்தன என்பதை உய்த்துணரமுடிகிறது" என்று அமெரிக்கக் கலைக் களஞ்சியம் அறிவிக்கிறது.

"சிந்து வெளியில் வாழ்ந்தவர்கள், மேற்கு ஆசிய மக்களுடன் வளமான வாணிகம் நடத்திவந்தனர். மெசபடோமியா முத்திரைகளை ஒத்த

முத்திரைகள் மொகஞ்சதாரோவில் கிட்டியிருப்பது, இதைச் சுட்டிக் காட்டுகிறது" என்று அதே கலைக்களஞ்சியம் தெரிவித்திருக்கிறது.

"பல்விதத் தொழில் பொருள்களில் சிந்து வெளியினர் பயன்படுத்தி வந்த சில கற்கள், உலோகங்கள் ஆகியவை, அந்த மக்கள் தென்னிந்தியா, மைய ஆசியா, பெர்சியா ஆகிய நாடுகளிலும் வணிகம் நடத்தினார்கள், என்பதைத் தெரிவிக்கிறது" என்று உலகப் புத்தகக் கலைக்களஞ்சியம் (World Book Encyclopaedia) எடுத்துரைக்கிறது.

"இயற்கை ஏற்படுத்திய தொல்லைகளால், சிந்துவெளி மக்களின் பலம் குறைந்திருக்கலாம். மேற்கிலும் வடக்கிலும் உள்ள மலைகளிலிருந்து வந்த நாசக்காரர்களின் தாக்குதலிருந்து அவர்களால் தங்களைக் காத்துக் கொள்ள முடியாமல் போயிருக்கும்" என்று அதே உலகப் புத்தகக் கலைக் களஞ்சியம் கருதுகிறது.

மொகஞ்சதாரோ, ஹாரப்பா, சானுதாரோ ஆகிய இடங்களில் நிகழ்ந்த அகழ்வாய்வில் பங்கு கொண்ட ஏர்னெஸ்ட் மேக்கே, தான் எழுதிய முந்தைய சிந்து நாகரிகம் (Early Indus Civilisation) என்ற நூலில் மொகஞ்சதாரோவின் இறுதிக் காலத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கிறார். "1925 மொகஞ்சதாரோவில் நடத்திய அகழ்வாய்வின் போது பெரிய அறை ஒன்றில் மனித எலும்புக் கூடுகளின் தொகுதிகள் காணப்பட்டன. ஒரு தெருவில் 6 எலும்புக் கூடுகள் ஓரிடத்தில் கிடைத்தன. பெண்கள், சிறுவர்கள் ஆகியோரின் சடலங்கள், இயல்புக்கு மாறான முறையில் திரிந்து காணப்பட்டன. அங்கிருந்த மக்கள் கொடுந் துன்பத்திற்குள்ளாகி இறந்திருக்கலாம். மொகஞ்சதாரோ பிற்காலக் கட்டத்தில் பகைவர்களால் தாக்கப்பட்டிருக்கலாம் என்பது உறுதியாகத் தெரிகிறது" என்று உறுதிப்படுத்தியிருக்கிறார்.

சிந்து வெளி நாகரிகத்தின் சிறப்பையும், அது தமிழுடன் கொண்டுள்ள உறவையும், உணர்ந்து ஈ.ராஸ் பாதிரியார் "நான் ஸ்பெயின் நாட்டு திராவிடன்" என்று பெருமிதத்துடன் 1942 ஆம் ஆண்டிலேயே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூறினார். போலந்து நாட்டைச் சேர்ந்த ஜெர்சிதார் கோலிஸ்கி என்ற ஆய்வாளர், சிந்து வெளி நாகரிகம், பண்பாடு ஆகியவற்றில் திராவிட நாகரிகப் பண்பாட்டுக் கூறுகள் இருக்கக் கண்டேன், அதன் பிறகே, தமிழைப் படிக்கத் தொடங்கினேன்" என்று கூறியுள்ளார்.

டென்மார்க்கைச் சேர்ந்த ஸ்காந்திநேவியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஏசியன் ஸ்டடீஸ் என்ற ஆய்வு நிறுவனம், சிந்து வெளி ஆய்வுக்காகப் புதிய முறையில் அகராதி ஒன்றைத் தயாரித்துள்ளது.

அயல் நாட்டார் அறிவித்துள்ள கருத்துக்களைக் கொண்டு பின்வரும் முடிவுகளை நாம் கொள்ளலாம்.

1. சிந்து வெளி நாகரிகம் வரலாற்றுச் சிறப்புக்குரிய தொன்மை உடையது, தனித்தன்மை கொண்டது.

2. சிந்து வெளி எழுத்து முறையிலிருந்து பிராமி எழுத்து முறை உருவானது. அதிலிருந்து இன்றுள்ள எல்லா இந்திய மொழிகளும் தம் எழுத்தை உருவாக்கிக் கொண்டன.

3. சிந்துவெளி எழுத்துமுறை பழந்தமிழினத்திற்கு உரியது.

4. சிந்துவெளியினர் மேற்கொண்டிருந்த சமயத்திலிருந்து பிற்கால இந்தியச் சமயம் தோற்றம் பெற்றது.

5. சிந்து வெளி மக்கள் மொசபடோமிய மக்களுடன் வாணிபம் செய்தனர். தென்னிந்திய (தமிழ்) மக்களுடனும் வணிகம் நடத்திவந்தனர்.

6. இயற்கையின் சீற்றத்தாலும் பகைவரின் தாக்குதலாலும் சிந்து வெளி நாகரிகம் அழிவு பெற்றது.

7. சிந்து வெளி நாகரிகம் திராவிட (தமிழ்) மக்களுக்குரியது என்ற காரணத்தால், அயல் நாட்டு அறிஞர்கள் தமிழைப் போற்றும் மனப்பான்மை பெற்றுள்ளனர்.

சிந்துவெளி எழுத்து தமிழே – எவரும் படிக்கலாம்

பேராசிரியர் முனைவர் இரா. மதிவாணன்

1. படிக்க உதவிய முன்னூக்கம்

எல்சிங்கி பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் அசுகோ பர்போலா[1] அவர்கள் சிந்துவெளி எழுத்து திராவிட மொழியைச் சார்ந்தது என்பதற்குக் கீழ்க்கண்ட காரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

1. சிந்துவெளி எழுத்து கி. மு. ஈராயிரத்திற்கும் முற்பட்டது. வேதங்களில் பழமையான இருக்கு வேதம் கி. மு. ஆயிரத்திற்கு முற்பட்டது என்று வரையறை செய்யப்பட்டிருக்கிறது. ஆதலின், சிந்துவெளி எழுத்து ஆரியர் வருகைக்கு முற்பட்ட திராவிட மொழியே என்பதில் ஐயமில்லை.

2. பஞ்சாபி மற்றும் காபூல் பள்ளத்தாக்கில் தொகுக்கப்பட்ட வேத மந்திரங்களிலுள்ள இலக்கண அமைதிகளும் சொல்லாட்சிகளும் அப்பகுதியில் பேசப்பட்ட திராவிட மொழிச் சொற்களைக் கொண்டிருக்கின்றன.

3. இப்பகுதியில் பலுச்சித்தானத்தில் பிராகுவி என்னும் திராவிடமொழி இன்றும் பேசப்பட்டு வருகிறது.

4. சிந்துவெளி மக்களிடையே குதிரை இருந்ததில்லை. குதிரை ஆரியர்களுடைய படையில் பெரும்பங்கு வகித்தது. நாட்டுப்புறக் கருத்தரங்கில் ஆய்வுக்கு ஆராய்ச்சிக் கட்டுரை படித்த புகழ் பெற்ற தொல்லியல் ஆய்வாளர் ஒருவர் சிந்து வெளியில் கிடைத்த விலங்குகளின் எலும்புகளை ஆராய்ந்த போது அவற்றுள் குதிரை எலும்பு ஒன்று கூடக் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

சிந்துவெளி எழுத்தைப் படித்து அறிய உதவும் பாவாணரின் சொற்பிறப்பியல நெறிமுறைகள் :

மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்[2] அவர்கள் உலக மொழிகளுக்கெல்லாம் தமிழ் தாய் ஆகும் என்னும் கொள்கையுடையவர். குறிப்பாகச் சிந்து வெளியில் பேசிய தமிழ் உட்பட அனைத்துத் திராவிட மொழிகளும் தமிழிலிருந்து கிளைத்தவை என்பதற்குப் பல்வேறு சொற் பிறப்பு நெறிகளை வகுத்துக் காட்டியவர். சிந்துவெளி எழுத்தை இது வரை எவரும் படிக்க முடியவில்லை. அதைப் படிப்பதற்கு ஏதேனும்

வழிமுறைகளைத் தாங்கள் சொல்ல முடியுமா? என்று வினவியபோது பாவாணர் பின்வருமாறு மறுமொழி அளித்தார்.

"சிந்துவெளி எழுத்து திராவிடர்களுடையது என்று சோவியத்து மற்றும் பின்னிது அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஆயின் சிந்துவெளி மொழி கருத்தெழுத்து (Ideograph) என்பதையும் வலமிருந்து இடமாக எழுதப்பட்டது என்பதையும் ஏற்கமுடியாது தலைக்கழக மற்றும் இடைக்கழகக் காலத்திலேயே அதாவது சிந்துவெளி நாகரிக காலத்திற்கு வெகு முன்பே தமிழ் படவெழுத்து வடிவம் பெற்ற மொழியாக இருந்ததால் சிந்து வெளி எழுத்து தெளிவான வடிவம் கொண்டதாக இருக்கும். சிந்துவெளி எழுத்தை ஒட்டிய இந்திய மொழிகளின் வரி வடிவங்களும், பெரும்பாலான மேலையாசிய மொழிக்குரிய வரிவடிவங்களும் காலப் போக்கில் சில மாறுதல்களுடன் வளர்ந்து வந்திருப்பதால் சிந்துவெளி எழுத்து இடமிருந்து வலமாகத் தான் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

சிந்துவெளி எழுத்தைப் படிக்க முயலுபவர் உலகத் தொன் மொழிகளின் வரிவடிவங்களை ஒப்பு நோக்கியும் தமிழின் இலக்கணக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டும் தமிழுக்குரிய சொற்பிறப்பு நெறிமுறைகளைத் தேவைப்படும் இடங்களில் பொருத்திப் பார்த்தும் சிந்து வெளி எழுத்தைப் படிக்க முயன்றால் வெற்றி பெற வாய்ப்பு உண்டு. இது வரை சிந்துவெளி எழுத்தைப் படிக்க முயன்றவர்கள் எவரும் தமிழ் இலக்கணக் கட்டமைப்பிலும் சொற்பிறப்பு நெறிமுறைகளிலும் கருத்துச் செலுத்தியவராக எனக்குத் தோன்றவில்லை. நாமும் அப்பணியை மேற்கொண்டு முயன்று பார்க்கலாம். ஆயின், நம் முன்னுள்ள மிகப்பெரும் பணியான அகர முதலிப் பணிக்கு அது தடைக்கல் ஆவதோடு நம்மை அந்த ஆராய்ச்சி திசை மாற்றிவிடும். நம் அகர முதலிப் பணி முடிந்த பிறகு அதில் கருத்து செலுத்தலாம். ஆயின், தமிழ் இலக்கணக் கட்டமைப்பும் சொற்பிறப்பு நெறிமுறைகளும் சிந்து வெளி எழுத்தைப் படிப்பதற்குப் பெரிதும் துணைபுரியும் என்பதை மறக்க வேண்டாம்.

பாவாணர் கூறிய மேற்கண்ட மணிமொழிகள் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. அவ்வப்பொழுது அவர் கூறிய இலக்கணக் கட்டமைப்புகள் எவை? சிந்துவெளி எழுத்தைப் படிக்க எந்தெந்தச் சொற்பிறப்பு நெறிமுறைகள் பயன்படும் என்பதைப் படிப்படியாகக் கேட்டுக் குறிப்பெடுத்து வைத்திருந்தேன். அவற்றைப் பயன்படுத்தி சிந்துவெளி எழுத்துக்களைப் படிக்க முடியுமா என்று முயன்று பார்த்தேன். என் முதல் முயற்சி தொடக்கத்திலேயே சிறிய நம்பிக்கை ஒளியைத் தோற்றுவித்து. படிப்படியாகப் பல சிக்கல்களும் ஐயப்பாடுகளும் தோன்றின. சில இடங்களில் அறவே மேற்கொண்டு படிக்க முடியாத நிலைகளும் தோன்றின. அப்பொழுது அரபி மொழி, பஞ்சாபி மொழி, மராத்தி மொழி, சீன மொழி ஆகியவற்றின் வரி வடிவம், சொல் அமைப்புகள் ஆகியவற்றை ஊன்றிக் கவனித்தபோது சிந்துவெளி மொழியின் வரி வடிவங்கள் சொற்றிரிபுகள் ஆகியவை தெளிவாயின. சிந்துவெளி மொழியில் ஒரே எழுத்து, பயன்படும்

இடத்திற்கு ஏற்ப வரி வடிவம் வேறுபடுவதும், ஒவ்வொரு மெய்யெழுத்துக்கும் உயிரெழுத்து சேரும்போது வரி வடிவங்கள் வேறு படுவதும் ஆகிய சிக்கல்கள் எதனைப் படிப்பவர் எவர்க்கும் பெரும் குழப்பதை விளைவிப்பதாக இருந்தன. எனினும், இடையறாத முயற்சியினால், சிந்துவெளி முத்திரைகளில் பலவும் முற்றிலும் தமிழாகவே இருப்பதைக் கண்டு வியந்தேன். சிந்துவெளி எழுத்தில் தமிழல்லாத வேற்றுமொழி எழுத்துகள் ஒன்றுகூட இல்லை. சான்றாக ஜ. ஸ. ஹ போன்றவை அறவே காணப்படவில்லை. இவை சிந்துவெளி மொழி எழுத்தில் இருந்திருந்தால் அவை உயிரோடு கூடி உயிர்மெய்யாக வடிவடைந்தற்கான ஜி. ஜே. ஜூ போன்ற உயிர்மெய் எழுத்துக்கள் ஆங்காங்கு ஆளப்பட்டிருக்கும். சிந்துவெளி எழுத்தைப் படித்தறிய உதவிய பாவாணரின் நெறிமுறைகளைக் கீழே தந்துள்ளேன்.

1. தமிழ் இயன் மொழியாகவும் ஞாலத் தொன் மொழியாகவும் இருப்பதனால் சிந்துவெ்ளி மொழியிலுள்ள அடிப்படைச் சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்களாகவே இருக்க வேண்டும்.

2. தமிழில் உயிரெழுத்து, மொழி முதலில் வருமேயன்றி, சொல்லின் இடையிலும் கடையிலும் உயிரெழுத்துக்குரிய வரிவடிவத்திலேயே வராது. சிந்துவெளி மொழியிலும் உயிரெழுத்துக்கள் அவற்றிற்குரிய அதே வரி வடிவத்தில் மொழி இடையிலும், மொழி இறுதியிலும் பெரும் பாலும் வரவில்லை.

3. தமிழ்ச் சொற்களில் மொழி இறுதியில் வரும் மெய்யெழுத்தோடு இ. உ. ஐ. என்னும் மூன்று உயிரெழுத்துக்களே மிகுதியாகச் சேர்ந்து வரும். அ, ஆ என்னும் உயிரெழுத்துகள் ஒரு சில இடங்களில் சொல் இறுதியாக வரும். இந்நிலை சிந்துவெளித் தமிழிலும் உள்ளது.

4. ய, ர, ல, வ, ழ, ள (ங), ஞ, ண, ந, ன என்னும் மெய்யெழுத்துக்கள் தமிழ்ச் சொற்களில் இறுதி எழுத்தாக வரும் சிந்துவெளி எழுத்திலும் இவை மொழி இறுதியாக வருகின்றன.

5. இவற்றுள் ந, ம, வ, ய என்னும் நான்கெழுத்துகள் தவிர ஏனையவை மொழி முதலில் வருவதேயில்லை. க்க, ச்ச, த்த என்னும் உடனிலை மெய்ம்மயக்கத்திலும் வேற்று நிலை மெய்மயக்கத்திலும் எழுத்தமைதிகள் தமிழிலுள்ளது போன்றே சிந்துவெளி மொழியிலும் காணப்படுகின்றன. தமிழில் உயிரெழுத்தின் வரிவடிவமும் அதன் அடையாளமாக மெய்யெழுத்தை உயிர்மெய்யெழுத்தாக்கும் போது சேர்க்கும் அடையாளக் குறியும் வெவ்வேறாக இருப்பது போல் சிந்துவெளி எழுத்திலும் வெவ்வேறாக இருக்கின்றன.

6. இரு குறில் சேர்ந்து ஒரு நெடிலாகும் என்னும் தமிழ் இலக்கணக் கட்டமைப்பின்படி சிந்துவெளி மொழியிலும் மொழி முதலில் உயிர் நெடிலுக்கு அடையாளமாக இரண்டு உயிர்க் குறில்கள் அடுத்தடுத்து எழுதப்படுகின்றன.

7. ஈழத்துத் தமிழில் வந்தான் என்பதை வந்து அவன் என்றும், கேட்டேன் என்பதை, கேட்ட நான் என்றும் (நீ) உண்டனை என்பதை உண்ட நீ என்றும் பால் இட ஈற்றுச் சொற்கள் வினைமுற்றோடு அல்லது பெயரோடு தனியாகப் புணர்ந்து குறிப்பது போல் சிந்துவெளி மொழியிலும் இயற்பெயர்ச் சொற்களின் இறுதியில் 'அன்' என்னும் ஆண்பாலீறு 'அன்' என்று தனியாகவே எழுதப்பட்டிருக்கிறது.

8. தமிழ்ச் சொற்களில் ஓரசைச் சொற்கள் மிகுதியாக உள்ளன. சிந்துவெளி மொழியிலும் இதே நிலை காணப்படுகிறது.

9. ஐகாரம், ஔகாரம் கூட்டு உயிரெழுத்துக்கள் என்பதால் ஐ அல்லது ஔ என்னும் உயிரெழுத்தை முதலாகக் கொண்ட வினைச் சொற்கள் தமிழில் அறவே இல்லை. ஆதலின், அவற்றை வினை முதலாகக் கொண்ட பெயர்ச் சொற்கள் அருகி அல்லது வாரா. சிந்துவெளி மொழியில் இந்நிலையே காணப்படுகிறது.

தமிழிலும் திராவிட மொழியிலும் காணப்படாத சில சொல்லாட்சிகள் சிந்துவெளி மொழியிலும் உள்ளன. இவை திசைச் சொற்களாக இருக்கலாம். எனினும் அவை முற்றிலும் தமிழ்ச் சொற்களே என்பதை அவற்றின் வேர்ச் சொற்களை ஆராய்ந்து, எந்தெந்தச் சொற்பிறப்பு நெறிகளுக்கு ஏற்ப அவை அந்த வடிவத்தை அடைந்துள்ளன என்று மேலும் நிறுவலாம். சான்றாகச் சிந்துவெளி மொழியில் 'இய' என்பது தலைவன் அல்லது பெரியோன் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. இது அரசனையும் கடவுளையும் இறைவன் என்று குறிப்பிடும் செந்தமிழ்ச் சொல் போன்றது. 'இயவன்' என்பதற்கு இயங்கச் செய்பவன், வழி நடத்துபவன் என்று பொருள். இந்தச் சொல் தலைவன் என்ற பொருளில் சிந்துவெளி மொழியிலும் தந்தை என்ற பொருளில் பஞ்சாபி மொழியிலும் வழங்கி வருவதைக் காணலாம். தொல்காப்பியத்தில் கெடவரல் என்ற சொல் விளையாட்டு என்று பொருள்படுகிறது. 'கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு" என்று தொல்காப்பியம் கூறுகிறது.

இந்தி மொழியில் விளையாட்டைக் குறிக்க 'கேல்' என்னும் சொல்லும் பஞ்சாபி மொழியில் 'கேட்' (Ked) என்னும் சொல்லும், வழங்குகின்றன. சிந்து வெளி மொழியிலும் இதைப்போன்ற சொல் விளையாட்டைக் குறிக்க வழங்கியிருக்கலாம்.

வயிற்றைத் தெலுங்கு மொழியில் பொட்ட என்றும், இந்தியில் பேட் என்றும் வழங்குகின்றனர். பொள் – துளை உள்ளது, பொய் – துளை இல்லாதது (உண்மை இல்லாதது), பேட், பொட்ட என்னும் சொற்கள் தமிழிலிருந்தே சொற்பிறப்பு நெறிமுறைகளையொட்டி திரிந்து இருப்பதைக் காணலாம். இங்கனம் சிந்துவெளி மொழியில் காணப்படும் புதுமையான சொல்லாட்சிகள் செந்தமிழ் வேர்ச்சொல் மூலம் வழி ஆராய்ந்தால் அவற்றின் பொருள் விளங்குவதோடு, சிந்துவெளியில் மட்டும் அது எத்தகைய திரிபைப் பெற்றுத் திசைச் சொல்லாக விளங்கியிருக்கிறது என்பதையும் அறியலாம். சிந்துவெளி மொழியில் 'உன்னன்' என்னும் மற்றொரு திசைச் சொல் உயர்ந்தவன், மேலோன் என்னும் பொருளில் காணப்படுகிறது. மலையாளத்தில் செல்லக்குழந்தையை 'உன்னி' என்று அழைப்பதை இதனோடு ஒப்பிட்டுக் கொள்ளலாம்.

அச்சன் என்ற சொல் சிந்துவெளி முத்திரையில் மிகுதியாகக் காணப்படுகிறது. ஆதலின் சேரநாட்டுச் சொல்லாட்சிகளும் தென்பாண்டிச் சொல்லாட்சிகளும் சிந்துவெளித் தமிழில் நிலவியதற்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. சிந்துவெளி மீனாடு4 என்று பெயர் பெற்றிருந்ததாலும் – மேலக்கரை – சேரநாட்டு வாணிகத் தொடர்பிருந்ததாலும் சிந்துவெளி மொழியில் காணப்படும் தமிழ்ச் சொற்கள் தென்பாண்டி மற்றும் சேரநாட்டு சொல்லாட்சிகளைக் கொண்டுள்ளது.

சிந்துவெளி முத்திரைகளில் ஓரெழுத்துச் சொல், ஈரெழுத்துச் சொல், மூவெழுத்துச் சொற்களை முதலில் பட்டியலிட்டுக் கொண்டு, அவற்றை மட்டும் படிக்க முற்பட வேண்டும். மொழி முதல், மொழியிறுதி எழுத்துக்களையும் உடனிலை வேற்றுநிலை மெய்ம்மயக்கங்களையும் வரையறைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பாக வடமேற்கு இந்திய மொழிகளில் காணப்படும் தமிழ்ச்சொற்கள் பலவும் சிந்துவெளியில் பேசப்பட்ட சொற்களே. நோக்கு (பார்) இந்தியில் 'தேக்' என வழங்குகிறது. எனவே நோக்கு என்னும் வினைச் சொல் சிந்துவெளியில் வழங்கியிருக்கலாம்.

2. எழுத்துக்குள் உருவங்கள்

உலகில் பேசப்படும் 3000 மொழிகளும் 196 வரி வடிவங்களில் எழுதப்படுகின்றன. உலக மொழிகளின் வரி வடிவங்கள் அனைத்தும் படவெழுத்துகளிலிருந்து உருவானவை. தமிழில் பட எழுத்துகள் இருந்தன என்பதற்கும் அவையே கருத்தெழுத்தாகவும் அசையெழுத்தாகவும் இன்றைய வரியெழுத்தாகவும் வளர்ந்தன என்பதற்கும் இலக்கணச் சான்றுகளும் கல்வெட்டுச் சான்றுகளும் கிடைத்துள்ளன.

மாவுக்கல், செப்புத்தகடு, மரம், ஓலை ஆகியவற்றில் செதுக்கியும் குழித்தும், பள்ளம் பள்ளமாகக் குத்தியும் அழுந்தக் கீறியும் எழுதும் எழுத்தமைப்பிற்கு 'கண்ணெழுத்து' என்று பெயர் வழங்கிற்று. (கண் - துளை, ஓட்டை) எழுத்துக்களையும் உருவங்களையும் புடைப்புச் சிற்ப வடிவில் செதுக்கி (பள்ளமும் மேடுமாக) எழுதுவதற்கு பயன்பட்ட மாவுக்கல்லுக்கு 'எழுதுக்கல்' என்றே பழங்காலத்தில் பெயரிருந்தது. சிந்துவெளி முத்திரைகள் பெரும்பாலும் மாவுக்கல்லால் செய்யப்பட்டவை.

தமிழ், தொடக்க காலத்தில் சீன, எகிப்து மொழிகளைப் போல் படவெழுத்துகளிலெ எழுதப்பட்டது என்பதற்கு 'எழுத்து' என்னும் சொல்லே சான்றாகின்றது. 'எழுதுதல்' பழங்காலத்தில் ஓவியம் வரைந்ததையே குறித்தது.

'கடவுள் எழுதவோர் கல்தாராளெனின்' என்னும் சிலப்பதிகார வரியில் 'எழுதுதல்' ஓவியம் வரைதலையே குறித்தது. ஓவியந் தீட்டிய மண்டபம் 'எழுத்து நிலை மண்டபம்' எனப்பட்டது. பாறை, சுவர், துணி ஆகியவற்றின் மீது ஓவியம் வரைந்த கோலெழுத்துக் காலம் முந்தியது. உருவங்களைச் செதுக்கியும் கீறியும் வரைந்த கண்ணெழுத்துக் காலம் பிந்தியது. சிந்துவெளி நாகரிக அழிபாடுகளில் கண்ணெழுத்துக்கள் கிடைக்கின்றன. ஓவிய உருவெழுத்துகள் கிடைக்கவில்லை. பன்னிரண்டு உருவங்கள் மட்டும் படவெழுத்து முறையின் எச்சங்களாகச் சிந்துவெளி எழுத்துகளில் நிலைத்துள்ளன. இதிலிருந்து சிந்துவெளி நாகரிகக் காலத்துக்கு முன்பே தமிழில் படவெழுத்து முறை தோன்றி நிலவியது என அறியலாம்.

படங்களாக வரையப்பட்ட உருவ வடிவங்களே பிற்காலத்தில் எழுத்து வடிவங்களாக மாறியுள்ளன. இதன் வண்ணம், உலகில் எம் மொழி எழுத்தாயினும் ஒவ்வோர் எழுத்தும் ஓர் உருவத்தின் படத்தை உள்ளடக்கியிருக்கிறது. அந்த உருவம் கண்ணுக்குப் புலப்படும் நிலைத்திணை, இயங்குதிணைப் பொருள்களில் ஒன்றாயிருக்கும். செமித்திய மொழியில் எழுத்துகளின் பெயர்கள் உயிரிகள் அல்லது பொருள்களின் பெயர்களாகவே அமைந்திருப்பது இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. அம்மொழியில் 'B' என்னும் வடிவம் வீட்டைக் குறிக்கும். வீட்டின் வடிவமாக அமைந்திருக்கும் எழுத்தும், வீடு (Beth, beta) என்றே பெயரிடப்பட்டுள்ளது. கிரேக்கரும் செமித்தியரிடமிருந்து இதனைக் கடனாகப் பெற்றனர். இது மேலையாரிய மொழிகளில் 'பி' (B) எனக் குறுகியது. 'A' என்னும் ஆங்கிலவெழுத்து மாட்டின் தலையையும் கொம்பையும் குறிப்பது 'L' என்னும் ஒலிப்புக்குரிய 'எகுபதிய' எழுத்து, முன்னாளில் 'படுத்திருக்கும் அரிமா' (Lion) வடிவமாக எழுதப்பட்டது. எகுபதிய மொழியில் இதற்கு 'லிபோ' என்று பெயர்.

பழந்தமிழிலும் எகுபதிய மொழியிலும் வல்லூறு (Falcon) வடிவமே அகர ஒலிப்பினைக் குறிப்பதாக இருந்தது. எகுபதிய மொழியில் இதற்கு 'ஆஷோம்' என்று பெயர். எகுபதியர் 'நான்' எனப்பொருள் படும் சொல்லுக்கு மாந்தரின் இருகால் வடிவத்தைக் குறியீடாகக் குறித்தனர். சிந்துவெளி எழுத்து முறையில் இருகால் (II) வடிவம் 'நான்' என்னும் பொருளிலிருந்து பிறகு 'ந' என்னும் ஓசைக்குரிய அசையெழுத்துக் குறியீடாகி விட்டது. பின்னாளில் அது ஐரோப்பிய மொழிகளில் I என்ற எழுத்தாக மாறிவிட்டது. எகுபதியர், பொனீசியர், கிரேக்கர் ஆகிய மூவரும் 'D' என்ற எழுத்தை வீட்டின் கதவு வடிவமாக எழுதினார். தேனைக் குறிக்கும் 'Honey' என்னும் சொல்லின் முன்னெழுத்துத்தான 'H' முதலில் தேன் கூட்டின் வடிவமாகவும், பின்னர் 'H' என்றும் எழுதப்பட்டது.

'M' என்னும் எழுத்து தொடக்கக் காலத்தில் ஆந்தையின் தலைவடிவாக எழுதப்பட்டது. செமித்தியர், நீரின் அலை வடிவில் 'N' எழுத்தையும் எழுதினர். ஏனெனில் அம்மொழியில் 'மேம்' தண்ணீரையும், 'நூான்' மீனையும் குறித்தன. செமித்திய மொழியில் 'பே' வாய் எனப் பொருள் பட்டதால் 'P' எழுத்து வடிவம் வாயின் படமாக வரையப்பட்டது. பொனீசியர், எகுபதியர், கிரேக்கர் ஆகிய மூவரும் ஊசியின் துளை வடிவில் 'q' என்னும் எழுத்தை எழுதினர். 'U' என்பது இலத்தீன் மொழியின் 'V' எழுத்தாகும். இது, பிற்காலத்தில் 'U' என்று திரிந்தது. இரண்டு 'V' சேர்ந்து, 'W' ஆயிற்று. இது எகுபதிய மொழியில் 'பறவைக் குஞ்சின்' வடிவமாக எழுதப்பட்டது.

ஐரோப்பிய மொழிகள் கிரேக்கச் சொற்களைக் கடன் வாங்கிய பொழுது கிரேக்கத்தின் வாயிலாக செமித்திய, எகுபதிய படவெழுத்துகளின் சுருக்கமாகிய எழுத்தின் வரிவடிவங்கள் மேலையாரிய மொழிகளில் இடம்பெற்றன.

சீனர் இதுகாறும் படவெழுத்துகளைப் பின்பற்றுகின்றனர். உலகப் பெருமொழிகளில் உள்ள அடிப்படைச் சொற்களின் எண்ணிக்கையை விட, சீன மொழியில் சொற்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் படவெழுத்துகளின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது. 40,000 படவெழுத்துகளைக் கொண்ட சீன மொழி, சிந்துவெளித் தமிழைப் போல் அசையெழுத்து நிலையை யெய்தாததால், வரியெழுத்தாக வளர முடியவில்லை. ஆயின், தமிழ் மொழி எழுத்து வடிவின் நான்கு நிலைகளையும் படிப்படியாக வளர்த்து கொண்டிருக்கிறது.

தமிழின் அனைத்து ஒலிப்புகளுக்கும் கூடாகவிருந்த உருவங்கள் சிந்துவெளி எழுத்துகளால் புலனாகின்றன. சிந்துவெளி எழுத்தில் 12 உருவெழுத்துகள்

உருவங்களையே தெளிவாகக் காட்டுகின்றன. ஏனையவை அவற்றுக்குரிய உருவ வடிவமைப்பை உள்ளடிக்கிய வரிவடிவங்களாக உள்ளன.

சிந்துவெளி எழுத்தில் அகரம் ஆணின் வடிவமாகவும், வல்லூறு என்னும் பறவை வடிவமாகவும் பிறகு வல்லூற்றின் இரு சிறகுகள் மட்டும் குறிப்பாகப் புலனாகும் வகையில் மேற்கோள் குறிபோன்றும் எழுதப்பட்டது. 'ஆகார' வடிவம் மாட்டின் தலையாகவும், 'இ' கரம் ஆந்தையின் வடிவமாகவும், ஈகாரம் வண்டு, ஈ, தேனீ ஆகியவற்றின் வடிவமாகவும் 'உ' கரம் காக்கையின் வடிவமாகவும் எழுதப்பட்டன என்று கருத இடந்தருகின்றது. எகரம் கோழியின் வடிவமாகவும் 'ஏ' காரம் மான் அல்லது அம்பின் வடிவமாகவும் 'ஐ' கையின் வடிவமாகவும் 'ஒகரம்' மயிலின் வடிவமாகவும் 'ஓகாரம்' யாழின் வடிவமாகவும் எழுதப்பட்டிருக்கலாம். ஐந்து குறில் எழுத்துகளும் ஐம்பறவைகளைக் (பஞ்சபட்சி) குறிப்பது உருவ எழுத்துகளைக் குறிப்பனவாகக் கருத இடந்தருகிறது.

தொன்முது தமிழில் 'க' கரம் கலயத்தின் வடிவமாகவும் 'ச' கரம் சேல் மீனின் வடிவமாகவும் 'ட' கரம் சதுர அல்லது நீள்சதுரத் துணியின் வடிவமாகவும் 'த' கரம் மழைத்தாரையின் வடிவமாகவும் ண, ன, ந, ஆகியவை நாற்கால் விலங்கு, நான்கு கால்கள், நாய், நான் என்பதன் குறியீடாகிய மனிதனின் கால் அல்லது இரு கோடுகள், தேன் கூடு போன்ற பல வடிவங்களாக இடந்தோறும் வேறுபடும் பாங்கினைக் கொண்டிருந்தன. 'ப' கரம் கவித்து வைத்த மட்பாண்ட வடிவமாகவும், மகரம் மலை, மயில் ஆகியவற்றின் வடிவமாகவும் 'ய' கரம் யாமரத்தின் வடிவமாகவும் ' ' 'ல' கரம் 'செல்' அல்லது கரையான் வடிவமாகவும் 'ழ' கரம் தலைபருத்த புழுவின் வடிவமாகவும் 'ள' கரம் கரடியின் (உளியம்) வடிவமாகவும், தோலால் செய்த நீர்ப்பையின் வடிவமாகவும் 'ற' கரம் ஆற்றின் வடிவமாகவும் எழுதப்பட்டன என்பதற்கு வரலாற்றுப் படிமுறைக்கு ஒத்த உருத்திரிபுகள் சான்றாகின்றன. மேற்கண்ட உருவங்களைச் சிந்துவெளி எழுத்துகளுடன் ஒப்பிட்டுக் காண்போர்க்கு இவ்வுண்மை தெற்றெனப் புலப்படும்.

தமிழி (தமிழ் பிராமி)
தமிழ்ப் புலவர்களின் படைப்பு

முனைவர் இரா. மதிவாணன்

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தமிழ் எழுத்துகள் உயிரும் உடம்புமாக முப்பது என்று வரையறை செய்யப்பட்டன. இது யாரால் வரையறுக்கப் பட்டது, எக்காலத்தில் இது நிகழ்ந்தது, எங்கே முதன் முதல் செயற்பாடுற்றது என்னும் வினாக்களுக்கு எவரும் இதுகாறும் விடை காணவில்லை.

தொல்காப்பியர் தன் இலக்கண நூலை நூன்மரபு எனத் தொடங்கி மரபியலில் முடித்திருக்கிறார். "எனப, என்மனார், என்மனார் புலவர்" என்னும் கூற்றுகளால் தொல்காப்பியருக்கு வெகுகாலத்துக்கு முன்பே புலவர் பெருமக்கள் எழுத்துகளை உயிரெழுத்து மெய்யெழுத்து என வகைப்படுத்தியமை தெளிவாகிறது. தமிழ் எழுத்துகளைச் சீர்திருத்தி முப்பதாக்கியவர்கள் தமிழ்ப் புலவர்களே என்பதைத் தொல்காப்பியத்தால் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

சிந்துவெளி நாகரிகக் காலத்திற்கு முந்திய உருவெழுத்துக்களாகிய படவெழுத்து, சிந்துவெளியிலும் தென்னகத்திலும் நிலவிய அசையெழுத்து இவற்றைப் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் கூறப்படவில்லை. தொல்காப்பியர் காலத்திய தமிழ் எழுத்துக்கு இக்காலத்தார் தமிழி என்று பெயரிட்டுள்ளனர்.

இதனை வடபுலத்தார் 'பிராமி' என்றனர்.

பிரம்மம் என்னும் சொல்லிலிருந்து பிராமி என்னும் சொல் தோன்றியது. இதற்கு முதலாவது, தலைமையானது, அடிப்படையானது, மூலமானது, சிறந்தது என்று பொருள். பிரம முகூர்த்தம், பிரம்ம குலம் (முதற்சாதி பார்ப்பன சாதி), பிரமசரியம் (முதல் ஒழுகலாறு, பிரமசரியம், கிருகத்தார், வானப்பிரத்தம், சன்னியாசம் என்னும் நான்கு நிலைகளுள் முதல் ஆசிரமத்தைப் பின்பற்றுதல்) என்னும் சொற்களை நோக்குக.

பிராமி – முதலில் தோன்றிய எழுத்து என்பதே இதன் சரியான வேர்வழிப் பொருள். புலவர்களின் எழுத்து என்றிதனைக் கூறுவது வரலாற்றுப் பொருள். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியில் பிராமி என்பதற்கு சமற்கிருதத்திற்கு அமைக்கப்பட்ட எழுத்து எனத் தரப்பட்டுள்ள விளக்கம் முற்றிலும் தவறானது. சமற்கிருதம் எழுதப்படாத மொழி, அதை முதன் முதலில் எழுதத் தொடங்கியபோது தமிழ் மொழியினமைப்பை முற்றிலும் நோக்கி உயிரெழுத்து மெய்யெழுத்து என வகைப் படுத்திக் கொண்டனர். மேலையாரிய மொழிகளில் இத்தகைய வகைப்பாடு இல்லை.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகர் கல்வெட்டுகளில் காணப்பட்ட எழுத்துக்கு நாளடைவில், பிராமி எனப் பெயரிட்டனர். இது முற்றிலும் தமிழுக்குரிய எழுத்து வடிவம் என்று அவர்களுக்குத் தெரியாது. பிராமி எழுத்து தமிழ், பிராகிருதம், பாலி ஆகிய மூன்று மொழிகளை எழுதுவதற்கு அக்காலத்தில் பயன்பட்ட பொது எழுத்து. எனினும் இது தமிழுக்கென்றே அமைந்த மூல வரிவடிவம். பிராமி எழுத்தில் அமைந்த கல்வெட்டுகள் அசோகன் காலத்துக்கும் முன்னதாகத் தமிழகத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

பட்டிப்புரோலு, அழகர்மலை, கொங்கர் புளியங்குளம் போன்ற இடங்களில் கி. மு. நான்காம், ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமி கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவற்றிற்குத் 'தமிழி எழுத்துகள்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் மிகவும் பழமையானவை தமிழ்நாட்டில் கிடைத்துள்ள பிராமி கல்வெட்டுகளே. இந்தியா முழுமைக்கும் ஒரே எழுத்து வடிவமாகக் கையாளப்பட்டது பிராமி ஒன்றே. அது தெற்கிலிருந்தே வடக்குப் பகுதிகளுக்குப் பரவியுள்ளது என்று உறுதிப்படுகிறது. பாலி பிராகிருத மொழிகள் வேறு எழுத்து அமைத்துக் கொள்ளவில்லை. சமற்கிருத மொழியினரும் வேறு வழியின்றி இதனையே எழுத்து வடிவாகக் கொள்ள நேர்ந்தது. வருக்க எழுத்துகளை மட்டும் புதிதாக சேர்த்துக் கொண்டனர்.

இந்தியா முழுவதும் ஒரே எழுத்து வடிவமாகத் திகழ்ந்த இந்த எழுத்து வடிவத்தை 'பிராமி' என்று சொல்லாமல் 'தமிழ் எழுத்து' என்று சொல்வதே முறையானது எனறு தொல்பொருள் ஆய்வுத்துறையில் ஒய்வு பெற்ற அதிகாரியும் தொல்லெழுத்து ஆய்வில் வல்லுநருமான அறிஞர் சீனிவாசன் வெளிப்படத் தெரிவித்துள்ளார்.

கி. மு. முதலிரு நூற்றாண்டுகளில் வாழ்ந்த சாதவாகன அரசர்களுள் வசிட்டி மகன் சதகன்னி வெளியிட்ட இருமொழி நாணயத்தில் ஒரு பக்கத்தில் தமிழிலும் மறுபக்கத்தில் பிராகிருத மொழியிலும் அவன் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இரு மொழிக்கும் பிராமி எழுத்து வடிவம் ஒன்றாகவே உள்ளது. மௌரிய மன்னர்களுக்கு முன்பு மகத நாடாண்ட நந்தர் வெளியிட்ட காசுகளில் சிந்துவெளி எழுத்துகளில் நந்தன் எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு அருகில் நடந்த அகழ்வாய்வில் பேராசிரியர் இந்திர பாலர் கண்டெடுத்த முத்திரையொன்றில் 'தீவு கோ' என்னும் பெயர் மேலே சிந்துவெளி எழுத்திலும் கீழே பிராமி எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று சான்றுகளிலிருந்து சிந்துவெளி எழுத்துக்குப் பிறகு பிராமி தோன்றியது என்பதும் ஈழத்தில் இருவகை எழுத்தும் (பழைய சிந்துவெளி எழுத்தும் புதிய தமிழி (பிராமி) எழுத்தும்)

ஓரே காலத்தில் புழக்கத்தில் இருந்தன என்பதும் வெளிப்படுகிறது. சிந்து வெளி எழுத்திலிருந்தே பிராமி எழுத்து வளர்ந்திருக்கிறது என்பதை அறிஞர் பலரும் ஒப்புக் கொள்கின்றனர்.

சிந்துவெளி எழுத்திலிருந்து தமிழி (பிராமி) எழுத்தைப் புதிதாகத் திருத்தியமைத்தவர்கள் கடைக்கழகத் தமிழ்ப் புலவர்களே என்பதற்குப் பின்வரும் சான்றுகள் அரணாகின்றன.

பழைய சிந்துவெளி எழுத்து முறை உருவெழுத்திலிருந்து சுருக்கப்பெற்ற அசையெழுத்து. இது பொதுமக்களே கண்டறிந்த எழுத்து. இதனைத் திருத்தியமைக்கும் எண்ணம் கற்றவர்களிடையில்தான் தோன்ற முடியும். அதனையும் கல்வியில் சிறந்த புலவர் குழுவே செய்திருக்க முடியும். பாலி பிராகிருத மொழிகள் தோன்றுவதற்கு முன் எழுத்து வடிவிலிருந்த ஓரே மொழி தமிழ். தமிழ்ச் சங்கம் மதுரையில் நன்கு இயங்கிய காலத்தில் தமிழ்ப் புலவர்களே தமிழின் எழுத்து வடிவத்தை முப்பதாகத் திருத்திப் படைத்தனர் என்பதற்கு பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் சான்றாகின்றன.

"மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்" (தொல். எழுத். 15)

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே" (தொல் எழுத். 14)

இந்நூற்பாக்களிலிருந்து முன்பு தலைமேல் புள்ளி பெறாத எழுத்துகளைத் திருத்தியமைத்த பின் புள்ளி பெறலாயின என்று அறிய முடிகிறது. தமிழி எழுத்துக்களுக்குத் தாயான சிந்துவெளி அசையெழுத்துகளும் உருவெழுத்துகளும் புள்ளி பெறவில்லை.

சிந்துவெளி அசையெழுத்தில் மெய்யெழுத்துக்கு என்று தனிக்குறியீடு இல்லை. உயிர்மெய் எழுத்துக்கான ஓரே குறியீடு மெய்யிரட்டித்த மெய்ம்மயக்கத்துக்கும், உயிர்மெய்க்கும், மெய்யெழுத்துக்கும் ஆக மூன்று ஒலிப்புகளுக்கும் பொதுவான அசையெழுத்தாக இருந்தது.

க், க, க்க – இம்மூன்றுக்கும் ஓரே குறியீடு சிந்துவெளி எழுத்தில் காணப்படுகிறது. இது போன்றவையே ஏனையவும்.

குறில் நெடிலை மாத்திரை அளவுகோலால் வேறுபடுத்தியதால் முக்குறில்களைத் துணைக்குறியீடு சேர்த்து நெடிலாக்கியது போல எகர ஒகரக் குறியீடுகளை வேறுபடுத்த முடியவில்லை. புதிதாக வகுத்த இலக்கணக் கட்டமைப்பின் வண்ணம் இ + அ = ஏ, உ + அ = ஓ என இருவேறு குறில் இணைந்து தனி நெடில்களாகி அதன் பின்னர் அவற்றின் குறிலை எகர ஒகரக் குறில்களாக்கினர் என்னும் கருத்தின் வண்ணம் ஏகாரத்திற்கு 'இஅ' என இரண்டெழுத்தாக எழுதிக் காட்டாமல், 'ஏ' என ஓரே எழுத்தாக எழுதி அதன் தலைமேல் புள்ளியிட்டுக் குறிலாக்குவது (உயிர்மெய் மேல்

புள்ளியிட்டு 1/2 மாத்திரை மெய்யெழுத்தாகக் குறைந்தது போல) எளிதாகத் தெரிகிறது.

எழுத்துகளுக்கு 1/4 மாத்திரை முதல், இரு மாத்திரை வரை அளவு வகுத்த தமிழ்ப் புலவர்கள் இசைத்துறையில் வல்லவராய் இருந்திருந்தல் வேண்டும் என்பதும், பாடல்களுக்குத் தாளம் வகுத்துப் பண்ணமைக்கும் உத்திக்கு உதவும் பொருட்டே எழுத்துகளை குறில், நெடில் எனவும், குற்றியலுகரம், குற்றியலிகரம், மகரக் குறுக்கம் எனவும், வல்லினம், மெல்லினம், இடையினம் எனவும் பிரித்தனர் என்பதும் தெரிகிறது.

வரலாற்று ஆய்வாளரும் கல்வெட்டு வல்லுநருமான அறிஞர் பூலர் Indian Paleography என்னும் நூலில் பிராமி என்பதற்குப் புலவர் எழுத்து என விளக்கம் தருகிறார். இதிலிருந்து பிராமி எனப்படும் தமிழி எழுத்து தமிழ்ச் சங்கத்துப் புலவர்களால் புதிதாகத் திருத்தியமைக்கப்பட்டது எனத் தெரிகிறது.

சிந்துவெளி அசையெழுத்திலிருந்துதான் தமிழ் எழுத்துகள் வடிவமைக்கப்பட்டன என்பதற்குச் சான்றாகத் தமிழ் எழுத்துகளின் வண்ண மாலையில் முதலெழுத்துகள் முப்பதுடன் 216 உயிர்மெய்யெழுத்துகளின் வடிவம் (எழுதும் வேறுபாடு கருதி) செயற்கைத் தேவையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

உயிர்மெய் எழுத்து உண்மையில் எழுத்து என்னும் பெயருக்குப் பொருத்தமானதன்று. உயிர்மெய் எழுத்தை 'அசையெழுத்து' என்று சொல்லவேண்டுமேயன்றி எழுத்து எனக் கூறுவது தவறு.

உயிரெழுத்து மெய்யெழுத்து ஆகிய இரண்டே எழுத்து எனப்படும்.

1. உயிர் (அ, ஆ) – வெளிப்படை எழுத்து – மெய் (க், ங்) – தமிழில் உள்ள முப்பது முதலெழுத்துகள் - Open syllable - Phoneme

2. உயிர்மெய் க, ங – அகத்திணைந்த அசையெழுத்து – Closed syllable

3. உயிர் + மெய் – இல் உயிர்மெய் + மெய் – கல்: புறத்திணைந்த அசையெழுத்து – Compound Syllable

மேற்காட்டப் பெற்ற மூவகை எழுத்தமைதிகளில் முதலாவதொன்றே எழுத்து எனப்படுவது. இறுதியிரண்டும் செய்யுளுக்கு உறுப்பாகும் அசைகள். இவற்றை அசையெழுத்து என்றே கூறுதல் வேண்டும். சிந்துவெளி முத்திரைகளில் பயின்றுள்ளவை அனைத்தும் அசையெழுத்துகளே,

செய்யுளுக்கு உறுப்பாகும் அசையெழுத்துகளிலிருந்து முதலெழுத்துகளாக வடிவமைத்துள்ளவர்கள் தமிழ்ப் புலவர்களாதலின் தமிழி எழுத்து பிற்கால மக்களால் புலவர் எழுத்து என அறிமுகப் படுத்தப்பட்டது. தமிழி எழுத்தினை அடிப்படையாகக் கொண்டு சமண முனிவர்களும், பௌத்தர்களும் பல்வேறு மொழிகளுக்குப் புதிதாக எழுத்துளை மாற்றியமைத்துக் கொடுத்தனர். தேவநாகிரி எழுத்தும் இவ்வாறு தோன்றிய புதிய எழுத்தமைதிளுள் ஒன்றாகும். உயிரெழுத்து வேறுபாடுகளைக் குறிக்கும் அடையாளங்கள் ஏறத்தாழ இந்திய மொழிகளில் ஒரு சீராக அமைந்திருப்பதே இதற்குச் சான்றாகும். தமிழில் அமைந்தவாறே உயிரெழுத்து வேறுபாட்டுக்குறிகள் இந்திய மொழிகளில் அமைந்துள்ளன என்பதைப் பின்வரும் சான்றுகளால் ஒப்பிட்டுச் தெளியலாம்.

1. ஆகார நெடிலுக்கு மெய்யெழுத்தின் வலப்பக்கம் கோடிழுத்தல்.

2. இகர ஒலிப்புக்கு மெய்யெழுத்தின் தலைமேல் வலமாகக் கோடிடல்.

3. உகர ஒலிப்புக்கு மெய்யெழுத்தின் கீழ் அல்லது கீழ் வலத்தில் கோடிடல்.

4. எகர ஒகர ஒலிப்புக்கு மெய்யெழுத்தின் இடது மேலாக அல்லது மேற்புறத்து இடது சாய்வாகக் கோடிழுத்தல்.

5. ஐகார ஔகார வேறுபாடுகளை மெய்யெழுத்தின் இடப்பக்கத்தில் அல்லது மேற்புறத்தில் குறியீட்டுக் கோடுகளால் புலப்படுத்தல்.

மேற்கண்ட உயிரெழுத்து வேறுபாட்டு ஒலிப்புக்குறியீடுகள் மெய்யெழுத்துடன் சேர்ந்தெழுதும் முறை, சிந்துவெளி எழுத்துக் காலம் முதல் – சிறப்பாகத் தமிழிலும், குறிப்பாக அனைத்து இந்திய மொழிகளிலும் – பின்பற்றப்பட்டு வந்திருப்பதை என்னுடைய சிந்துவெளி எழுத்து பற்றிய நூலில் மேலும் தெளிவுபடுத்தியுள்ளேன்.

ஔகார இறுவாய்ப்
பன்னீரெழுத்தும் உயிரென மொழிப (தொல். எழுத். 8)

னகார இறுவாய்ப்
பதினென் எழுத்தும் மெய்யென மொழிய (தொல். எழுத். 9)

மேற்கண்ட நூற்பாக்களில் 'உயிரென மொழிப', 'மெய்யென மொழிப' எனக் கூறப்பட்டிருப்பதிலிருந்து உயிரென்றும், மெய்யென்றும் வேறுபடுத்தும் இயல்பு அதற்கு முன்பிருந்த சிந்து வெளிக்கால எழுத்தில் அறவே இல்லை என்று தெரிகிறது.

'மெய்யோடியையிம் உயிரியல் திரியா' (தொல். எழுத். 10) என்று தொல்காப்பியர் கூறுகிறார். இக்கருத்து சிந்துவெளி எழுத்தில் பின்பற்றப்படவில்லை. அவர்கள் மெய்க்கும் உயிர்மெய்க்கும் மெய்ம்மயக்கத்துக்கும் ஒரே எழுத்து வடிவத்தை (அசையெழுத்து)க் கொண்டிருந்தனர். அதிலிருந்து தமிழ்ப் புலவர்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பு தமிழ் எழுத்தை உயிர், மெய், உயிர்மெய் எனப் பாகுபடுத்தியதை அறிய முடிகிறது.

தமிழில் முதலெழுத்துக்களைச் சீரமைத்தவர்கள் தொல்காப்பியர் காலத்துக்குச் சற்று முந்தியவர்களாக இருந்திருந்தால் அவர்களுடைய பெயரைத் தொல்காப்பியர் குறித்திருப்பார். சிந்துவெளி எழுத்தின் இறுதிக்காலம் கி. மு. 1750 எனக் கூறப்படுகிறது. தொல்காப்பியரின் காலம் கி. மு. 700. பிராகிருத மொழி வளர்ச்சியடைந்த காலம் கி.மு. 1000. தொல்காப்பியர் குறிப்பிடும் வடசொல் என்பது பிராகிருதச் சொல்லே. இதில் பிராகிருத வடிவமுற்றுத் தமிழில் புகுந்த சமற்கிருதச் சொல்லும் அடங்கும். எனவே கி. மு. 1000க்கும் 1750க்கும் இடைப்பட்ட காலத்தில் சற்றொப்ப கி.மு. 1500 ஆண்டளவில் சிந்துவெளி அசையெழுத்திலிருந்து தமிழ் முதலெழுத்துகள் 'தமிழி' வடிவம் பெற்றன என்று கருத முடிகிறது.

பிராமி எழுத்துக்குத் தமிழர்கள் முன்பே பெயர் வைத்திருந்தார்களா என்பது அனைவரும் தொடுக்கும் வினா. சிந்துவெளி நாகரிகக் காலத்திலேயே தமிழ் எழுத்துக்குக் கண்ணெழுத்து என்றும் கோலெழுத்து என்றும் பெயரிட்டிருந்தார்கள். எழுதப்படும் பரப்பில் கீறல் விழாமல் மையில் அல்லது வண்ணத்தில் தோய்த்து, தோல், துணி ஆகியவற்றின் மீது எழுதுவது கோலெழுத்து. எழுதப்படும் பரப்பில் கீறல் அல்லது பள்ளம் விழுமாறு எழுதுவது கண்ணெழுத்து எனப்படும். தமிழைத் தவிர அக்காலத்தில் உள்நாட்டில் வேறெழுத்து முறையின்மையின் இதற்குத் தமிழ் எழுத்து என்று பெயரிட நேரவில்லை. தமிழர்கள் பெயரிடாததால் பிறமொழியாளர் பிராமி எனப் பெயரிட்டு வழங்கினர். தமிழினத்தார்க்குத் தனித்த பெயரில்லாதபோது பிறர் நம்மைத் திராவிடர் என அழைத்தது போன்றது இது. தமிழில் பிறமொழிச் சொல் புகுந்தால் நம் வரலாறே நமக்கு ஐயம் விளைவிக்கும் என்பதற்கு இது நல்ல சான்றாகும்.

4. முத்திரைகளிலுள்ள இயற்பெயர்கள்

சிந்துவெளி எழுத்துகளைப் படிப்பதற்காக நான் கடந்த பதிற்றாண்டு முடியச் செய்த முயற்சிகள் முழுவெற்றி நல்கியதன் பயனாக இதுவரை வெளிவந்த அனைத்துச் சிந்துவெளி எழுத்துகளையும், எழுத்துச் சான்றுகளையும் படித்து முடித்துள்ளேன். படியெடுத்த 3200 முத்திரைகளில் 660 இயற்பெயர்கள் மீண்டும் மீண்டும் பயின்றுள்ளன.

முத்திரைகளை வெளியிட்ட வணிகர்களின் பெயர்களும் வணிகப் பொருள்களின் மீது அரசன் விதித்த வரியைக் குறிப்பிடும் அரச முத்திரைகளில் அரசர் பெயர்களும் காணப்படுகின்றன. இவற்றுள் மூன்றில்

ஒரு பங்கின இன்றும் நாட்டுப்புறங்களில் இயற்பெயர்களாக வழங்குவன. அடுத்து மூன்றிலொரு பங்கின கடைக்கழக இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் பயின்றன. இறுதி மூன்றிலொரு பங்கினை தமிழர்கள் இதுவரை கேட்டிராத தொன்முது தமிழர்களின் இயற்பெயர்களாய்த் திகழ்ந்திருந்தவை. இம்மூன்று வகை இயற்பெயர்களையும் இவண் எடுத்துக் காட்டியுள்ளேன்.

இதுவரை நாம் கேட்டிராத முதுபண்டைக்கால இயற்பெயர்களாகச் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படுபவை.

அவ்வன்	அல்லன்
யாணன்	ஈதன்
அவுங்கள்	வையன்
திங்களன்	கோன்தங்கு
ஓயன்	உத்தன்
கதவன்	வங்கன்
உயவு	காங்கன்
அன்னமன்	தள்ளன்
ஓவத்தன்	ஓமன்
இன்னன்	நுங்கன்
காப்பன்	அள்ளன்
அரணன்	அண்டன்
அட்டன்	நம்பன் அட்டத்தன்
கோவன்	காவன் உங்கன்
வைகோன்	மாசேய்
காவையன்	நொள்ளன்
ஐயச்சன்	இத்தன்
சானன்	இவ்வன்
உன்னன்	இண்டன் அவுதி
அறவன்	இணையன் கணக்கன்
அந்தன்	நாயன் தொல்லன்
நற்றன் அண்டன்	அமத்தன்

கடைக்கழக இலக்கியங்களிலும் சிந்துவெளி முத்திரைகளிலும் இடம்பெற்ற இயற்பெயர்கள்

நத்தத்தன்	மாசானன்சேயன் காளத்தி
வைகாலி (வையாவி)	எவ்வி
அன்னி	கான் அவுணன்
உத்யன் அதிகன்	வங்கன் நத்தத்தன்

ஒள்சேய்	மாசாத்தன்
கூத்தன்	காந்தமன், காந்தன்
அணங்கு	அகவன், அரசன், கோ, கோன், மன்னன், அரையன்
கண்ணன் திண்ணன்	ஆவன்
நந்தன்	உதியன்
பண்ணன்	உத்தன்
பாணன்	மாசாத்தன்
நன்னன்	நம்பி
நன்னன் சேய் நன்னன்	நம்பன்
நல்லன், நாணன்	பாண்டியன்
கூலன்	

நாட்டுப்புறங்களில் இன்றும் வழங்குவனவாய், சிந்துவெளி முத்திரைகளிலும் இடம்பெற்ற இயற்பெயர்கள்.

ஈனப்பன்	காங்கன்
நந்தன்	காங்கையன்
சாமன்	கணக்கன்
காத்தன்	கணக்கையன்
கக்கன்	காக்கன், காக்கு
காவையன்	காக்கையன்
காவச்சன்	அங்கப்பன்
காளய்யன்	கந்தப்பன்
நண்டன்	அத்தியப்பன்
அத்தி	அப்பன்
மாசானன்	அப்பு
மாசாயன்	மாயன்
நாணன்	அக்கன்
தித்தன்	(அக்குமாறன்)
காளங்கன்	கூளன்
திக்கன்	மாசி (மாசேய்)
நக்கன்	நாயன்
நந்தன்	வத்தன்
தங்கன்	சேவையன்
உண்டன்	

வடநாட்டிலும் சிந்து வெளியில் வாழும் சிந்தி மக்களிடையிலும் தென்னாட்டிலும் பொதுப்பட வழங்கும் இயற்பெயர்கள்

சாமன் (சமன்லால்)

தாமன் (தாமன் - சிந்தி)

தத்தன் (சுனில்தத்)

சாத்தன் (சேட்-செட்டி)

நந்தன் (நந்தலால்)

சுதன் (சிந்தி)

அரையன் (ராய், ராவ்)

அரசன் (ராஜ், ராஜா)

ஓமன் (மலையாளம்)

மான், மானன் (மான்)

கோவன் (கோவிந்து, கோபி)

புதுமையான ஆண்பாற் பெயர்கள்

தங்கன் (இளையவன், ஒ. நோ. தங்கை)

நங்கன் (ஒ. நோ. நங்கை)

அவ்வன் (ஒ. நோ. அவ்வை)

கண்ணகன் (ஒ. நோ. கண்ணகி)

5. சிந்துவெளி எழுத்து - ஓர் அறைகூவல்

சிந்துவெளியெழுத்து இம்மண்ணிலேயே நெடுங்காலமாகத் தோன்றி வளர்ந்த எழுத்து என்று அறிஞர் ஐ. மகாதேவன் குறிப்பிட்டிருக்கிறார். சிந்துவெளி அசையெழுத்துக் குறியீடுகள் கி.மு. 1750 வரை முத்திரைகளில் இடம்பெற்றுள்ளன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் கிடைக்கும் பிராமிக் கல்வெட்டுகளிலுள்ள எழுத்தமைதிகள் சிந்துவெளி அசையெழுத்துக் குறியீடுகளுடன் ஒத்திருப்பதை அறிஞர் சுபாசு / அக் என்பவர் நிலைநாட்டியிருக்கிறார். சிந்துவெளியெழுத்துக்கும் பிராமியெழுத்துக்கும் உள்ள வடிவொப்புமைகள் ஒலிப்பு ஒப்புமையைக் காட்டுமா என்னும் வினாவை அவர் தொடுத்துள்ளார். அந்த அறைகூவலை ஏற்று சிந்துவெளியெழுத்து ஒப்புமைகள் இந்தியா முழுவதும் ஓரே எழுத்து வடிவமாக விளங்கிய பிராமியில் அதே ஒலிப்பு ஒப்புமையுடனிருப்பதை நான் இந்நூலில் நிறுவியுள்ளேன்.

உலக மொழிகளுக்குள்ள எழுத்து வளர்ச்சிப் படிநிலைகளில் படவெழுத்திலிருந்து அசையெழுத்து நிலையைச் சிந்துவெளி மொழியெய்தியது என்பதையும் அதன் பிறகு வரியெழுத்து முறையைப் பிராமி கைக்கொண்டது என்பதையும் பிராமியெழுத்து பண்டைத் தமிழ்ப்புலவர்களால் வடிவமைக்கப்பட்ட தமிழ் எழுத்தே என்பதையும் நிலைநாட்டியுள்ளேன்.

மொழியின் அடிப்படைக் கூறுகளாக இருப்பவை பல்லாயிரம் ஆண்டுகளாயினும் சிதைக்கப்படாமல் காக்கப்படுகின்றன என்னும் உண்மையைத் தெளிவுறுத்தியிருக்கிறேன். சான்றாகச் சிந்துவெளி நாகரிகக் காலத்திலிருந்து சாத்தான், மாசாத்தான், மாசானன் என்னும் இயற்பெயர்கள் தமிழில் மாறாமலிருப்பதை எடுத்துக் காட்டலாம். சாத்தான், சாத்தையன், சாத்தப்பன் என்னும் இயற்பெயர்கள் இன்றும் நாட்டுப் புறங்களில் பெருக வழங்குபவை.

அறிஞர் கமில் சுவலபில் அவர்கள் Dravidian Linguistics - An Introduction என்னும் நூலில் சிந்துவெளி எழுத்தைப் படிக்க முயல்வோர் சிந்தையில் கொள்ளத்தக்க கருத்துக்களாகச் சிலவற்றை வெளியிட்டிருக்கிறார்.

1. எவரும் படித்தறியாத எழுத்தைத் தான் படித்து விட்டதாக் கூறுபவர் தம்முடைய முடிவுகள் சரியானவை என மெய்ப்பிக்க வேண்டும்.

2. சிந்துவெளி மொழியின் சொற்கட்டமைப்பைத் தெளிவாக்கு முறைகள் கண்டறியப்பட வேண்டும். அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள் கண்டறியப்படும் மொழியின் பாங்கு ஒத்து வரவேண்டும்.

3. இருமொழி எழுத்துச் சான்றுகள் கிடைக்கின்றனவா என் மேலும் ஆராய வேண்டும்.

4. படித்தறியப்பட்டவை மீளவும் ஒப்புநோக்கத்தக்கனவாயும் நிறுவத்தக்கனவாயும் இருத்தல் வேண்டும்.

மேற்கண்ட கருத்துகளை மனத்திலேற்று நான் செய்துள்ள முயற்சி எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பதை வருங்காலம் தான் மதிப்பிடமுடியும்.

என் கண்டுபிடிப்பு என்ன சொல்கிறது?

சிந்துவெளி எழுத்தின் ஆய்வாளர்கள் மார்சல் (1931) காட் மற்றும் சிமித் (1931) அண்ட்டர் (1934), ஏ. எசு. சி. ராசு (1939), அலெக்ஸ் (1945), பி. பி. லால் (1966, 68), ஐ. மகாதேவன் ஆகிய பெருமக்கள் சிந்துவெளியெழுத்து வலமிருந்து இடமாக எழுதப்பட்டது என்று கூறியிருப்பதை மறுத்திருக்கிறேன். சிந்துவெளியெழுத்து இடமிருந்து வலமாக எழுதப்பட்டிருக்கிறது எனக் காட்டியிருக்கிறேன்.

தமிழின் இன்றைய வரி வடிவத்தில் காணப்படாததும் சிந்துவெளி நாகரிகக் காலத்திய அசையெழுத்து முறையில் காணப்படுவதுமாகிய எழுத்து முறை

குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். பின்வரும் இக்குறைபாடுகள் அன்றைய மொழியில் இயல்பாக இருந்தன.

1. சொற்களில் முதல் உயிரெழுத்தைச் சிற்சில இடங்களில் எழுதாமல் விட்டு விடுதல்.

2. சொல்லின் ஈற்றெழுத்தை அல்லது அசையைச் சிற்சில இடங்களில் எழுதாமல் விட்டு விட்டுப் படிப்பவர்களே உய்த்துணையுமாறு செய்தல் (எழுதும் இடத்தின் பற்றாக்குறையாலும் இவ்வாறு நிகழ்ந்திருக்கலாம்).

3. இரட்டித்த மெய்யெழுத்துக்கு (உடனிலை மெய்ம்மயக்கம்) மாற்றாகத் தனி மெய் மட்டும் சிற்சில இடங்களில் எழுதுதல்.

4. சிற்சில இடங்களில் நெடிலெழுத்தைக் குறிலாகப் படித்தல் (பட்டிப்புரோலு பிராமிக் கல்வெட்டுகளிலும் கூட இந்நிலை காணப்படுகிறது).

5. சிற்சில இடங்களில் குறிலெழுத்தை நெடிலாகப் படித்தல்.

6. ய, வ, உயிர்மெய்யெழுத்துகளுக்கு மாற்றாக இ, உ உயிரெழுத்துகளை இடையிலிட்டு எழுதுதல்.

7. ந, ண, ன மெல்லின மெய்யெழுத்துகளுக்குரிய குறியீடுகளை எவ்வித வேறுபாடும் காட்டாமல் வெறும் மெல்லோசை மட்டும் கருதி எதை எங்கு வேண்டுமாயினும் சொற்களில் இட்டெழுதுதல்.

8. ங்க, ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற போன்ற அசையெழுத்துக் குறியீடுகளைச் சிற்சில இடங்களில் முன்னுள்ள மெய்யெழுத்து ஒலிப்புக்கு மட்டும் பயன்படுத்துதல்.

9. உயிர்மெய்யாக்குவதற்கு மெய்யெழுத்துடன் உயிரெழுத்து அடையாளம் சேர்த்தல் அல்லது மெய்யெழுத்தினருகில் உயிரெழுத்து ஒலிப்புக் குறியீட்டையும் தனியாக எழுதி உயிர்மெய்யெழுத்தாக படித்தல்.

10. அசையெழுத்துக் குறியீட்டுக்குப் பல்வேறு மாற்றுக் குறியீடுகளை ஆளுதல்.

11. இரண்டு குறில் உயிரெழுத்துகளை அடுத்தடுத்து எழுதி நெடில் உயிரெழுத்தாகப் படித்தல்.

அசையெழுத்திலுள்ள இக்குறைபாடுகளைக் களைந்து முப்பது முதலெழுத்துகளாக மாற்றியதே பிராமி எனப்படும் பண்டைத் தமிழ் எழுத்து எனக் காட்டியுள்ளேன்.

6. பழந்தமிழர் முத்திரைகளும் இலச்சினைகளும்

அரிது காணும் ஆர்வம் நிரம்பிய கடலோடிகளாகத் தமிழர் பண்டைக் காலத்தில் விளங்கினர். அவர்களுடைய வணிகப் பெருக்கத்தை அவர்கள் பயன்படுத்திய முத்திரைகள் இலச்சினைகள் ஆகியவற்றால் கண்டறிய முடிகிறது.

எல்லியட்டுமித்து என்பவர் Migrations of Early Cultures (PP 77-78) என்னும் நூலில் W குருக் என்பவரின் Northern India என்னும் நூலை மேற்கோள் காட்டி தென்னிந்தியர் சிறந்த கடல் வாணிகர்கள் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். பாபிலோனியருடன் வணிக உறவு கொண்டாடினால் இறக்குமதியான வெண்கலப் பொருள்கள் தென்னகத்து முதுமக்கள் தாழிகளில் காணக்கிடைக்கிறது என்றும் உரோமானியக் காசுகள் அழிவின்றித் தென்னகத்தில் கிடைத்திருப்பதும், மிளகு, முத்து, மாணிக்கம் ஆகியவையும் பிற கனிமங்களும் தென்னகத்திலிருந்து ஏற்றுமதியாகியிருப்பதும் மற்றொரு சான்றாகும் என்கிறார்.

வடபுலத்து வாணிகத்தை விடத் தென்புலத்து வாணிகமே மிகுந்த செல்வாக்கு பெற்றுள்ளது என்று சாணக்கியர் குறிப்பிட்டிருக்கிறார். மிக விலையுயர்ந்த பொருள்கள் தெற்கிலிருந்து வந்ததாகவும், கம்பளி, தோல் குதிரை ஆகியவை மட்டும் வடக்கிலிருந்து தெற்குப் பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறுகிறார்.

இந்து மாக்கடலில் 5000 ஆண்டுகளுக்கு முன்பே கப்பலோட்டியவர்கள் திராவிடர்களே என்று அலெக்சாந்தர் கோந்தர தோவ் குறிப்பிடுகிறார்.

ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் மீது முத்திரை பதிக்கும் வழக்கம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களிடையிலும் இருந்தது என்பதற்கான சான்றுகள் தமிழிலக்கியங்களில் ஏராளமாகக் கிடைக்கின்றன. வணிகர்கள் தம் பொருள்களின் மீது குத்திய முத்திரையில் வணிகரின் பெயரும், அவ்வணிகருக்குரிய அடையாளச் சின்னமும் இருந்தன. அரசன் வரி விதித்ததற்கு அடையாளமாக அரசனுடைய முத்திரையும் பொருள்களின் மீது இடப்பட்டது. சிந்துவெளி அகழ்வாராய்ச்சியிலும் வணிகரின் பெயர் கொண்ட முத்திரைகள் ஆயிரக்கணக்கில் கிடைத்துள்ளன.

சோழப் பேரரசனின் புலி அடையாளம் கொண்ட முத்திரை துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதியான பொருள்களின் மீது குத்தப்பட்டதாகப்

பத்துப்பாட்டில் ஒன்றாகிய பட்டினப் பாலையில் கூறப்பட்டுள்ளது. காவிரிப் பூம்பட்டினத்தில் ஏற்றுமதியான பொருள்களின் மீது வணிகரின் பெயர் கொண்ட முத்திரைகள் இடப்பட்டதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. முத்திரையிட்ட மண் இலச்சினைகளையும், எழுதப்படும் மடல்களின் மீது சிறிது ஈரக் களிமண் ஒட்டி அதன் மீது முத்திரை பதித்த இலச்சினைகளையும் சிலப்பதிகாரம் குறிப்பிடும்போது மண்ணுடை முடங்கல் என்றே தெளிவாகப் புலப்படுத்துகிறது.

முத்திரையிடப்பட்ட மண்ணிலச்சினைகளில் உரியவரின் பெயர், அடையாளச் சின்னம், பொருளின் எடையை அல்லது அளவை குறிப்பிடும் எண் ஆகியவை இடம்பெற்றுள்ளன. தமிழ் எழுத்துகளே எண்ணின் குறியீடுகளாகவும் பயன்படுத்தப்பட்டன. முத்திரையிடப்பட்ட மண்ணிலச்சினைகள் லோத்தல் துறைமுகத்து அகழ்வாராய்சியில் கிடைத்திருப்பதாகச் சிந்துவெளி ஆராய்ச்சியாளர் அறிஞர் அசுகோ பர்போலா குறிப்பிட்டிருந்தார்.

அரப்பா நாகரிகக் காலத்து லோத்தல் துறைமுகத்து எரிந்து போன தவசக் கிடங்கில் முத்திரையிடப்பட்ட நூற்றுக்கணக்கான மண்ணிலச்சினைகள் கிடைத்திருக்கின்றன என்றும், இவற்றை வணிகப் பொருள்களுடன் இணைத்துக் கட்டவும் உள்ளடைக்கவும் பயன்படுத்திய துணி, நூல், ஆகியவற்றின் எச்சங்களும், உள்ளன என்றும், இது இக்காலத்திய முத்திரையிடும் வழக்கம் அக்காலத்திலேயே நடைமுறையிலிருந்திருப்பதைக் காட்டுகிறது என்றும் குறிப்பிடுகிறார். மொசபதேமிய முத்திரைகளைப் போன்றே இவையும் இயற்பெயர்களைக் கொண்டனவாக இருத்தல் வேண்டும் என்பதையும் மொசபதேமியாவோடு சிந்துவெளி மக்கள் நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர் மேலும் புலப்படுத்தியிருக்கிறார்.

எழுத்தமைப்பில் காலக்குறியீடு

தமிழில் பண்டுதொட்டே குறில் நெடில் வேறுபாடுகள் எழுத்தமைப்பில் பேணிக்காக்கப்படுகின்றன. சிந்துவெளி அசையெழுத்திலும் இதே நிலை காணப்படுவது வியப்பளிக்கிறது.

எழுத்தொலிப்புக்குக் காலம் கணிப்பது இசைத்துறையில் மட்டும் நிகழ்வதொன்றாகும். ஆயின் இயற்றமிழுக்கு இலக்கணம் வகுத்த புலவர் பெருமக்கள் எழுத்துகளுக்கு மாத்திரை வகுத்திருக்கின்றனர். குற்றியலுகரம் மெய்யெழுத்து ஆகியவை அரை மாத்திரை நேரம் ஒலிக்கும் என்றும் மகரக் குறுக்கம் கால் மாத்திரை நேரம் ஒலிக்கும் என்றும் குறிலெழுத்து ஒரு மாத்திரை, நெடிலெழுத்து இரு மாத்திரை நேரம் ஒலிக்கும் என்றும் வகைப்படுத்தியுள்ளனர். இதிலிருந்து சிந்துவெளி அசையெழுத்துக் காலத்திலேயே இசை வளர்ந்திருக்க வேண்டும் என்றும் இசைப் பாடல்களை மாத்திரை பிசகாமல் எழுதுவதற்கென்றே சிந்துவெளி அசையெழுத்துகளில் குறில் நெடில் வேறுபாட்டுக் குறியீடுகள் சேர்த்திருக்கிறார்கள் என்றும் அறிய முடிகிறது.

சிந்துவெளி முத்திரை எழுத்துகள் தமிழே!

டாக்டர் ந. பஞ்சாட்சரம்

சிந்துவெளி நாகரிகத்தின் கீழ்க்கால எல்லை கி.மு. 1750 என்று கார்பன் 14 மூலம் அறிவியலாளரால் தெளிவுறுத்தப்பட்டிருக்கிறது. மொஹன்சதாரோ, ஹாரப்பா ஆகிய விடங்களில் பல கட்டிட அடுக்குகள் உள்ளதாலும், 1927ல் அகழ்வாய்வு செய்யப்பட்ட முதல் அடுக்கின் முற்பட்டகால எல்லை கி. மு. 2,750 என்று சொல்லப்படுகிறது. இதுவும் கார்பன் 14 மூலம் தெளிவுறுத்தப்பட்டதே. எனினும், இதற்கு முந்தைய கால எல்லையைத் தெளிவுறுத்துதற்கான முயற்சி பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்படவில்லை. ஏனென்றால் கீழிருக்கும் நகரங்களை காணுவதற்கான அகழ்வாய்வு செய்யும் போது, அவை நதிக்கரைகளில் உள்ளமையால் தண்ணீர் சுரந்துகொனண்டேயிருக்கும். சுரந்து வருகிற தண்ணீரை அப்புறப்படுத்துவதே பெரிய காரியமாகவுள்ளது. எனினும் பிரெஞ்சு நாட்டு அகழ்வாய்வினர் மேற்கொண்ட பெரு முயற்சியின் விளைவாக நான்காவது, ஐந்தாவது கீழ் நகரங்களின் கால எல்லை என்பது கி. மு. 8000க்கு வகுக்கப் பட்டுள்ளது.

சிந்துவெளி நாகரிகம் சுமார் கி. மு. 1600ல் அழிக்கப்பட்டது என்று எல்லா ஆய்வாளர்களும் கூறியுள்ளனர். இதை மறுக்குமுகத்தான், இந்நாகரிகமானது ஆரியர் வருகையினால் அழிக்கபடவில்லை என்ற கருத்தினை இப்போது வட இந்தியாவில் குறிப்பாக ஆரிய வம்சா வழியினரும்கதக்க சான்றுகள் இன்றிச் சொல்ல ஆரம்பித்துவிட்டனர். கி.மு. 1600 வாக்கில் வந்த ஆரியர்களே இந்நாகரிகத்தின் - தற்போது உலகத்திற்குத் தெரிந்துள்ள மொஹன்சதாரோ, ஹாரப்பா, மேல் மட்டத்திலுள்ள நகரங்களை அழித்துள்ளனர் என்பது தெளிவாகும். இவ்வாரியர் நாகரிகமுற்றவர்களா அல்லது அற்றவர்களா என்பது குறித்து எழும் கேள்விகட்கு நாம் விடை காண வேண்டியதவசியம்.

சிந்துவெளி நாகரிகம் பற்றிய செய்திகட்கு அரண் சேர்ப்பவை அகழ்வாய்ந்த பொருட்களே. இவற்றை விட்டு, கற்பனையாக எழுதப் பட்ட வேதங்களை அதிலும் ருக் வேதத்தைப் புரட்டிப் பார்த்து ஆய்வு செய்வதென்பது மேலெழுந்தவாரியாக ஒரு விடை அவசியம் தேவை என்ற குறிக்கோளினால் உந்தப்பட்டதே.

ருக் வேதம் சுமார் 1200 ஆண்டுகட்டு முன்னர் கூறப்பட்டது என்றும் அது செவி வழியே பரம்பரை பரம்பரையாகப் பாதுகாத்து வைக்கப் பட்டதென்பதும், அதுவே எல்லா அறிவிற்கும் வரலாற்றுக்கும் மூலமாக அமைவதென்பதும், ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இல்லை. வாய்மொழி இலக்கியமாகக் கருதப்பட்டாலும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தான் சமஸ்கிருதக் கல்வெட்டு மூலம்

அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்நிலையில், அதாவது வரையப்படாத நிலையில் ஏறத்தாழ 15 நூற்றாண்டுகளாக வாய் மொழியில் காக்கப் பட்டதென்று கூறுவது ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இல்லை. The Cambridge Ancient History Vol.1 Part 2-B என்ற நூலில் In any case the Aryas of Rig Veda may represent a relatively late wave of immigrants. The high date of C.1500 BC formarly proposed for this earlier parts of the Rig Veda is not based on firm philological evidence and should not be used as an argument for dating the migration of the Aryas so early என்று விளக்கப்படுகிறது. அதாவது ஆரியர்கள் 1500 கி. மு. வில் வரவில்லை. இருக்கு வேதமும் 1500க்கு வெகு காலத்திற்குப் பின்னரே உருவாக்கப்பட்டிருக்கலாம்.

அதுவுமன்றியும் அதே நூலில் The Vedic Literature is imaginative or Primarily concerned with religious ritual. It is not demonstrably older than C. 1000 B.C. although it is often said to be. It maihoris many tribes, places and rivers which are probably historical, but for the most part they cannot be satisfactorily identified or located. The region known to the poets apparently lay north of the Thar Desert from the Punjab in the west to the vicinity of Ambala and the river Ganges is mentioned only once. There one other indications besides this that the Aryas were migrating or extending their territories during the period in which the poems were composed, and that this movement or expansion was in an eastward direction. Some of the river-names in the poems are thought to survive in Afghanistan (The names Kubha, Suvastu, Krumu and Gomati being identified with those of the Kabul, the Swat, The Kurram and the Gumal) and this suggests that the Aryas entered India from that country. One river name Saraswati occurs also in Arestan (in the Vendidad) in the corresponding Iranian from Harohvaiti. (But this hardly proves

that the proto-Indians and the proto-Iranians were still in contact when the Rig Veda and the earliest hyms were composed).

ஹாரப்பாவின் மீது படையெடுத்தவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது "The latest on chealogical research in dieates a complex or at least protracted pattern of immigration into India from the north west Perhaps lasting over most of the second millennium, If does not appear that the cities of the Indus valley were over whelmed in one sudden onslaught or man incuscion. The first apparently intrusive culture in the region is one known by the site name Jhukar. It was introduced by a people who drove away the inhabitants of the Harappan town at Chanhu Daro. D.H. Gordon dates its appearance to shortly after 1800 B.C. and it is said to have points of similarity with the cultured of Tepe Hissar III and Sialk (Cemetry A) in Iran. The cities at Mohenja Daro and Harappa evidently survived for some time after invasion. The former was eventually captured sacked and abandoned....

ஆகவே சமஸ்கிருதத்தை வைத்து ஆய்வு செய்வதென்பது போகாத ஊருக்கு வழி தேடுவதைப் போன்றதே. இந்திய ஆய்வாளர்கள் குறிப்பாக வட இந்தியர்கள் மற்றும் திரு. எஸ். ஆர். ராவ் ஆகியோர் சிந்து வெளி முத்திரைகளில் காணப்படும் எழுத்துக்கள் சமஸ்கிருதமே என வலிந்து சான்று எதுவுமில்லாமல் கூறுவது வியப்புக்குரியதே!.

இதே நூலில் (Vol. 1 Part 1) எலாமைட் மொழியைப் பற்றிக் கூறும் போது since there is absolutely no evidence for migration of Elamite speaking people of the northern mountains, there is a strong possibility that Elamite is related through Brahin, still spoken in Baluchistan (South Western Pakistan) to the Dravidian tongues of Southern India, which exbitit a somewhat similar structure. This frequently suggested connection has gained

plausibility in recent years, after the recovery of the Indus Valley civilisation of Harappa and Mohenja Daro. Today it is ethno-geographically even more plusible, since Harappa ports have been discovered some 400 miles west of the mouth of the India, at the Iranian frontier, while Indian archealogists have located nearly a hundred sites between the Rann of Kutch on the Indian frontier south east of Karachi and a site some 150 miles north of Bombay. In other words the entire coastal area of Indus valley civilisation left was perhaps occupied by Dravidians, who have left their linguistic imprint west of the lower Indus valley and within 400 miles of the southern most now known outpost of the Harappa culture in question ... It is interesting to note that M. Andronev has laterly employed glotto chronology to estimate the approximate time at which Brahmi may have separated from its Dravidian sisters in India, arriving at a plausible date in the early fourth millennium B.C. Needless to say, this is not a precise calculation, but it is quite reasonable in the light of our archealogical and cuneiform evidence, which fixes the final destruction of the Indus valley culture some where between C 1950 and 1750 BC. Further research in comparative Dravidian Linguistics, which seems to be most likely area for scientific exploration has now become an urgent necessity.

மேற்குறித்த காரணங்களால் சிந்து வெளி முத்திரை மொழியானது. பழந்திராவிட மூல மொழி அதாவது இன்றும் வழக்கிலுள்ள தமிழ் மொழியே என்று ஐயந்திரிபறத் தெளிதல் வேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ வேறு மொழிகளைக் கொண்டுவந்து வலிந்து ஏதோ 'பப்றபரபா' என்று சொல்லுவது அறிவு வழி ஆய்வுக்கும் ஆய்வாளர்கட்கும் அழகல்ல.

அகழ்வாராய்ச்சியில் சிக்கல்கள்

சொ. பாசுகரன், சென்னை–21

24.12.1989 அன்று, அய்க்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டுச் சபைக்கு (UNESCO) ஒரு கடிதம் எழுதி, "மொகஞ்சதாரோ, அரப்பாவில் அகழ்வாராய்ச்சி நடத்தி, புதையுண்டிருக்கும் சரித்திரச் சான்றுகளை வெளிக் கொணர்ந்து, மறைந்த நாகரிகங்களை உறுதி செய்ய வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தேன். 23.2.1990 தேதியிட்டு திரு. "மத்தியாசு டெர்மிட்செல்" (Matthias Dermitzel) பழம் பண்பாட்டுத் துறையில் இருந்து எனக்கு பதில் கடிதம் எழுதினார். அதன் சுருக்கம் "எங்கள் UNESCO நிறுவனம் இப்போது அகழ்வாராய்ச்சி செய்யவில்லை. பழம் பண்பாட்டு, வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கும் பணியில் செயல்பட்டு வருகிறது. அப்படிப் பாதுகாக்கப்படும் வரலாற்றுச் சின்னங்கள் உலகம் முழுவதும் 315. இதில் மொகஞ்சதாரோ அடங்கியுள்ளது. ஆனால், அரப்பா இதில் அடங்க வில்லை.

அப்பட்டியலில் அடங்கிய இந்திய இடங்கள்

வரிசை எண்	**ஊர்**
274	கியோலாடியா தேசியப் பூங்கா
275	ஆக்ரா கோட்டை
276	தாச் மகால்
277	பதேபூர் சிக்ரி
278	கசுராகோ சிற்பங்கள்
279	எல்லோரா குகைகள்
280	அசந்தா குகைகள்
281	எலிபன்டா குகைகள்
282	கோவா கிறித்துவ ஆலயம்
283	பட்டாட கால் (Pattadakal) வரலாற்றுச் சின்னங்கள்
284	அம்பி (Hampi)
285	தஞ்சைப் பெரிய கோவில்
286	மாமல்லபுரம் சிற்பங்கள்
287	கோனார்க் கோவில்
288	சுந்தர்பன் தேசிய பூங்கா
289	காசிரங்கா தேசிய பூங்கா
290	மானாசு (Manas) சரணாலயம்

மொகஞ்சதாரோவிற்கு கொடுக்கப்பட்டுள்ள வரிசை எண் 268 ஆகும்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கும் திருமலை நாடக்கர் மகாலுக்கும் சுரங்கப் பாதை உண்டு என்பது வரலாறு. இப்பொது அது இருக்குமிடம் தெரியவில்லை. மீனாட்சியம்மன் கோவிலைச் சுற்றியும், திருமலை நாயக்கர் மகாலைச் சுற்றியும் நெருக்கமாக, இடைவெளி விடாது, அடுக்கடுக்காக கட்டிடங்கள் வந்தபின், பழந்தமிழர் பயன்படுத்திய பொருட்களை அப்பகுதியில், அகழ்வாராய்ச்சி செய்து எடுக்க இயலுமா?

திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழர்களின் பண்பாட்டுச் சின்னங்கள் வங்காளக் கடலிலும், இந்தியப் பெருக்கடலிலும் அரபிக் கடலிலும் அமிழ்ந்தும், பூமியில் புதையுண்டும் இருந்து கொண்டு, தன்னை விடுவிக்க வரும் மனிதனின் வரவை நோக்கி ஏக்கத்துடன் காத்திருக்கின்றன. தான் புதைந்து கிடக்கும் இடத்தின் மீது அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருப்பதை அறிந்தால், தனக்கு விடுதலையே கிடைக்காதா? என்று வருந்தி இரத்தக் கண்ணீர் வடிக்குமோ?

பாதுகாப்புப் பெட்டகத்தைத் திறக்காமலேயே (ஊடு கதிர்) மூலம் உள்ளிருக்கும் பொருளை அறிய முடியுமாமே? இத் தொழில் நுட்பம் மேன்மேலும் வளர்ந்தால், 500 அடி, 1000 அடி ஆழத்தில் உள்ள பண்பாட்டுச் சின்னங்களைக் கூட அறிய வாய்ப்பு வருமோ?

காவிரி பூம்பட்டினத்தில் வரலாற்றுச் சின்னங்கள், அதன் அருமையை உணராத பொது மக்களால் அவ்வப்போது சிதைக்கப்பட்டு வந்துள்ளன எனத் தெரியவரும்போது நெஞ்சம் கலங்குகிறது. டால்பின் மீன் மிக்க அறிவுடைய மீனாமே. பயிற்சி தரப்பட்ட டால்பின் மீன்கள் வருங்காலத்தில், நமக்கு அமிழ்ந்து கிடக்கும் பண்பாட்டுச் சின்னங்கள் பற்றித் துப்புத் தருமோ?

அகழ்வாராய்ச்சிக்கும், மூழ்கும் ஆராய்ச்சிக்கும் தொல்பொருள் அறிஞர்கள் தேவை. உதவி புரிய தொண்டர்கள் தேவை. உபகரணங்கள் தேவை. பாதுகாத்து வைக்கக் கட்டிடங்கள் தேவை. புகைப் படமாகத் தொகுக்க, புகைப்படக் கருவிகள் தேவை. ஒப்பு ஆய்வு செய்யும் அறிஞர்கள் தேவை. இவை அனைத்திற்கும் போதிய பொருளுதவி தேவை., இவற்றை ஊக்கப்படுத்தி கண்காணிக்கும் பொது மக்கள் தேவை.

இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிந்துவெளி, குமரிக் கண்ட இரு நாள் மாநாடு தமிழகப் புரவலர்களையும், பொது மக்களையும், தமிழக அரசையும், அய்க்ய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டுச் சபையையும் போதிய பொருளதவி செய்யத் தூண்டுமானால், செம்மையான ஆராய்ச்சிகள் நடைபெறும். இம் மாநாட்டின் குறிகோள் நிறைவேறும்.

குமரி கண்டத்தில் மருத்துவம்

பலநூலாசிரியர்

காது, மூக்கு, தொண்டை நிபுணர்

மருத்துவர் மு. குமரேசன் எம்.எஸ்., டி.எஸ்.ஓ., எஃப்.ஐ.சி.எஸ்., எம்.ஐ.ஏ.எல்.பி (சுவிட்), எப்.சி.சி.ஏ. (அமெரிக்கா), எஃப்.ஆர்.எஸ்.எஸ் (லண்டன்)

தலைச் சங்க காலத்தில் அகத்தியம் என்னும் இலக்கண நூல் வழக்கில் இருந்தது. மூன்று சங்க காலத்திலும் மருத்துணப் புலவர்களால் எழுதப்பட்ட மருத்துவ நூல்களைப் பற்றி அதிக குறிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை. இருப்பினும், கடைச்சங்க காலத்தில் தாமோதரனார் என்ற புலவர் அச்சங்கத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார். அவர் பெரும் மருத்துவர். அப்போது அக மருத்துவம், புற மருத்துவம், அறுவை மருத்துவம் எனப் பலவகைப் பட்ட மருத்துவம் வழக்கில் இருந்ததாகத் தெரிகிறது. இம் மருத்துவத் துறையில் குருவாக இருந்தவர், ஆசானாகத் திகழ்ந்தவர். அவருக்குப் பல சீடர்கள் பரம்பரையாகவே தொடர்ந்து இருந்து வந்தனர். வேதம் எப்படி எழுதப்படாமல் காதால் கேட்டே மனம் கொள்வதாக இருந்ததோ அதே போல் தான் சித்த மருத்துவமும் காக்கப்பட்டு வந்தது. இருப்பினும் பிற் காலங்களில் தான் பனை ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தனர்.

அக்காலத்தில் தமிழ் மக்கள் குமரிமுனை முதல் காஷ்மீரம் வரை பரவியிருந்தனர். கலைகளில் சிறந்த மருத்துவ கலைகளையும் உலகம் முழுவதும் பரப்பிச் சிறப்போடு இருந்தனர். ஆகவே சித்த மருத்துவம் வேற்று மொழிகளிலும் புகுந்து தன் தொண்டாற்றி வந்தது. தென் தமிழ் நாட்டினர் மட்டும் தனிப் பட்டு நின்று சிறந்து இருந்தனர். சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் அவர்களுக்குப் பின்பு வந்த பல்லவ, சாளுக்கிய மன்னர்களும் அதன் பின் தோன்றிய கிருஷ்ண தேவராய மன்னரும் கட்டிய பல கோவில்களில் இயல், இசை, நாடக கலையை மேம்படுத்தினார்களே ஒழிய மருத்துவக் கலையை மேம்படுத்தியதாகத் தெரியவில்லை. இருப்பினும், ஜகராஜ சேகரம், பரராஜ சேகரம் என இரு மருத்துவ நூல்களையும் சிங்கள நாட்டை ஆண்ட மன்னர்கள் காத்து வந்தனர்.

சித்த மருத்துவம் அன்று இருந்தே நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு முதலியவற்றைப் பெறாமல் இளமையோடு வாழ வழி என்ன என்பதைக் கூறிக் கொண்டு வந்தது. அது போல் தான் ரசவாத வித்தை மூலம் தங்கத்தை உற்பத்தி செய்யும் கலையையும் தெரிந்து இருந்தனர். ஆகவே இன்று நாம் நோய்க்கு மருத்துவம் என்ற நிலையில் தான் நாம் ஆய்வு செய்து கொண்டு இருக்கிறோம். ஆனால் அன்றைய மருத்துவர்களாகிய சித்தர்கள் சாகா நிலையைப் பற்றி ஆய்வு செய்து கொண்டு இருந்தனர். அக் காலத்திலேயே சித்தர்கள் மலைகளில் குகைகளில் தங்கித் துறவறம் பூண்டு யோகப் பயிற்சி

செய்து வந்தனர். தன் மாணவர்களுக்கு மருத்துவம், யோகா பயிற்சியையும், ஞானத்தையும் போதித்து வந்தார்கள்.

உடல் அழியும் முன்னரே முத்தி நிலை பெறுவதற்கு சித்திகளைப் பெற்றாக வேண்டும் என்ற நிலையில் உறுதியோடு இருந்தனர். ஆகவேதான், மருத்துவர்கள் யாவரும் யோகாசனத்தைக் கடைபிடித்து வந்தனர். அண்மையில் தொகுக்கப்பட்ட சென்னை பல் கலைக் கழக அகராதியில் பதினெண் சித்தர்கள் பட்டியலை வெளியிட்டு இருக்கிறார்கள். அவர்களின் பெயர்கள் வருமாறு :– திருமூலர், இராம தேவர், கும்பமுனி, கொங்கணர், கமலமுனி, சட்டமுனி, கருவூரார், சுந்தரானந்தர், வான்மீகர், நந்திதேவர், பாம்பாட்டி, போகநாதர், மச்சமுனி, கோரக்கர், பதஞ்சலி, தன்வந்திரி, குதம்பை, இடைக்காடர் எனறு பதிணெண் சித்தர்களின் பெயர்கள் இடம் பெற்று உள்ளன.

அகத்தியர் பற்றி கூறப்படாத புராணங்களே இல்லை. இவரின் மறுபெயர்கள் கும்பமுனி, குருமுனி, பண்டமிழ் மாமணி, சந்தன நூல் தமிழ் தந்தவர், குறியோன், அறிவன், முந்தண்டமிழ், தேர்முனி, தமிழர் கோமான், ஆதிமுனி, ஆகியவையாகும். இவர் பன்னிரெண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததாக, கூறுவார்கள். பல அகத்தியர்கள் இருந்திருக்க வேண்டும் என்பர் அறிஞர்கள்.

அகத்தியர் கடலைக் குடித்து வற்ற செய்தவர். சிவ, பார்வதி திருமணத்தின் போது உலகின் வட பாகம் தாழாமல் இருக்க உலகின் தென்பாகமான தமிழ் நாட்டிற்கு வந்தவர் (சிவனால் அனுப்பப்பட்டவர் என்று புராணம் கூறும்). திருத்தணியில் முருகப் பெருமானிடம் தமிழ் கற்றவர். தன்னை நாடி வந்து வணங்கிய இராம பிரானுக்கு மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்தவர் என்றும் புராணம் கூறும். தம்மிடம் இருந்த தெய்வீகம் பொருந்திய வில்லையும், கணைகள் நிறைந்த அம்புறாத்தூணியையும், இராமருக்கு நல்கியவர். ஓர் அகத்தியர் இயற்றிய நூல்கள், அகத்தியர் இருபத்தோராயிரம், அகத்தியர் பன்னீராயிரம், அகத்தியர் பரிபூரணம், அகத்தியர் ஆயுள் வேதம் (சித்த முறை), அகத்தியர் நயனவதி, அகத்தியர் குணபாடம், அகத்தியர் இலக்க சௌமியசாகரம், அகத்தியர் அமுத கலைக் ஞானம். அகத்தியர் செந்தூரம் முந்நூறு, அகத்தியர் வைத்திய காவியம் 1500 முதலியன.

பழம் பெரும் காலத்து மருத்துவ உண்மைகளை இன்றைய மருத்துவ மேதைகள் புரிந்து தெரிந்து கொண்டால் உலகம் முழுவதும் நன்மை அடையும். இயற்கை முறையே சித்த வைத்தியம்.

உணவே மருந்து! மருந்தே உணவு!! எனவே பக்க விளைவுகள் இல்லை!!!

வாழ்க சித்த மருத்துவம்!!

குமரிக்கண்ட ஆய்வு கட்டுக்கதையா?

(எவ்வி)

தமஅழ் நாட்டில் சிலர் தமிழர் வரலாற்றை மறைக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்திற்குத் தெற்கே இந்துமாக்கடலில் தொல்பழங்காலத்தில் நிலப்பகுதி இருந்து பின்னர் கடல்கோளால் மறைந்திருக்க வேண்டும் என்னும் "லெமூரியா" கொள்கையைக் கட்டுக்கதை என்றும் மனக் கோளாறு என்றும் அறிவியல் ரீதியில் ஆதாரம் அற்றது என்றும் கூறி நம் தமிழ் மக்களை மூளைச் சலவை செய்ய முனைந்துள்ளனர். இவ்வாறு லெமூரியாக் கொள்கையை மறுப்பதற்குத் தக்க சான்றுகள் காட்ட வேண்டாமா?

2 கி. மு. நூற்றாண்டைச் சார்ந்த புறநானூற்றுப் பாடல்கள். பின்வருவனவற்றில் கடல் கொண்ட தென்னாட்டில் இருந்த குமரி ஆறும் பஃறுளி ஆறும் குறிப்படப்படுகின்றன.

புறநானூறு 6 (பாண்டியன் பல்சாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பாடியது)

"வாடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணா அது தொன்று முதிர் பெளவத்தின் குடக்கும்"

(பழைய உரை :– குமரி – உட்குந்திறம் பொருந்திய குமரியாறு)

புறநானூறு 9 (மேற்சொன்ன பாண்டியனை நெட்டிமையார் பாடியது :–)

"செந்நீர்ப் பசும் பொன் வயிரியர்க்கீ ந்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"

கலித்தொகை 104–ல் வரும்

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடிடம் படப்
புலியோடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"

என்னும் அடிகளில் பாண்டியன் தன் நாட்டில் கடல் கொண்ட பகுதிக்கு ஈடாக சேர, சோழ மன்னர்களிடம் இருந்து சில பகுதிகளைக் கைப்பற்றியது குறிப்படப் படுகிறது.

3. சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் வரும் பிற்காணும் வரிகள் இக்கடல் கோளை மேலும் விரிவாகக் குறிப்பிடுகின்றன :-

"அடியிற்றன்னளவரசர்க்கு உணர்த்தி
வடிவேலெறிந்த வான் பகை பொறாது
பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுகடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங்கொண்டு
தென்றிசையாண்ட தென்னவன் வாழி"

சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லாரும் இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் நக்கீரரும் (இவர் சங்கலால நக்கீரரினும் வேறானவர்) கி. பி. 10ஆம் நூற்றாண்டை ஒட்டி வாழ்ந்தவர்கள். இவ்விரண்டு உரையாசிரியர்களும் இக் கடல்கோள் செய்தியை மேலும் விரிவாக்கிப் பின்வருமாறு உரைக்கின்றனர். அதாவது (கடல் கொண்ட) தென் மதுரையில் (முதற் சங்கம் சுமார் 4440 ஆண்டு செயல் பட்ட பின்னர்) கி. மு. 6000-ஆம் ஒட்டி முதற்கடல்கோள் ஏற்பட்டு ஏழ்தெங்க நாடு, ஏழ் மதுரை நாடு, ஏழ் முன் பாலை நாடு, ஏழ்பின்பாலை நாடு, ஏழ் குன்ற நாடு, ஏழ் குணகரை நாடு, ஏழ் குடகரை நாடு, ஆகிய நாற்பத்தொன்பது நாடுகள் (குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடைப்பட்டவை) கடலுள் மூழ்கின. பின்னர் (இடைச்சங்கம் கபாடபுரத்தில் சுமார் 3700 ஆண்டு செயல்பட்டு முடிந்த பின்) கி.மு. 2000-அய் ஒட்டி இரண்டாம் கடல் கோள் ஏற்பட்டு பாண்டிய நாட்டின் எஞ்சிய பகுதிகள் கடலுள் மூழ்கின. அதன் பின் கடைச்சங்கம் மதுரையில் நிறுவப்பட்டு கி. மு. 1800லிருந்து செயல்பட்டது. இவையே கடல்கோள் பற்றி அடியார்க்கு நல்லாரும் இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும் கூறுவனவாகும்.

4. இலங்கைப் புத்தபிட்சுகள் எழுதிய "இராஜவளி" நூலில் துவாபரயுகத்தில் ஒரு கடல் கோளும் பின் கி.மு. 300 ஐ ஒட்டி ஒரு கடல் கோளும் ஏற்பட்டதாகவும் பின் குறிப்பிட்ட கடல்கோளில் இலங்கை கெலானியா நாட்டில் 11/12 பங்கு (ஒரு லட்சம் பட்டணங்களும், 970 மீனவர் கிராமங்களும், முத்துக் குளிக்கும் ஊர்கள் 400ம் உட்பட) கடல் கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

5. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் எர்னஸ்ட் ஹெக்கல் (Ernst Haeckel) என்பவரும் எட்வார்ட் சூயஸ் (Eduard Suess) என்பவரும் பண்டைக் காலத்தில் இந்துமாக் கடலில் ஒரு பெருங்கண்டம் இருந்து பின்னர்

அது கடலில் மூழ்கியிருக்க வேண்டும் என்று கூறிவந்தனர். அக்கண்டத்திற்கு "லெமூரியா" என்றும் "காண்ட்வானாலாந்து" என்றும் அவர்கள் பெயர் சூட்டினர். 1915 ஆல்பிரட் வெஜினர் (Alfred Wegner) என்பவர் "கண்டம் நகர்வுக் கொள்கையை" வெளியிட்டார். இப்பொழுது அண்மைக் கால அறிவியல் ஆராய்ச்சிகள் கண்டம் நகர்வுக் கொள்கையை முழுமையாக ஏற்றுக் கொள்கின்றன. இந்தப் பூமி உண்டானது இன்றைக்குச் சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன் ஆகும். உயிரினங்களை தோன்றி 350 கோடி ஆண்டுகள் ஆகின்றன. மனிதன் என்று குரங்கினத்திலிருந்து பிரித்துக் கூறத்தக்க உயிரி (Homo Australopithecus - தென் கோளக் குரங்கு மாந்தன்) தோன்றியது சுமார் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்தான். மொழி தோன்றியது சுமார் ஒரு லட்சம் ஆண்டுகட்டு முன் ஆகும். இப்பொழுது பூமியில் உள்ள கண்டங்கள் அனைத்தும் சுமார் 22-1/2 கோடி ஆண்டுகட்டுமுன் ஒன்றாக இணைந்து இருந்தன (அப்பொழுது தென் அமெரிக்கா, தென் இந்தியா, ஆஸ்திரேலியா ஆகியவை ஒன்றையொன்று ஒட்டி ஒரே நிலப் பகுதியாக இருந்தன) என்பதும் பின்னர் அப்பெருநிலப்பகுதி உடையத் தொடங்கிப் பல்வேறு கண்டத்திட்டுப் பகுதிகள் (Continental plates) பிரியத் தொடங்கின என்பதும். சுமார் 16 கோடி ஆண்டுகள் அக்கண்டத்திட்டுகள் பூமியின் பரப்பில் பயணம் செய்தபின் இன்றைக்குச் சுமார் 6 கோடி ஆண்டுகட்கு முன் பல்வேறு கண்டங்களும் ஏறத்தாழ தற்போழுதுள்ள நிலையை அடைந்தன என்பதும் தற்போது அறிவியலார் ஏற்றுள்ளதாகும். (இன்றைக்கு 18 கோடி ஆண்டுகட்கு முன் அண்டார்டிகாவை ஒட்டி இருந்த தென்னிந்தியா சுமார் 13 கோடி ஆண்டுகள் மெதுவாக வடக்கு நோக்கிப் நகர்ந்து - அதாவது சுமார் 8300 கிலோ மீட்டர் வடக்கு நோக்கி பயணம் செய்து கி.மு. 5 கோடி ஆண்டை ஒட்டி ஆசியாவுடன் மோதி இணைந்திருக்கிறது. அவ்வாறு மோதி இணைந்த இடத்தில் மோதல் காரணமாக கடந்த ஒரு கோடி ஆண்டுகளுக்குள் ஏற்பட்டதே இமயமலையாகும்) இந்தக் கண்டத்திட்டு நகர்வுக் கொள்கை (Plate Techtonics) பற்றி "நகரும் கண்டங்கள்" (Continents Motion; by Waler Sullivan; Macmillan; London 1977 pages XIV 399) என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.

6. தற்பொழுது அறிவியலறிஞர்கள் முழுமையாக ஏற்றுள்ள கண்டத்திட்டு நகர்வுக் கொள்கையானது பழங்காலத்தில் ஒரு கண்டம் அளவுக்கு பெரும் நிலப்பகுதி எதுவும் இருந்து அது கடலுள் மூழ்கி மறைந்துவிட்டது என்பதை ஏற்பதில்லை. ஆனால் இப்பொழுதுள்ள நிலப்பகுதிகளை ஒட்டிப் பலநூறு மைல்கள் கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகள் நிலமாக இருந்தன என்பதையும் சுமார் 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய பனிக்கட்டி காலங்களின் (Ice ages of the Pleistoene period) இறுதியில் கடல்மட்டம் பலநூறு அடிகள் உயர்ந்தது காரணமாக அப்பகுதிகள் கடலுள் மூழ்கிவிட்டன என்பதையும் அறிவியலறிஞர்கள் முழுமையாக ஏற்கின்றனர். அவ்வாறு மூழ்குவதற்கு முன் நிலப்பகுதி இப்பொழுதுள்ளதை விட கால் பகுதியாவது கூடுதலாக இருந்திருக்க

வேண்டும் என்பது ஏற்கப்பட்டுள்து. கடந்த 10 ஆயிரம் ஆண்டுகளுக்குள் குறைந்தது இரண்டு தடவை (பூமியில் உள்ள பனிக்கட்டிகள் திடீரென பெருமளவில் உருகியதனால்) கடல்மட்டம் உயர்ந்து பலநூற்று மைல் கடலை ஒட்டிய பகுதிகள் கடலுள் மூழ்கின. அவ்வாறு தமிழகத்தின் தெற்கில் கடலுள் மூழ்கிய பகுதிகளையே (அவற்றுள் பெருந் தீவுகள் சிலவும் அடங்கியிருக்கலாம்) புறநானூறும், கலித்தொகையும், சிலப்பதிகாரமும் பழைய உரைகளும் குறிக்கின்றன என்று கொள்வது எவ்வகையிலும் இன்றைய அறிவியலுக்கு முரண் ஆனது அல்ல. ஏற்புடையதுதான். அவ்வாறு மூழ்கிய பகுதிகளை குமரிக்கண்டம் அல்லது லெமூரியாக் கண்டம் என்பதற்குப் பதிலாகக் கடல் கொண்ட தமிழகப் பகுதிகள் என்றோ கடல் கொண்ட தென்னாடு என்றோ அழைப்பது மிகப் பொருத்தமானதாகும். குமரி நாடு, லெமூரியா நாடு என்பதும் ஏற்கத்தக்கதே.

7. கடல்கொண்ட தென்னாட்டில் தமிழ்தோன்றி வளர்ந்தது என்பதுடன் மொழி அடிப்படையில் மாந்தனின் முதல் தாய்மொழி தமிழேயாகலாம் என்பதும் தேவநேயப் பாவாணர், இரா மதிவாணன் (இலைமூரியா முதல் அரப்பா வரை 1977 பக்கம் 268) போன்ற தமிழ் அறிஞர்களின் கொள்கையாகும். அந்த லெமூரியப் பகுதி பற்றி அலெக்சாண்டர் காண்ட்ரடாவ் என்பவர் "முப்பெருக்கடற்புதிர்கள்" (Riddles of the three Ocean; Progress Publishers; Mascow - 1974) - என்ற நூலில் கூறுவது வருமாறு :-

"லெமூரிய வரலாறு மனிதன் தோன்றுவதற்கு முற்பட்ட (மனிதனுக்கு மூதாதையரான குரங்கினங்களின்) காலத்தோடு முடிந்து விட்டதா? அதற்கடுத்து மனிதன் தோன்றிய காலமாகிய இன்றைக்கு 30 லட்சம் ஆண்டுகளுக்கு முன் இருந்து உள்ள காலத்திலும் லெமூரியாவின் எஞ்சிய பகுதிகள் இந்துமாக் கடலுள் இருந்து இருக்கலாமோ? மனிதனுக்கு மூதாதையரான குரங்கினங்கள் அங்கிருந்து தோன்றிப் பிற கண்டங்களுக்குப் பரவியது போல மாந்தன் பிறந்தகமும் லெமூரியாவாக இருந்திருக்கலாமோ? இந்து மாக்கடலின் அடியில் ஆய்வு செய்தால் தான் இவற்றுக்கு விடை காணலாம்.

இதில் வியப்புக்குரியது பின்வருவதுதான். மனிதனின் பண்டைய நாகரிகங்கள் பலவற்றையும் ஆய்வு செய்தால் தோன்றும் ஏராளமான புதிர்களை விடுவிக்க வேண்டுமானால் இந்து மாக்கடலில் லெமூரியா என்னும் ஒரு கணிசமான பரப்புள்ள நிலப்பகுதி இருந்து பின்னர் கடலுள் மூழ்கியிருக்க வேண்டும் என்றும் அப்பகுதியில் லெமூர் குரங்கள் மட்டும் அன்றி நாகரிகத்தில் சிறந்த மனிதர்களும் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் கொண்டாக வேண்டியிருக்கிறது.

8. கான்ரடாவ் "புதிர்கள்" என மேலே குறித்துள்ளவற்றில் பின்வருவனவும் அடங்கும். சுமேரிய நாகரிகத்துக்கு முந்திய உபைத் மொழியும் எலாம்

(Elam) மொழியும் திராவிட மொழிகளைப் போன்றவை. இந்தியாவில் திராவிட மொழிகள் தெற்கிலிருந்து வடக்கே பரவியவையாகத் தோன்றுகின்றனவே யொழிய வடக்கிலிருந்து தெற்கே வந்தவையாகத் தோன்றாமை, சுமேரிய நாகரிகத்திலும் எகிப்திய நாகரிகத்திலும் தங்கள் நாட்டுக்குத் தெற்கிலிருந்து வந்தவர்களால் நாகரிகம் கொண்டுவரப்பட்டதாகப் பரவலாகக் கூறப்படுவது - ஆகியவை அப்புதிர்களாகும். ஆரியர் வருகைக்கு முன் இந்தியா வெங்கும் பரவியிருந்த தமிழர் நாகரிகத்தின் ஒரு கூறே சிந்து வெளி நாகரிகமாகும். தமிழுக்கும் தமிழருக்கும் முதன்மையும், தொன்மையும், சிறப்பும் நிறுவவல்ல சான்றுகளைப் பல முனைகளிலும் கீழறுப்பு வேலைசெய்து ஒழிக்க கடந்த 3000 ஆண்டுகளுக்கு மேலாக செய்து வரும் இடைவிடாத சூழ்ச்சிகளின் ஒரு சிறு பகுதியே கடல் கொண்ட தென்னாட்டு கொள்கையை அதாவது குமரிக் கண்ட கொள்கையை நையாண்டி செய்வதாகும்.

தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை தமிழர்களின் தொல் பழங்கால வரலாற்றுச் சான்றுகள் கிட்டவல்ல, அகழ்வாராய்ச்சியில் (ஆதித்த நல்லூர்; கொற்கை, பூம்புகார், போன்ற இடங்களில்) ஈடுபடுவதுடன் ஆழ்கடல் ஆய்விலும் ஈடுபடுத்தப் பட வேண்டும்.

சிந்துவெளி நாகரிகம் பற்றிய "வரலாற்று மறைப்பு" வேலைகளுக்கு மறுப்பு

நாதன்

சிந்துவெளி நாகரிகத்தைக் குறித்து கடைப்பிடித்து வரும் கொள்கை என்ன? அந்நாகரிகம் பற்றிய உண்மைகளை மூடிமறைத்தல், அந்நாகரிகம் திராவிடர்களுடையது என்று அறுதியிட்டு இங்கிலாந்து முதலிய அயல் நாட்டுப் பள்ளிகளின் வரலாற்றுப் பாடநூல்கள் கூடக் கூறிவருகிற போதிலும் தமிழ்நாட்டு இந்திய பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் படிக்கும் வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் இவ்வுண்மை வந்துவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுதல்.

2. இந்தியாவில் ஏறத்தாழ கி.மு. 1500 முன் நாவலந்தீவெங்கும் அதாவது இந்தியாவெங்கும் பரவியிருந்த தமிழர் நாகரிகச் சின்னங்களில் சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் "சிந்துவெளி நாகரிகம்" என்று அழைக்கப்படும் நாகரிகத்தின் காலம் கி. மு. 5000-கி.மு. 1200 ஆகும். சிந்து ஆறுபாயும் சமவெளியில் பஞ்சாபில் (1920-ல்) ஹரப்பாவிலும், சிந்து மாகாணத்திலும் (1922-ல்) மொஹஞ்சதாரோவிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதையுண்ட நகரங்கள் மட்டுமன்றி அந்நாகரிக கால நகரங்களின் சின்னங்கள் பின் ஆண்டுகளில் டெல்லியை ஒட்டி ஆலம்கிர்புர், ராசத்தானத்தில் கலிபங்கன், குசராத்தில் லோதால் போன்ற நூற்றுக்கணக்கான வேறு இடங்களிலும் கிடைத்துள்ளன. சிந்துவெளி அகழ்வாய்வு பற்றிய விரிவான அறிக்கையை சர் ஜான் மார்ஷல் 1931ல் வெளியிட்ட பொழுதே திட்டவட்டமாக அந்நாகரிகம் ஆரியருடையது அல்ல என்பதை நிறுவினார்.. "தொடக்ககாலத்தில் வேத மொழி (பின்னர் இதிலிருந்து சமஸ்கிருதம் உருவாக்கியது) போன்ற இந்தோ ஐரோப்பிய மொழிகளைப் பேசியவர்கள் நாடோடிகள். பண்டைக் காலத்தில் பல நூறு ஆண்டுகளாக அவர்கள் கைங்கர்யம் அவர்கள் எந்தெந்த நாடுகளுக்குச் சென்றாலும் அங்கெல்லாம் ஏனையோர்களுடைய சிறந்த நாகரிகங்களைச் சிதைப்பது. பின்னர்க் காலப்போக்கில் படிப்படியாக தாங்களும் நாகரிகம் அடைவது என்பதேயாகும்" இதுவே ஆரியர்களைப் பற்றி மேனாட்டு அறிஞர்களுடைய முடிவாகும்.

3. சொல்லப் போனால் 1931ல் மார்ஷல் ஆய்வறிக்கை வெளிவருவதற்கு முன் 1932ல் தான் வெளியிட்ட "வேளாளர் நாகரிகம்" என்னும் நூலிலேயே மறைமலையடிகள் ஆரியர் நுழையும் பொழுது வடநாட்டில் அரசாண்ட தமிழரசர்களாகிய வேளிர்கள் பல நகரங்கள் அமைத்து வலிய கோட்டைகள் கட்டி வலிமையும் நாகரிகமும் உடையவராய் விளங்கினரென்பது அவர் பால் வந்தெய்திய ஆரியரே தம்முடைய

இருக்குவேதப் பாட்டுக்களிற் கூறுமாற்றால் நன்கு விளங்குவதை விரிவாகக் சொல்வதுடன் ஆரியக் கடவுளர் தலைவன் இந்திரனே ஆடு மாட்டு இறைச்சிக் குவியலைத் தினறு சோமச்சாற்று மதுவைத் தொட்டியாகக் குடித்துவிட்டு தாசர்கள் என்றும் அசுரர்கள் என்றும் பிசாசர்கள் என்றும் ஆரியர்களால் இழிந்துரைக்கப்பட்ட தமிழர் தம் நகரங்களையும் கோட்டைகளையும் அழித்தொழித்த "புரந்தரன்" தான் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

4. சிந்துவெளி நாகரிக முத்திரை எழுத்துக்கள் என்பவை சுமார் 800 "ஸ்டீயட்டைட்" (சவர்க்காரக்கல்) முத்திரைகளிலும் (ஒவ்வொன்றும் 20 மி.மீ x 30 மி. மீ) ஓரிரு செப்புப் பாத்திரங்கள் போன்றவற்றிலும் உள்ளவை. அவற்றில் உள்ள சொற்றொடர்கள் மொத்தம் சுமார் 2000. ஒவ்வொரு சொற்றொடரும் 1லிருந்து 20 சொல் எழுத்துக்கலைக் கொண்டது. அவை பழந்தமிழே என்று முதற்கண் (1936ல்) நிறுவிய பெருமை ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஹீராஸ் பாதிரியாரைச் சாரும். அவர் 14.3.42 அன்று அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு ஆற்றிய பின் நாவலர் இரா. நெடுஞ்செழியனின் புத்தகத்தில் "கீழே கையொப்பமிட்டுள்ள நான் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த திராவிடன்" என்று எழுதிக் கையொப்பமிட்டதை இக்கட்டுரையில் காண்க. பழந்தமிழர் நாகரிகமே கி.மு. 5000ஐ ஒட்டி "சுமேரியா", "எகிப்து" வழியாக மத்திய தரைக்கடல் நாடுகள் வரை (ஸ்பெயின் உட்பட) பரவியிருந்திருக்க வேண்டும் என்றும் அதன் காரணமாகவே இன்றும் ஸ்பெயினின் வடபகுதியில் பாஸ்கு (Basque) என்னும் திராவிட மொழி பேசப்படுகிறது என்பதும், பலுசிஸ்தானத்தில் இன்றும் பிராகுய் (Brahui) என்னும் திராவிட மொழி பேசப்படுகிறது என்பதும் ஹீராஸ் கொள்கையாகையால் அவர் தன்னைத் திராவிடன் என்று பெருமிதத்துடன் அழைத்துக் கொண்டார். பின்லாந்து நிபுணர் அஸ்கோ பர்போலா அவர்களே 1969ல் சிந்துவெளி முத்திரை எழுத்துக்களை பழந்தமிழ் மொழியாகப் படித்து ஆய்வறிக்கை வெளியிட்டவர்தாம்! இப்பொழுது கிடைத்துள்ள சான்றுகளை மட்டும் வைத்தக் கொண்டு அவ்வெழுத்துக்கள் தமிழ் (திராவிட) மொழி என்று மேனாட்டறிஞர்கள் எச்சரிக்கையாகக் கூறுகின்றார்களேயன்றி அவர்கள் யாரும் சிந்துவெளி எழுத்துகள் தமிழ் அல்லவென்றோ அவை ஆரிய மொழி என்றோ கூறவில்லை. ஆனால் ஆரியச் சார்பான இந்திய அறிவு ஜீவிகள் பி. பி. லால், எஸ். ஆர். ராவ் போன்றவர்கள் வல்லடி வழக்காக, சான்றுகள் கூறாமல் "சிந்துவெளி நாகரிகம் ஆரியருடையது என்றோ திராவிடருடையது என்றோ உறுதியாகக் கூறமுடியாது" என்று நெஞ்சாரப் பொய் சொல்லி வருகின்றனர். பர்போலோ போன்றவர்களும் ஹீராஸ் பாதிரியார் அளவுக்கு திராவிட மொழி மற்றும் இந்திய வரலாற்றில் ஆழ்ந்த பயிற்சி இல்லாமையால் சிலர் கிளப்பும் புழுதிப் படலத்தில் திணறித் திசை மாற்றப்படுகின்றனர்.

5. இந்த அறிவு ஜீவிகளைப் பற்றி ஜான்கே என்பவர் 1973ல் வெளியிட்ட "இந்தியாவுக்குள்" என்னும் நூலில் கூறுவது வருமாறு: "வடநாட்டில் உள்ள ஆரியர்கள் சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களுடையது என்ற வரலாற்றாசிரியர்களின் முடிவு அறவே பிடிக்கவில்லை. உண்மையைத் திரிக்க அஞ்சாத இந்த இந்தியர்கள் சிந்துவெளி நாகரிகம் ஆரியக் கலாச்சாரத்தின் பாற்பட்டதே என நிறுவ தவறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் நடுநிலையாளர்கள் ஆரியர்கள் நுழையுமுன்னரே ஹரப்பா, மொஹெஞ்சதாரோ நாகரிகம் தழைத்தோங்கியது என்பதையும் அந்நாகரிகத்தோடு ஆரியர்களுக்குள்ள ஒரே தொடர்பு அதை நாசப்படுத்த முயன்ற தொடர்புதான் என்பதையும் ஏற்கின்றனர்".

6. சிந்து வெளியில் செழிப்புற்றிருந்த பழந்தமிழர் நாகரிகத்தை ஆரியரே அழித்தனர் என்று தெள்ளத் தெளிவாகக் கூறும் பல்துறை அறிஞர்கள் கருத்துகளில் ஒரு சிலவற்றைச் சுருங்கக் காணலாம்.

சான்று நூல்கள்

1. "கேம்பிரிட்ஜ் தொல்பழங்கால வரலாறு" (1970) பக்கம் 130 "வட இந்தியாவில் பெரும் பகுதியில் திராவிடர்கள் வாழ்ந்தது நிச்சயம். குறிப்பாக சிந்து வெளியில் அவர்கள் வாழ்ந்து பின்னர் கி.மு. 1800 ஐ ஒட்டி ஆரியர்களால் தோற்கடிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

2. டி. பர்ரோ "சமஸ்கிருத மொழி" (1973) பக்கம் 30, "வடமேற்கு இந்தியாவுக்குள் ஆரியர் நுழைவும் சிந்து வெளி நாகரிக அழிவும் ஒரே சமயத்தில் நடந்திருக்கும். அவ்வழிவிற்கு ஆரியர்களே முக்கிய காரணம்".

3. டி. பர்ரோ "இந்திய கலாசார வரலாறு" (1975) என்னும் தொகுப்பு நூலில் எழுதியுள்ள "தொடக்க கால ஆரியர்" என்னும் கட்டுரையில் பக்கம் 25, "ஆரியர்கள் நுழையுமுன் வடமேற்கு இந்தியாவில் வாழ்ந்த தாசர்கள் அல்லது தஸ்யுக்களுடன் அடிக்கடி ஆரியர்கள் போரிட்டது பற்றியும் நாடு சொத்துக்களைக் கவர்ந்தது பற்றியும் வேதங்கள் அடிக்கடி கூறுகின்றன. அடிமைப்படுத்தப் பட்ட இந்த "தாசர்கள்" சிந்துவெளி நாகரிகத்தினரே யென்னும் கருத்தே முதன்மையானதும் ஏற்றத்தக்கதுமாகும். நகரங்களை அழிக்கும் "புரந்தரன்" ஆகிய இந்திரன், நகரங்களை அழிக்கும் அக்னி இவற்றைப் பற்றி அடிக்கடி வேதங்கள் கூறுகின்றன. சிந்துவெளி நாகரிக நகரங்கள் பலவும் நெருப்பால் அழிக்கப்பட்ட தடயங்கள் உள்ளன. எனவே சிந்துவெளி நாகரிக நகரங்களை அழித்தது ஆரியர் தவிர்க்க முடியாதது ஆகும். வென்ற நகரங்களை தாங்கள் வசிப்பதற்கு பயன்படுத்த ஆரியருக்கு ஆர்வமில்லை என்பதுமட்டுமல்ல நாகரிக நகர வாழ்க்கை மேற்கொள்வதற்கான பக்குவமான தொழில்நுட்ப கலாசார நிலையையும் அவ்வாரியர்கள் எய்தவில்லை".

4. மாலதி ஜே. செண்டுகே, "நாகரிக அசுரர்கள் – ரிக்வேதத்தில் ஹரப்பா மக்கள்" (அபிநவ் பிரசுரம் புதுடெல்லி, 1977, பக்கங்கள் 441)

சிந்துவெளி நாகரிக நகரங்களை அழிக்கத் தீயையும் வெள்ளத்தையும் ஆரியர் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்பதை இந்நூல் தெளிவாக நிறுவுகிறது. சிந்துவெளியில் தமிழர் கட்டியிருந்த அணைக் கட்டுகளை உடைக்கும் கைங்கர்யத்தை இடைவிடாது இந்திரன் செய்து வந்ததை பல இடங்களில் ரிக்வேதம் கூறுகிறது. (எடுத்துக் காட்டு – அம்பிலம் அபீஹீதம் யதாசிங், வ்ருத்ரம் ஜகன்வான் அபா தத்வவாரா) ரிக் 1.133.1–3ல் வரும் வைலஸ்தானம் என்னும் சொல்லுக்கு சயனர் பாஷ்யம் தரும் பொருள் "பிணமலை" ஆகும். முயன் ஜோதடோ (முயன் – பிணம், ஜோ – உடைய, தடோ–மலை) என்னும் சிந்திமொழிச் சொற்றொடருக்கும் பிணமலை என்பதே பொருள். (பின்னர் "முயன் ஜோ தடோ"வே "மொஹஞ்சதாரோ" ஆகியது) வைல என்பது ஆரியச் சொல் அல்ல என்கிறார் பரோ. வேள் – வேளகம் என்பதிலிருந்து வெலஸ்தானம்" வந்திருக்க கூடும். புறநானூறு 201ல் வேளிர் நெடுங்காலத்துக்கு முன் ஆண்டதாகக் கூறப்படும் "செம்பு புணைந்தியற்றிய சேணெடும் புரிசை" யானது சிந்துவெளி நாகரிக கால நகரமாக இருந்திருக்கலாம். சதபத பிரமாணத்தில் (III. 2.1.24) தேவர் – அசுரர் போரைப் பற்றிக் கூறும்போது மிலேச்சர்களாகிய அசுரர்களுடைய "வாக்"ஐ (பேச்சை) தேவர்கள் நெருப்பிலிட்டு ஆகுதி செய்ததாகவும் அப்பொழுது அசுரர்கள் "ஹெலயோ! ஹெலயோ! (ஐயோ, ஐயோ?) என்று கதறியதாகவும் கூறப்படுகிறது. அசுரர்களையும் அவர்கள் மொழி நூல்களையும் தீயிலிட்டுக் கொளுத்தியதை இது குறிக்கலாம். சிந்துவெளித் தமிழர்கள் எழுதுவதற்குப் (பனையோலை போன்ற) அழியும் பொருட்களைப் பயன்படுத்தியிருக்கலாம். அவை முற்றும் ஆரியரால் அழிக்கப்பட்டதனால் தான் இப்பொழுது (சில முத்திரைகள் தவிர) அவர்கள் எழுத்துக்கள் கிடைக்கவில்லை எனலாம். மற்றும் தமிழ்ச் சொற்களும் தமிழ்ச் சான்றோர் பாடல்களின் மொழி பெயர்ப்புகளும் வேதங்களில் சேர்க்கப்பட்டது. தாச, அசுர அரசர்களை பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் இந்திரன் ஆகியோர் வென்றது ஆகியவையெல்லாம் இந்நூலில் வேதங்களில் உள்ள ஆதாரங்களைக் கொண்டே விளக்கப்படுகின்றன.

5. டி.டி. கோசம்பி "பண்டைய இந்தியாவின் கலாசாரமும் நாகரிகமும் – வரலாற்றுச் சுவடுகள் (1986)

பக்கம் 71, இந்திரனாலும் ஆரியராலும் சிந்துவெளி நாகரிக அணைகள் உடைக்கப்பட்டதைத் தான் ரிக் வேதம் சுட்டுகிறது. புரந்தரனாகிய இந்திரன் அழித்த புரங்கள் சிந்துவெளி நாகரிக நகரங்களையே – இவைகளையெல்லாம் கோசம்பி நன்கு விளக்குகிறார்.

7. டாக்டர் பர்போலா சொன்னதாக வந்த கருத்து - அதாவது ரிக் வேதம் குறிப்பிடும் "தாசர்கள்" முன் அலைகளில் வந்த ஆரியர்களாகவே இருக்கலாம் என்பது - அவருடைய முடிந்த முடிவாகத் தோன்றவில்லை. ஹிட்லர் என்னும் ஆரிய வெறியன் ஆரியரல்லாதவர்களைக் குறிப்பிடும் போது இந்நூற்றாண்டில் காட்டிய அளவுக்கு வெறுப்பையும் வெறியையும் ரிக் வேதம் தாசர்கள் பாலும் அசுரர் பாலும் காட்டுவதால், "தாசர்கள்" போன்ற பல்வேறு பெயர்களால் கடும் பகைவர்களாக ரிக் வேதத்தால் வசைபாடப் படுபவர்கள் ஆரியர் அல்லாதவர்களாகவே இருக்க வேண்டும். டாக்டர் பர்போலா " தாசர்கள்" பற்றி மட்டும் சொன்ன ஒரு ஹேஷ்யத்தை வைத்து "(சிந்துவெளி நாகரிக) திராவிடர்களை ஆரியர்கள் விரட்டியடிக்கவில்லை" என்று பர்போலா முடிந்த முடிவாகச் சொல்லாத ஒன்றை அவர் மேல் ஏற்றிச் சொல்லுவது மேலே முதல் பத்தியில் சொன்ன சூழ்ச்சியின் ஒரு கூறாகவே தோன்றுகிறது. தொல்பொருளாய்வு, மொழியியல், வரலாறு போன்ற பல கோணங்களில் இருந்தும் பார்க்கும் பொழுது ரிக்வேதம் வசை பாடுவதும் அழிந்துவிட்டதாகக் கொக்கரிப்பதும் சிந்துவெளித் திராவிட மக்களையன்றி முன் அலைகளில் வந்து இருந்த தம் மொழி மற்றும் இனத்தவரல்ல என்பது குறித்து நடுநிலையாளர்களுக்கு ஐயம் எதுவும் தோன்ற வாய்ப்பில்லை. "தாசர்கள்" ஆரியர்களுள் முன் அலையினராக இருக்கக் கூடுமோ என்னும் பர்போலாவின் ஹேஷ்யம் அறிவுலகத்தால் இன்னும் ஏற்கப்படவில்லை. ஏற்கப்படவாய்ப்பும் இல்லை.

KUMARI KANDAM - A LAND OF GOLD MINES*

Prof. C.S. Mahadevan
Researcher - ISIAC

Of the researchers on Kumari Continent the name of Dr.N.Mahalingam leads those of others. The earliest researchers and writers were M.S.Poornalingam Pillay, Navalar Somasundara Bharatiyar, Kovai Chidambaranar and Dr.K.Appadurai. Each has looked at the concept from a particular angle. But each established an aspect of truth about the matter. However, the credit of having collected the earlier material and linking the same with his own findings goes to Dr.N.Mahalingam. One subject in which Dr.N.Mahalingam often enlightened me was about the Gold and Ruby mines of this submerged continent. In this article I shall throw some light on this aspect which was a product of his inspiration.

Kumari Kandam was famous for its Tamil Academics or Sangams which have been functioning for thousands of years prior to the Christian era. We have evidence of fourteen such Tamil Sangams or Academies. What does this name "Sanga" signify. We may compare them with our modern Universities. They were all residential in character where the scholars are researchers had facilities for boarding, lodging and recreation. Indeed they were residential Universities. It is said that students from China, Afghanistan, Egypt, Babylonia, Accadia, Ameriya, Persia, Lanka and other places went there to study and also for doing research. These Universities or Academies flourished thousands of years before the famous Nalanda and Taxila Universities.

The earliest of these academies or universities was the one which flourished on the banks of river Pahruli, in South Madurai or Ten Madurai which belonged to the period of pictorial writing, this academy or sangam prospered for 13,500 years from 30,000 B.C. to 16,500 B.C. and the King who was the Chancellor of this University or Academy or Sangam was Pandyan Nediyon. This great patron of literature was known by other names of which the most important are first Nilantharu Thiruvir Pandyan, Aazhi Vadivampalamba Ninra Pandyan and Pandiyan Makeerthi. Why was he known by more than one name. Each name refers to a particular achievement of his. In ancient times, kings were men of exemplary abilities who had distinguished themselves in various walks of life. In each field of knowledge their proficiency was of a high order. So, the scholars

* Copy Right - ISIAC, Sathur Sekaran is permitted to reproduce in this Souvenir

as well as the people looked upon them as great leaders. The King's job was not merely to protect the people, but also to guide them in every way. So he was considered as a leader, teacher, and guru. They set ideal examples in everything so that people could follow them.

The first Nilantharu Thiruvir Pandyan was a great scholar himself whose proficiency in Tamil was laudable. So the people honoured him. The scholars too did so. Hence he was the chancellor of the first Sanga or University. How was Kumari Kandam of his time. We do not have adequate evidence about his reign even though we have some information about his literary achievements. Most of the records have been either lost or got submerged in the first known deluge (Ooli). Even on the literary side we have little information on the names of the works. There is one point on which subsequent literary works give reference and that is about the poet honoured and that was the Pandya King himself. Azhivadivampalamba Ninra Pandya's descendants ruled Tamilnadu for about 13,500 years.

There was the most famous river called **Pahruli** which originated from Mount **Meru** which was then considered as a boundary between **Peruvala Nadu** and **Oli Nadu** and flowed eastwards. While this Siva Pandya King's southern boundary was Oli Nadu, the northern boundary was this river Pahruli. Between these boundaries there was another river called Kumari and there was the city of Ten Madurai. This description occurs in the work of Adiyarkkunallar.

The river Pahruli was not a natural river. It was an artificial one which was dug during by the first great Siva Pandya king called King Nediyon of whom we mentioned earlier. One Madurai Kanchi Adigalar has stated that Nediyon, the first Nilantharu Thiruvir Pandyan dug this river Pahruli from Mount Meru for making the Paruvala Nadu agriculturally prosperous. On the banks of the river, he built a beautiful city called Ten Madurai and after making it the capital of his empire governed the three kingdoms of Oli Nadu, Peruvala Nadu and Kumari Nadu. This king was thus a great emperor.

It was at Ten Madurai that he convened a great Sanga or organised University and extended a patronage for Tamil literature. This has been mentioned in the work "**Kumari Kandam**" by K. Appadurai. But there is some confusion here. Dr. Appadurai has confused Kumari Kandam with Lemuria. In his over anxiety to do research on Kumari, he forgot the fact that Kumari was in the Indian Ocean and Lemuria was in the Pacific. May be at one time part of Lumuria was in Kumari Continent. But an important point to be noted is that while

the Kumari people were highly civilized, the Lemurians were not at all civilized.

However, there is a literary reference in Puram which says by Nettimiyar which states that a successor of Nilantharu Thiruvir Pandya called, "Pandya Palkalaisalai Mudukudumi Peruvizhuthi" belonged to the dynasty of Nediyon who organized an Academy or University. Whatever might be the details, it is certain that the king who ruled over Kumari Kandam were great patrons of literature. His noble traits were:

What do these lines indicate the following.

1. Possession of a lot of red coloured gold dust which he liberally gave away to poets, scholars and common people
2. He gave this gold dust to actors and musicians liberally for encouraging literary activities.
3. The three retnas of Tamil Koothar, Panar and Pavalar were described by them Variriyar which was an ancient Tamil chalochial expression.
4. The same emperor conducted a festival for Muthamizh beyond river Kumari.

Emperor Nediyon, like king Solomon, of later times, was a rich king who possessed gold mines as well as Ruby mines. Mount Meru must have been in Peruvala Nadu. It must have had 49 peaks. That is what later literary works say. One of the peaks of Meru Mount was called Manimalai. It is near this Manimalai there was a big river called Peraru. It was flowing in the land between the rivers Pahruli and Kumari. Peruvala Nadu was made fertile by this Peraru. Also near this Manimalai there prevailed the famous Ruby mines which supplied rubies all over the world. It is said that every Ruby found in different Parts of the world originated from these Ruby mines. These mines produced nine types of Rubys originally called

Manipadumali, it later came to be known as Manimalai or Mount mani.

Another rich area was the Meru Hills which was noted for its gold mines. In this mount there were a number of gold-fields. The mines were exploited by the Great Pandya King and his successors. So, in Kumari Kandam gold was not a scarce commodity. The precious metal was in abundance. Gold was available in rocks. People used the metal for making vessels. If somebody rolls in the Meru Hills, gold dust will stick to his body. Like the mines of king Solomon, the gold mines of Nediyon were famous. The abundance of gold was indicated by the proverb "even the crows of Mount Meru were golden feathered". It is said there is CIA report that USA's interest in Diego Garcia was mainly because of their plan to dig the gold from the submerged Kumari and in ancient times, Diego Garcia was part of the Pandya Empire. Sage Valmiki tells us that Ravana's Fortress was made of solid gold bricks. His Lanka has been located by oceanic archaeologists on the equator near Madagascar which was part of Kumari Kandam. There is also a scandal that most of the gold had been removed by US military as well as by oceanic explores of USSR and USA. Some of these facts are highly incredible. Anyway they are interesting for a researcher.

Reverting to the gold mines of Kumari Kandam there is information that the Mangolians of ancient China worked as labourers in these gold mines. It is said thousands of labourers worked in these mines especially in the deeper ones. If one looks at the mines from the peak they looked like gold digging ants. The sight was beautiful. A long line of gold coloured ants were seen moving from above.

Thus in B.C. 30,000 the Tamil country then called as Kumari Kandam was prosperous not only in civilization, but also in language development, mining industry and even pearl fishery. These apart, the ruling class was very kind to the people. They worked for the people and made them happy and prosperous. The king was like a father to the people. Thats why statues were erected for those kings which in due course of time became temples.

There are one or two controversial points regarding the period mentioned in literature of later times which I would like to clarify.

In Tholkappiam, in the commentary on Payiram Nachinarkkinihyar has given a reference about the Emperor Azhivadivam-Palampa Ninra Pandyn in which it is stated that this "king of kings" ruled for 24,000 years. The period given is highly incredible as no king could

have lived for such a period. It is like saying that king Dasaratha had 60,000 wives. Actually it should have been that the Great Pandya king belonged to the dynasty of rulers "who ruled or reigned 24,000 years ago". When the information was transcribed from palm leaf, instead of "ago" the word "for" would have crept in.

Writers like Swamy Vipulananda have mentioned about the development of Tamil literature, drama, music and so on in his great work **Yazh Nool** on page 31 and for want of space I am not reproducing it. There are also references in **Kali Thokai-104**, about the "King of Kings". Again in **Silappadikaram** in **Kadukon Kathai** there are detailed references about Nilantharu Thiruvir Pandiyan. My surmise is that this "King of Kings" ruled over the whole of then known India. He must have been a mighty emperor, not an ordinary king. Towards the end of 16,000 B.C. there must have been a deluge and the capital of the Siva Pandyas could have been shifted. These are possibilities. More research is needed. Scholars will do well to probe further into this matter.

--oOo--

ON THE ORIGIN OF SPEECHES

Patterns of genetic development are almost identical to those of human language, according to a new study which suggests a common root - Steve Connor

For years, linguists have attempted to compile an accurate family tree of the world's many languages. More recently, geneticists have done something similar with human genes and have constructed a family tree of peoples, races and tribes. What emerges from these separate studies is that the two family trees, for both languages and human genes, look more or less identical.

Geneticists believe the evidence supports the view that all the varied peoples of the world, and the tongues they speak, derive from a common ancestral tribe that lived in Africa more than 100,000 years ago. Furthermore, because geneticists can calculate how long it has taken for genes to change over time, it is possible to estimate the time at which branches of the tree of humankind separated.

Luigi Luca Cavalli-Sforza, professor of genetics at Stanford University in California and a pioneer in this field, explains in the current Scientific American why he began this line of research. "I started thinking about a project so ambitious it seemed almost crazy; the reconstruction of where human populations originated and the paths by which they spread throughout the world."

The decipherment of Dr. Madhivanan (announced in THE SPRING OF THE INDUS CIVILISATION, Er. M. Ramachandran and Dr. R. Madhivanan 1991) seems to be the most acceptable of the decipherments presented so far, emanating as it does from a very competent scholar in the field of Tamil and Dravidian etymotogy. He has read the inscriptions on Indus Valley seals as mainly Tamil proper names congurent with those in the ancient Tamil literature and some with unusual Tamil proper names found even now.

--oOo--

SELECT BIBLIOGRAPHY

(Annotated)

on

INDUS VALLEY CIVILISATION

and

KUMARIKKANDAM

This select bibliography has been arranged chronologically under the following classification

i. Reports on excavations and works on Indus Valley Civilisation.

ii. Origin of Tamil and Tamilians and place of Indus Valley Civilisation in History.

iii. Culture, Arts etc. in Indus Valley Civilisation.

iv. On the primeval language of man and on the Primacy of Tamil.

v. On Kumarikkandam.

vi. Decipherment of the Indus script.

In annotating the entries the aim has been to give authentic quotations from accepted scholars of International standard, of which many of us might not be aware. A full bibliography of Indus Valley Civilisation (books and articles) will run to thousands of entries and will require a bulky volume. The present compilation is highly selective and will it is hoped that the appetite of the informed lay reader to go deeper into the fascinating field of "rendering unto Tamil, the things that are Tamil's "which has numerous sub-divisions each worth a lifetime of devoted labour.

I. Reports on excavations and works on Indus Valley Civilisation.

Marshall, J (Ed) -- **Mohenjodaro and the Indus Civilisation;** Arthur Probsthain; London; 1931 (3 vols)

Mackay, E.J.H. -- **Further Excavations at Mohenjodaro** New Delhi; 1937 (2 vols)

Chanhudaro excavations; New Haven; 1943

Vats, Madho Sarup -- **Excavations at Harappa**: Calcutta, 1940 (2 vols)

Rao, S.R. -- **Lothal, A Harappan Port Town**; Archaeological survey of India; New Delhi; 1979

Wheeler, Sir Mortimer -- **Five thousand years of Pakistan - an Archaeological outline**; Christopher Johnson; London 1950; pp 150 plates

The Indus civilisation (III Edn) Cambridge University Press; 1968; pp 144; plates

Dales, George -- The mythical massacre at Mohenjodaro; **Expedition** 6-3; 1964 pp 26-34

Allchin, Bridget and Raymon -- **The birth of Indian Civilisation - India and Pakistan before 500 BC**; Pelican; 1968; pp 365

Shendge, J. Malati -- **the civilised demons -- the Harappans in Rg Veda.**; Abhinav publications; New Delhi 1977 pp xv; 441

Floods and the decline of the Indus civilisation pp 219-263 of Annals of Bhandarkar Oriental Research Institute, Poona; LXXI; 1990.

Jansen, Michael -- Mohenjodaro, city of Indus Valley; pp 161-169 of **Endeavour** (New series) Vol 9-4; 1985

Possehl, Gregory L. (Ed) -- **Ancient cities of the Indus**; Vikas; New Delhi; 1979

Anthology of Articles; contains also a massive bibliography on Indus Civilisation.

Possehl, Gregory L and M.H. Raval -- **Harappan Civilisation and Rozdi** IBH Publishing co.; New Delhi 1989; pp 197; plates

Rao, S.R. -- **Dawn and Devolution of the Indus Civilization**; Aditya Prakashan; New Delhi 1992; Rs.1600 (Identifies the language of Indus Valley seals as Indo - Aryan)

Velu, Kuruvikkarambai -- **Tamil kingdom of Harappa**; Valavan Pahhippagm; Madras-20; 1992; pp 12

II. *Origin of Tamil and Tamilians and place of Indus Valley Civilisation in History*

Maclean, C.D. -- **Manual of the Administration of the Madras Presidency** Vol 1; 1885

Taking the Dravidians as a whole there is no evidence of a descent from the north. The inhabitants of the extreme south of the peninsula and those shut in by the mountains of the Western coast show characteristics which are probably older and more *unique than those of any other nation* in the world which pretends to civilisation. As far as present evidence goes however they are indigenous to India, and perhaps specially indigenous to southern India. The Dravidian terms indicating direction which must be very primitive are derived from the configuration of the southern peninsula. The east is "Kizhakku" or "down" and the west is "Merku" or "up"; that is to say the country sloping to the coast and the country rising to the western ghauts.

SESHA IYENGAR, T.R. -- **The Ancient Dravidians:**

The Tamil University Publishing house; Madras 1925 PP XIII; 254

The fact that the Dravidian languages have borrowed Sanskrit words -- or rather, to speak more correctly, that Aryan colonists have introduced Sanskrit worlds into the Dravidian vocabulary (cannot prove the Sanskrit origin or Dravidian languages)

It can be asserted that the subsequent development of the uncultured Vedic tongue which resulted in Sanskrit was owing to the influence of the highly civilized Dravidian, when the former came into contact with the latter.

It was proved years age by Dr. Taylor that a Tamiloid language now represented by its most cultivated branch in the South constituted the original staple of all the languages of India.

SRINIVASA AIYANGAR, P.T. - **History of the Tamils; 1929;**

It may therefore be taken as fairly certain that the Tamils were indigenous to South India.

RAMACHANDRA DIKSHITAR, V.R. -- **The origin and spread of the Tamils**

The Adyar Library, 1947; pp 110

"the so-called Mediterranean race had its origin in peninsular India which was a part of the original Dravidian home which was in the submerged continent that connected south India with Africa, when the Indo-Gangetic basin had not probably been formed. The Tamils have no tradition whatsoever that they are an alien people who migrated at a remote period of their history. On the other hand there is everything in favour of the indigenous origin.

AUROBINDO GHOSH - **The Secret of the Veda** (pp 551-81: Appendix - The origin of Aryan speech)

"Tamil vocables proved the missing link in a family of connected words. And it was through the Dravidian language that I can first to preceive what seems to be the true law, origins and, as it were, the embryology of the Aryan tongues. The original connection between the Dravidian and the Aryan

tongues was far closer and more extensive than is usually supposed and the possibility suggests itself that they may even have been two divergent families derived from one lost primitive tongue".

FURER HAIMENDORF, G. Von. -- New aspects of the Dravidian problem

TAMIL CULTURE, Vol II, 1953 PP 127-135

"The Megalithic builders have been recognized as the primary speakers of Dravidian languages"

(On Megaliths see: Ramachandran K.S. -- A BIBLIOGRAPHY ON INDIAN MEGALITHS; Tamilnadu State Department of Archaeology; Madras 1971; pp 184; contains 369 entries)

LAHOVARY, N -- **DRAVIDIAN ORIGINS AND THE WEST**; Orient Longmans; Madras 1963; pp 419

"From India to the Atlantic there extended, some six thousand years ago, a continuous block of the same type of polysynthetic and *mostly suffixal languages, which shared, to a varying degree, a partially* common vocabulary. Dravidian, Elamite, Sumerian, Hurri, Caucasian and without doubt, other Asiatic languages, such as Haldi and Hatti, formed thus a continuous chain of more or *less related tongues with a very particular structure*".

"Dravidian was related, not only to *Basque*, but to *all those pre-Indo European* languages of the ancient Western World".

"Even *if we find a particular root in many or may* be all the Indo-European languages, this does not imply necessarily that it is of Indo-European origin. Should this same base occur, in fact, in an Asiatic or African language where no Indo-European origin can be presumed, it is evident *that it can only be a loan word in Europe*".

Lockwood, Douglas -- **We the Aborigines**; *Cassell*; *Australia*; 1963

"All Australian aborigines are supposed to be descended from Dravidians who migrated about 15000 years ago from India and Ceylon".

RAMANATHAN, P. -- Irunkovel and Kottai Velalar, the possible origins of a closed community; **BULLETIN OF THE SCHOOL OF ORIENTAL AND AFRICAN STUDIES**; University of London; 1969; XXII - 2; PP 323 -343

Shows that the descendants of Irunkovel of PURANANURU (who was mentioned by Kabilar as descended from Ancient Velir who ruled Dwaraka) are even now living in Tirunelveli district of Tamilnadu.

DAY, DAVID HOWARD -- Links between Ur and the Indus; **JOURNAL OF TAMIL STUDIES**; II-2; October 1970

MACALPIN, D.W. -- Towards Proto-Elamo Dravidian"; LANGUAGE 50; 1974 -- Proto - Elamo Dravidian, The Evidence and its implications; **TRANSACTIONS OF THE AMERICAL PHILOSOPHICAL SOCIETY** 71-3; Philadelphia 1981.

KONDRATOV, Alexander -- **THE RIDDLES OF THE THREE OCEANS**; Progress publishers; Moscow; 1974; pp 267. gives a lucid and unbiased summary of the arguments in favour of the primacy of Tamil and Tamilian culture.

BURROW, T -- The eariy Aryans at pp 20-29 of A.L. Basham (Ed):

A CULTURAL HISTORY OF INDIA, Clarendon Press; Oxford 1975

"It is clear from the material remains that the Indus civilisation was in certain respects superior to that of the Aryans, In particular it was a city civilisation of a highly developed type, while by contrast city life was unfamiliar to the Aryans".

In his **THE SANSKRIT LANGUAGE** (III Edn 1973) Burrow says: "the Aryanisation of Northwest India can be dated by the end of the Indus

civilisation for which no doubt they were largely responsible, and it may be assumed to have taken place in successive waves over a considerable period of time".

INDRAPALA, Dr. K. Is it an Indus-Brahmi epigraph? THE HINDU 26-4-1981. On the Anaikottai biscript seal which Dr. Madhivanan has read as containing the word "TIVUKO".

TRAUTMANN, Thomas R. -- Dravidian Kinship; Cambridge University Press; 1981.

The Cross-cousin marriage, a hall-mark of Dravidian Kinship rules, which is to be found even now among Australian aborigines as well as some American Indian tribes is a vestige of the common origin/habitat, millennia ago, of the Dravidian speakers and those outlying communities.

Sadasivan, D -- Proto - Dravidian matrix of the Indus Script and culture pp 91-103 of Historical Heritage of Tamils; International Institute of Tamil Studies, Madras, 1983.

Gurumurthy S. -- Harappa and Tamil Culture; pp 104-13 of HISTORICAL HERITAGE OF TAMILS

Pandian, S.K. -- The Hidden heritage; DNF Publications Limited; Hyderabad; 1988.

JOSHI, Lal Muni -- Discerning the Buddha; Munshiram Manoharlal; New Delhi 1983; pp 275

"(The Old Upanishads) contain some ideas quite foreign to old Vedic tradition but in agreement with known non-vedic traditions of thought and culture".

"Our study and research lead us to state these ideas (Yoga, dhyana, Karma, samsara and Nirvana or moksa) are of non-Aryan and pre-vedic origin. Their sudden appearance in the Upanisads suggests that the royal and priestly seers of the vedic tradition had borrowed them from the Munis and sramanas or ascetic sages of non-Vedic cultural tradition".

"The teachings of Mahavira and Buddha the two most historial teachers of Sramana thought, were

connected with pre-Upanisadic and non-Vedic religious tradition which has been traced to Harappan or Indus culture. The religious tradition of non-Aryan and non-Vedic Munis had continued linger on during the supremacy of the Aryans of the Vedic period".

(Heinrich Zimmer has expressed similar views in his PHILOSOPHIES OF INDIA; Kegan Paul, London 1951)

III. CULTURE, ARTS etc IN INDUS VALLEY CIVILISATION

Venkatachalam, K -- A study of the weights and measures of the Indus Valley Culture; TAMIL CIVILISATION Vol 4: 3-4 pp 95-102

Dhandapani, Er. P

IV. ON THE PRIMEVAL LANGUAGE OF MAN and on the PRIMACY OF TAMIL

DEVANEYA PAVANAR, G. - The Primary Classical Language of the world; Nesamani Pathippagam; Katpadi; 1966; 00 312

SWADESH, Morries -- The origin and Diversification of Language; London; 1972.

WRIGHT, Robert -- The quest for the mother tongue in ATLANTIC MONTHLY April 1991.

SATHUR SEKARAN:

On and after Indus scripts (1994)
Origin and Development of Indian scripts (1994)
Origin and Development of World scripts (1994)

V. ON KUMARI KANDAM

JOSEPH, P-Lost Lemuria, fresh evidence; TAMIL CULTURE Vol VII-2; April 1958

SULLIVAN, Walter -- CONTINENTS IN MOTION -- The new earth debate; McGraw Hill; 1974

The riddles of Kumari Kandam; HISTORICAL HERITAGE OF TAMILS; International Institute of Tamil Studies; 1983; pp 625-644

Mahalingam Dr. N. Kumari Kandam - the lost continent. PROCEEDINGS OF THE FIFTH INTERNATIONAL CONFERENCE - SEMINAR OF TAMIL STUDIES 1981; Vol I pp 2; 53-66

Mahalingam Dr. N. & Sathur Sekaran
THE CONCEPT OF KUMARI CONTINENT
IV Edition 1994

VI. DECIPHERMENT OF INDUS SCRIPT

WADDELL, L.A. -- The Indo-Sumerian Seals deciphered; Luzac; London; 1925

HUNTER, G.R. -- The script of Harappa and Mohenjodorao and its connection with other scripts;

Kegan Paul; London; 1934

HERAS, Father H. -- Studies in Proto-Indo-Mediterranean Culture Vol. I, Bombay; 1953

"Thus the external and internal evidence of the inscriptions of the Indus Valley shows that the inhabitants of those cities were Dravidians who spoke a Dravidian language. The Mohenjodaro civilisation was not a civilization restricted to the Indus valley. It was a civilisation that extended all over India and eventually we should find relics of this civilisation similar to those of Mohenjodaro all over the Indian sub-continent".

See also Anderson, Bernaed & Correia - Afonso John -- **H Heras Indological Studies;** Heraz Institue of Indian History and Culture; Bombay; 1990; pp 205 contains complete Bibiliography of numerous articles of Father Heras on his decipherment of Indus Valley script.

PARPOLA, Asko -- **Materials for the study of the Indus script Vol I-A concordance to the Inscriptions;** Copenhagen; 1973

Corpus of Indus seals and inscriptions (I: Collections in India); University of Helsinki; Finland 1987

"On the Harappan 'Yoke carrier' pictogram and the Kavadi worship" in PROCEEDINGS OF THE FIFTH INTERNATIONAL CONFERENCE - SEMINAR of TAMIL STUDIES 1981; Vol I pp 2: 73-89

WHEELER, Sir Mortimer -- "Ancient India" Part VIII of the book **THE DAWN OF CIVILISATION** (Ed: Stuart Piggott); Thames and Hudson; London; 1961.

"They were used to stamp clay sealings on bales and other commodities and it is likely therefore that in part at any rate they represent personal names"

KONOROZOV, Yu. V. -- **Proto Indica 1968 - Brief report on the investigation of the Proto-Indian Texts; Moscow; 1968**

MAHADEVAN, I -- Dravidian Parallels in Proto Indian Script; at pages 157-276 of JOURNAL OF TAMIL STUDIES (Special number on the Decipherment of the Mohenjodaro Script; Vol II No 1; May 1970)

The above special number contains also articles by Yu. V. Konorozov, Asko Parpola; P. Joseph & T. Burrow etc. on the Russian and Finnish attempts at deciphering the Indus script.

The Indus script, texts, concordance and tables; Memoris of the Archaeological Survey of India; New Delhi; 1977

Place Names in the Indus Script (Procdgs of V International CS of Tamil Studies 1981) Vol I

Towards a grammar of the Indus texts; Inteligible to the eye if not to the ears; in TAMIL CIVILISATION 4(3) : 15-30

Dravidian models of decipherment of the Indus script; A case study; in TAMIL CIVILIZATION 4 (3): 133-43

What do we know about the Indus script? neti, neti; in JOURNAL OF INSTITUTE OF ASIAN STUDIES; Madras; VII-1 September 1989

"Implicit in the search for Dravidian parallels for the Indus ideograms is the hypothesis that the

Harappan language not being Indo-Aryan, could only be Dravidian"

SIROMONEY, Gift and Hug, Abdul -- Cluster Analysis of Indus signs-A computer Approach. Procdgs of V International Conference Seminar of Tamil Studies; 1981; vol I pp 2; 15-23.

MALAYANDI, Subramanian -- **The Language and grammatical heritage of the Indus script**; in THE GRAMMATICAL HERITAGE OF THE TAMILS; International Institute of Tamil Studies; 1980; see pp 466-471.

FAIRSERVICE, Walter A. -- The Harappan Calendar; in PROCEEDINGS OF V INTERNATIONAL CONFERENCE - SEMINAR OF TAMIL STUDIES 1981; Vol I pp 2: 25-46.

The script of the Indus Valley Civilisation; in SCIENTIFIC AMERICAN; March 1983; pp 58-66

Harappan civilisation according to its writing at pp 154-161 of SOUTH ASIAN ARCHAEOLOGY (Ed. Bridget Allchin) Cambridge 1984.

"Dravidian the best candidate for the language of the Harappans".

WINTERS, Clyde Ahmad -- The Indus Valley writing is proto-Dravidian JOURNAL OF TAMIL STUDIES 1984; 25: 50-64

The Dravidian language and the Harappan script; JOURNAL OF TAMIL STUDIES Dec 1989 pp 11-21

RAUFF, J.V. -- Some structural aspects of the Indus script; JOURNAL OF TAMIL STUDIES 1988; 31: 69-88

A Proto Dravidian reading of the fish signs of the Indus Script; JOURNAL OF TAMIL STUDIES; Dec 1990; pp 1-2

RAMACHANDRAN, Er M; and Madhivanan Dr. R. -- **The spring of the Indus Civilisation**; Prasanna Pathippagam; Madras - 10 pp 98

Madhivanan, Dr. R --

Key to the Indus script and complete decipherment of 3200 seals and inscriptions: (Under print)

Vistas of Indus Civilisation; Articles in KISAN WORLD, Madras; August 1993 -- January 1994

Zvelebil, K.V. -- Recent attempts at the decipherment of the Indus Valley script and language; pp 151-188 of INDUS VALLEY TO MEKONG DELTA: EXPLORATIONS IN (Ed. Noburu Karashima)

EPIGRAPHY; New Era Publications; Madras; 1985

"Although it is a priori possible that the Harappan language belonged to an unknown language which has disappeared without leaving any trace, the most probable candidate is and remains some form of Dravidian".

DRAVIDIAN LINGUISTICS -- AN INTRODUCTION: Pondicherry Institute of Linguistics and culture; Pondicherry 1990.

Chapter VI: " Dravidian and Harappan" concludes that Harappan language has more relevance to old Tamil than any other Indian language.

Compiled by
RAMANATHAN M.A., B.L.

A BRIEF NOTE ON KUMARI KANDAM

Dr. S. MUTHUKUMARAN

Tamils have classified the land into four types as seen from the old literature in Tamil: hilly terrain, pasture lands, fertile lands, and coastal lands. The oldest available Tamil literature known as Tolkappiam deals extensively on the terrains, the type of people, animals, birds, etc in each type of land. This work according to tradition belongs to the Second Sangam period, i.e. 5700 B.C. to 2000 B.C. In the literature of the Third Sangam also (1800 B.C. to 100 A.D.), we find considerable information about the land inhabited by the Tamils. Even the later day Bakthi Literature (600 A.D. onwards) Contains descriptions of the lands and towns. For instance when Gnanasambandan describes Sirkali (a town now 10 K.M. from sea) we find he is describing a coastal terrain. This may indicate that during his time the East coast had retreated several kilometres inside and perhaps the sea level was higher.

From traditional literature in Tamil, it is also learnt that there was a land South of Kanyakumari known as Kumari Kandam extending to several hundred miles South. At that time the mountains in Tiurunelveli region were the northern boundary of Tamilnadu. Some persons have disputed this. In order to know the truth we have to consider how the mean sea level and the coast line have changed over a period of several thousand years.

THE COAST

Coast is the meeting of land and sea. In recent years considerable research work has been done to understand the processes that are responsible for changing the coastline.

The coast is in a dynamic state, constantly changing. The coast undergoes changes due to

* Winds
* Waves
* Weather
* Sea level and
* Other Oceanic and continental processes.

The effect of wind, especially storms, are obvious. The changes are apparent. The effect of weather and delta forming river flows are also seen over a period of time. It is known that the sea level has been rising and falling over the geological eras. The last time when it was

at the lowest level was about 20,000 years ago. It has also been now recognised that the rising and falling of sea level due to melting/retreat and formation/advance of glaciers has substantial effect on the evolution of the coast. Further .when sea level rises up, the coastal line may move inland/retreat by large amounts. A sea level rise of l metre may cause a shore retreat of 1 k.m. (1).

Other oceanic and continental process include upwaiping of the continent, tectonic movements, etc. which all lead to substantial changes in the coastal lines.

KUMARI KANDAM

We may be able to reconstruct our history based on the scientific findings along the coastal region such as the changes in the coastal line, the past activities on the coasts, the archaeological finds, etc. I propose the followning proposition for considertation and for further research[1]:

We find a series of islands in the Arabian Sea and Indian Ocean almost in a North South line. We also know that in a period of over 15,000 years the sea level has risen by about 150m, as the sea was rising at an average rate of about one meter in a century, the coastline may have receded 150 km. during the 15,000 years. Then what we find as a small island of few km. in diameter today might have had a width of 300 km. or more 15,000 years ago and hence the series of islands may be what is left of a long stretch of land with a width of about 300 km. According to tradition, this land south of Kanyakumari was flourishing in 10,000 B.C. Due to rising of the sea level and two deluges one at about 6000 B.C. and another one at about 2000 B.C. the land was completely lost and Tamils moved to their present habitat. Thus it is possible that about 12,000 to 15,000 years ago, the East Coast of India included the present Sri Lanka with perhaps an additional 150 kilometres of land on the east which is now submerged in the ocean. Further the coast may have extended South of Sri Lanka to cover all the series of islands starting from Laccadives to Maldives and further south up to about 10 south latitude (fig.1). This is what we can derive from traditional literature. Perhaps scientific investigation may be able to establish whether such was the coast several thousand years ago or not.

I would also like to state that the Tamil literature refers to the sea between Tamilnadu and Srilanka as i.e. a sea created by digging. If

1. Our changing coastline, by P.K. Dinesh Kumar, Science Reporter, June 1989.

we try to connect the information in the puranas with the information in Tamil Literature we may see that at the time when Rama lived the sea between India and Sri Lanka existed. It may also be possible that the statemet made by some investigators that the sea level has been rising continuously for the last 15,000 years is not wholly correct. There are some investigators who state that the sea level was highest a few thousand years ago. Further the rise in sea level was also not steady; it was undulating[2]. If we accept this conclusion then as the sea level was fluctuating, at one stage, the Tamils to think of digging the sea, i.e. that is the period between the time Rama lived and the time of the Mahabaratha war. A guess may be that Rama's time was before 4000 B.C. Krishna's time was around 2,000 B.C. the digging of sea was around 3000 B.C. This it may be possible to develop a picture of the evolution of Tamil Nadu Coast and to establish the fact of the earlier existence and later submergence of kumari kandam from the literature available in our Indian language and Scientific field investigations in the region of the Arabian sea and the Indian Ocean indicated in Figure 1 as submerged Kumari Kandam.

2. "Climate : Present, Past and Future" by Lamb. H.H. Page 117

சிந்துவெளி நாகரிகம் கட்டுக்கதையா?

(ஊ. செயராமன், சேலையூர்)

"சிந்துவெளி நாகரிகம் வெறும் கட்டுக்கதை. இந்திய தேசத்தின் தொன்மை நாகரிகம் என்பது ஆரிய நாகரிகம் மட்டுமே. சிந்துவெளி நிலப்பரப்பிலும் அந்நாகரிகமே தழைத்திருந்தது. அவர்களுடைய மொழி, சமயம், பழக்கவழக்கத்திலிருந்தே இந்தியப் பண்பாடே உருவானது". இம்மாதிரியான கிளிப்பிள்ளைப் பேச்சு இந்த 1994-ஆம் ஆண்டிலும் அழுத்தமாகவே ஒலிக்கிறது.

உண்மைச் சான்றுகளைத் தராமல் மனம் போல் கூறுவது ஆய்வு ஆகாது. இந்தியா முழுவதும் உள்ள பெரும்பான்மை ஆதிக்குடிகளிடம் ஓர் ஒற்றுமையும், ஒருமைப்பாடும், பந்தபாசமும், இல்லாமற் போய்விட்டதும், கல்வி, கேள்வி சிந்தனைகளில் ஆதிக்குடிகள் பின்தங்கிவிட்டதுமே உண்மையை மறைத்து விடாது. இங்கனம் ஒரு நல்லவர் இருந்து மட்டும் பயனில்லை, வல்லவராயும் இருத்தல் வேண்டும். இதுவே இன்றைய கோட்பாடு. "குறிக்கோளிலாது கெட்டேன்" என்று அப்பர் சுவாமிகள் சைவசமயம் குறித்துச் சொன்னது தமிழர் அல்லது திராவிடர்களின் இனவுணர்வின்மைக்கும் கச்சிதமாகப் பொருந்துவதாகும்.

வரலாற்றுப் பெரும் ஆழியில் ஒரு முயற்சியும், ஒரு சாதனையும், ஒரு கொடையளிப்பும் புரியாதவர்கள், உலகத்தின் ஒரு சிறு கூட்டத்தாராக இருந்த போதிலும், அவர்களுடைய இனவுணர்வும், மொழியுணர்வும், கட்டுப்பாடும், அவர்களை என்றும் வாழவைத்துவிடும். எவ்வளவு முயற்சியும், சாதனையும், கொடையளிப்பும் உடையவர்களாயினும் ஒருகூட்டத்தார் தங்கள் குழூஉக்குறியைக் கைவிட்டுவிட்டால், இருந்த இடம் தெரியாமல் அவர்கள் சிதறிவிடுவார்கள் என்பதற்குச் சிந்துவெளி நாகரிகம் ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். சிந்துவெளி நாகரிகம் ஒரு கட்டுக்கதை என்று சொல்வதா? அந்நாகரிகத்துக்கு உரியவர்கள் இத்தனை ஆயிரம் வருடங்கள் வாழ்ந்து கொண்டிருந்தும் அவர்களுக்கு எதிர்காலம் என்கிற ஒன்று இல்லை என எப்படி உரைக்க முடியும்?

ஆங்கிலேயர் இந்தியனை ஆண்ட காலமான கி. பி. 1856-ல் ஜேம்ஸ், வில்லியம் பர்ட்டன் என்ற இரண்டு பிரிட்டிஷ் உடன்பிறந்தவர்கள், கராச்சியிலிருந்து லாகூருக்கு இருப்புப் பாதை அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அப்போது மேற்படி பகுதியில் பக்கத்தில் இருந்த மண்மேடுகளிலிருந்து செங்கற்களைத் தோண்டி யெடுத்துவரப் பணித்தார்கள். அப்படிக் கல்களைத் தோண்டியெடுத்த போது அங்கு இரண்டு பழைய நகரங்கள் புதையுண்டிருப்பது தெரியவந்தது. இன்று பாகிஸ்தானமாக மாறிவிட்ட இரண்டு பகுதிகளில் அந்நகரங்கள்

அமைந்திருந்தன. ஒன்று மேற்குப் பஞ்சாபில் உள்ள ஹாரப்பா நகர். இன்னொன்று சிந்து மாகாணத்தில் உள்ள மொஹஞ்சதாரோ நகர். மேற்படி உடன்பிணைந்தவர்கள் ஐயுற்றுக் கூறிய 50 வருடங்களுக்குப் பிறகே முற்கூறிய நகரங்கள் 5000 ஆண்டு பழைமையுடையவை என்பது தெரிய வந்தது.

பிரிட்டிஷ் அரசு சர் ஜான் மார்ஷல் என்ற அறிவாளியைத் தொன்மை ஆய்வாளராக அமர்த்தி என். ஜி. மஜூம்தார், ஆர். டி. பானர்ஜி ஆகிய இந்திய அறிஞர்களையும் துணைக்கு நியமித்து அந்த இரண்டு நகரங்களையும் ஆராய்ந்து பார்க்கச் செய்தது. ஹரப்பா, மொஹஞ்சதாரோ நகரங்களின் வாயிலாக, அவற்றுக்கு மேற்காசியாவில் இருந்த சுமேரியா, பாபிலோனியா, அசீரியா போன்ற நாகரிகங்களோடு இருந்த தொடர்பும் தெரியவந்தது. எகிப்து, மெசெப்பொட்டேமியா, கிரீட் நாகரிகங்களோடும் சிந்துவெளிக்கு இருந்த பிணைப்பையும் அறியமுடிந்தது. அதற்கு முன்பெல்லாம் ஆரிய நாகரிகமே இந்திய நாகரிகத்தின் தொடக்கம் என்ற எண்ணமே இந்திய வரலாற்றிஞர்களை ஆட்கொண்டிருந்தது. சிந்துவெளி நகரங்களைச் சோதித்துப் பார்த்த பிறகு ஓர் உள் நாட்டு நாகரிகம் (Indigenous Civilization) இந்தியாவுக்கு உண்டு என்ற முடிவு அழுத்தமாக ஏற்பட்டது.

பின்னர் மார்டிமர் வீலர், ஹீராஸ் பாதிரியார் என்ற அறிஞர்கள் சிந்துவெளி நாகரிகப் பகுதிகளை ஆராய்ந்து பார்த்து அங்கு கி.மு. 8000 ஆண்டுகளிலிருந்து சிந்து வெளிநாகரிகம் தோன்றி அழிந்து வந்திருப்பதையும் இந்தியாவின் வடக்கே காஷ்மீரிலிருந்து தெற்கே கிருஷ்ணா, கன்யாகுமரி வரையிலும் மேற்கே பாகிஸ்தானிலிருந்து கிழக்கே வங்காள தேசம் வரையிலுமான 1000 நகரங்களுக்குக் குறையாமல் எழுந்து மறைந்திருப்பதைச் சுட்டிக் காட்டி இது ஆரியர்களுக்கு முந்திய ஒரு அருமையான நாகரிகம் என்பதையும் இந் நாகரிகத்தின் கூறுகள், தென்னிந்திய மக்கள் குறிப்பாகத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளோடுதான் ஒத்திருக்கின்றன என்றும் கூறினார்கள். பிறகு இந்தியாவுக்குத் தன்னாண்மை கிடைத்துப் பாகிஸ்தான் தனியாகப் பிரிந்துவிட்டதால் அங்கு தொடர்ந்து அகழ்வாய்வு செய்ய முடியாமற் போய்விட்டது. பாகிஸ்தானியர்களுக்கு இந்திய நாகரிகத்தின் மீது அதிக அக்கறை இல்லை. இந்தியாவுக்கோ அது திராவிட நாகரிகம் என்பது உறுதியாகிவிட்டால் பிற நாகரிகத்துக்கு உள்ள மதிப்புப் போய்விடுமே என்ற கவலையில் அது பற்றி மேலும் சோதிக்கும் மனம் இல்லாமலிருக்கிறது. பின்னால் ஆய்வு நடத்திய பி. பி. லால், எஸ். ஆர். ராவ் முதலியோர் சிந்து வெளிநாகரிகத்தை வலிந்து ஆரிய நாகரிகம் என்று தக்க சான்றுகளின்றி கூறவும் முற்பட்டிருக்கிறார்கள்.

சர் ஜான் மார்ஷல், என். ஜி. மஜூம்தார், ஆர். டி. பானர்ஜி, மார்ட்டிமர் வீலர், ஹீராஸ் பாதிரியார் ஆகியோருடைய அடிப்படை ஆராய்ச்சிகளை நன்கு புரிந்து. சிந்து வெளி மக்களின் மொழி, சமயம், தத்துவம், கலைப்படைப்புகள், கட்டடமுறை யாவும் தமிழர்களை ஒட்டியே உள்ளன என்பதற்குக்

கணிசமான ஆதாரங்களைக் காட்டுகிறார்கள். அதுவுமல்லாமல் அது மூலத்தன்மை வாய்ந்த நாகரிகம் (Original Civilisation) மற்றவர்களுடையதைத் தன்னுடையதாக்கிக் கொள்ளும் போலிமை வாய்ந்த நாகரிகம் (Duplicate Civilization) அல்ல என்பதையும் அவர்கள் புலப்படுத்தியிருக்கிறார்கள். 1942-ஆம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு ஆற்ற வந்த ஹீராஸ் பாதிரியார் மூன்று நாள் ஆறுமணி நேரம் "சிந்துவெளி நாகரிகம்" குறித்து வரலாற்றுத் திணைக்களத்தில் பேசிவிட்டு "இதுவரையில் உங்களிடையே பேசியவன் ஹீராஸ் பாதிரி அல்ல, ஸ்பெயின் தேசத்திலிருநந்து வந்துள்ள ஒரு திராவிடனே" என்று பூரிப்போடு கூறினார். பிறகு அப்போதைய பல்கலைக் கழக மாணவர்கள் அவரிடம் சென்று அவரின் நினைவுக் கையெழுத்தைக் கேட்டபோது "I am a Dravidian from Spain, H. Heras" என்று கையெழுத்திட்டுக் கொடுத்திருத்திறார்.

இத்தனை அறிஞர்களும் கூறிய பிறகும், எவ்வளவோ நூல்கள் வெளிவந்த பிறகும் தற்போது மேலும் மேலும் சான்றுகள் கிடைத்துக் கொண்டேயிருக்கும் போதிலும், தமிழர்கள் கோளக் காதினராகவும், காணாக்கண்ணினராகவும், பேசா வாயினராகவும், இன்று பொழுது போனால் போதும் என்று வாழ்ந்திருந்தால் அமெரிக்காவில் சிவப்பிந்தியர்களுக்கு ஏற்பட்ட கதிதான் இந்தியாவில் தமிழர்களுக்கு ஏற்படும் என்பதை அவர்கள் உணர்வார்களா?

எனவே நமக்குப் பல காலமாகக் கிடைத்திருக்கிற செய்திகளைத் தொகுத்து வைத்தால் பண்டைத் தமிழின் - திருவிடரின் - பழைய இந்திய மக்களின் நாகரிகமே இத்தமிழ் நாகரிகமான சிந்து வெளி நாகரிகம் எனலாம். சிந்துவெளி நாகரிகம் கட்டுக்கதை அல்ல. ஆனால் இன்றும் இயங்கிவரும் பண்டைத் தமிழரின் அல்லது இன்றைய திராவிடரின் நாகரிகம் எனலாம்.

சிந்துவெளி நாகரிகம் – சில தவறான கற்பனைகள்

ச. சாமிநாதன்

அறுபதாண்டுகளுக்கு மேலாக சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட 5000 முத்திரைகளின் எழுத்துகள் புரிந்துகொள்ள முடியாத புதிராய் விளங்கின. அதை நன்கு ஆராய்ந்து அவையாவும் தமிழ்ப் பெயர்கள்தாம் என்பதை நன்கு விளங்கவைத்த பெருமை முனைவர் திரு இரா. மதிவாணன் அவர்களையே சாரும். தமிழர்களுக்கெல்லாம் இரட்டிப்புப் பெருமைகளுள் ஒன்று. தமிழர் ஒருவர் புரியவைத்தார் என்பது. இரண்டாவது அந்த நாகரிகம் தமிழர்களுக்கு உரியது என்பது.

பல ஆண்டுகளாக ஆராய்ச்சியாளர் பலருக்கும் புரிய முடியாமல் இருந்தது. பலர் அதனைப் பட எழுத்து என எண்ணிக்கொண்டு ஆராய்ந்தனர். மற்றும் சிலர் இந்திய இலக்கியம் எல்லாவற்றிற்கும் சமஸ்கிருதமே மூலம் என்றும் ஆகவே அவை சமஸ்கிருதத்தின் மூலங்களாக இருக்கும் என்றும் எண்ணத் தொடங்கினார். இரண்டும் தவறு. முனைவர் திரு இரா. மதிவாணன் அவர்கள் அப்படி அல்லாமல் அறிவார்ந்த சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ச்சி செய்ததால் சிந்துவெளியில் கிடைத்த 5000 முத்திரைகளுக்கும் விளக்கம் தந்து அவை தமிழே என நிலைநாட்டியுள்ளார்.

மேய்ச்சல் இடம்தேடி ஆடுமாடுகளுடன் சிறு சிறு கூட்டமாக வந்த ஆரியர்கள் வடக்கே ஆக்கிரமித்துக் கொண்டால் திராவிடர்கள் தெற்கே ஓடிவந்து தங்கி தப்பித்துக் கொண்டார்கள் என்றும் அதற்கு "மொகஞ்சதாரோ" எனும் இடத்தில் கண்டுடிக்கப்பட்ட எலும்புக் கூடுகள் ஆதாரம் என்றும் பலர் சொல்லி அதுவே உண்மை என்று உலகமே நம்புகிற சூழ்நிலை உருவாக்க முயன்றார்கள்.

"மொகஞ்சதாரோவில் நடைபெற்ற கற்பனை இனப்படுகொலை" எனும் வெளியீட்டில் (The Mythic massacre at Mohenja-Daro) மாந்தவியல், புதைபொருள் ஆராய்ச்சி ஆக இரண்டின் பேராசிரியராக கலிபோர்னியா பல்கலை கழகத்தில் பணியாற்றும் முனைவர் சியார்ச்சு டேல்சு, அது முழுக்க முழுக்க ஆதாரமற்ற கற்பனை என்று எழுதியுள்ளார்.

மேலும் "மொகஞ்சதாரோ" என்றால் இறந்தவர் மேடு என்றுதான் அவ்விடத்து மொழியில் பொருள். அதில் எலும்புக்கூடுகள் தான் கிடைக்கும். மொத்தம் 34 எலும்புக் கூடுகள் தாம் இருந்தன. அதை அகழ்ந்து ஆராய்ந்தவரே இனப்படுகொலைகள் அல்ல என்று எழுதியிருக்கிறார். இனப்படுகொலை என்றால் வெறும் 34 எலும்புக் கூடுகள் தானா இருக்கும்? ஆயிரக்கணக்கில் அல்லவா இருக்க வேண்டும்!

நம் இலக்கியங்களில் மறப்பெண் சீறி வந்த புலியையே முறத்தினால் துரத்தினாள் என்று படிக்கின்றோம். அப்படியானால் அங்கிருந்த வீர மறவர்கள் ஆடுமாடு ஓட்டிவந்த குறைந்த நாகரிகமுள்ளவர்களை அடித்து துரத்திவிட்டு, ஆடுமாடுகளை அல்லவா கவர்ந்து வந்திருக்க வேண்டும். திராவிடர்களை வெல்ல முடியாததால் தான் ஓ இந்திரனே தாசர்களை அழிக்க வலிமை கொடு என்று கதறி அழுது வேண்டியிருக்கிறார்கள். ஒரு முறை மட்டுமல்ல, ஆயிரத்திற்கு மேற்பட்ட முறைகளில் சாராயத்தையும் வேண்டினார்களே..

ஆரியர்கள் விரட்டினார்கள் என்பதும் தவறு, திராவிடர்கள் சிந்துவெளிப் பகுதியில் மட்டும் இருந்து தெற்கே ஓடி வந்தார்கள் என்பதும் தவறு. வடக்கே இருந்த திராவிடர்கள் மொழிதிரிந்து இன்றும் பல்வேறு மொழி பேசி வடக்கில் வாழ்ந்துவருகிறார்கள.

சிந்துவெளி நாகரிகத்தை ஒத்த தடயங்கள் பலுச்சித்தானில் ஆரம்பித்து காலிபங்கன், லோதால், துவாரகை (குச்சரம்) சூரக்கோட்டி, டைமாபார் (மகாராட்டிரம்) பானவலி, தோலவீரா, ஆதிச்ச நல்லூர், யாழ்ப்பாணம் வரை கிட்டத்தட்ட 1000 இடங்களில் அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் என்ன தெளிவாகின்றதென்றால் நாகரிகமிக்க திராவிடர் பலுச்சிஸ்தான் முதல் யாழ்ப்பாணம் வரை நன்கு பரவி வாழ்ந்தனர் என்பதே. இடிபாடுகள் என்பவை மக்களால் ஏதோ இயற்கை காரணத்தால் கைவிடப்பட்ட ஊர்கள் இந்த இடங்களே ஆகும். காலம்தோறும் தொடர்ந்து மக்கள் வாழும் பாடலிபுத்திரம், உச்சயினி, கரூர், உறையூர், மதுரை போன்ற இடங்களில் காலப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களால் பழையன பற்றிய விவரங்கள் கிடைக்காது.

சிந்துவெளி எழுத்துகள் கர்நூல் மாவட்டம் கன்னவமடக்கல் கிராமத்தில் செங்கல்லிலும் வட ஆற்காடு மாவட்டம் கீழ்வாலை எனும் ஊரில் பாறையிலும், யாழ்ப்பாணத்திற்கு அருகில் நடந்த அகழ்வில் கிடைத்த முத்திரையிலும் இருக்கின்றதென்றால் யாரோ ஒருவர் யாத்திரை வந்து இவைகளை எழுதிச் சென்றிருப்பாரா என்ன? இல்லை, இல்லை. அக்காலத்தில் பலுச்சித்தான் முதல் வங்காளம் வரையும், காசுமீர் முதல் ஈழம் வரையிலும் அவ்வெழுத்துக்கள் வழக்கிலிருந்தன என்பதுதான் உண்மை.

தவறான கற்பனைகள் நீங்கவேண்டும்! உண்மைகள் ஓங்க வேண்டும்!

எம். கே. இ. மவுலானா

ஆராய்ச்சி அறிஞர்.

பார்வைக்கு எளிமையாக இருக்கும் சிலரை நெருங்கினால் அவர்கள் இமய மலையின் சிகரத்தைப் போல உயர்ந்த பெருமை வாய்ந்தவர்களாக இருப்பதைக் கண்டு வியக்கிறோம். அந்த வரிசையில் நாம் போற்றக்கூடிய ஒரு மாமேதையாக ஞானக்கவி சித்தர் என்று அழைக்கப்படும் திரு. முள்ளிக் குளம் எம். கே. இ. மௌலானா அவர்களும் ஒருவர்.

பல கவிஞர்களும், சித்தர்களும், செத்தும் கொடுத்த சீதக்காதி போன்ற கொடை வள்ளல்களும் தோன்றிய ராமநாதபுரம் மாவட்டத்தின் கீழ்க்கரையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

மரைக்காயர் (மரக்கலத்து ஆயர்கள்) என்ற இனத்தில் பிறந்து இஸ்லாமிய வேதங்களைச் சிறு வயதிலேயே கற்றுத் தெளிவு பெற்றார். அதன் அடிப்படையிலேயே உலகளாவிய நோக்கும் இவருக்கு ஏற்பட்டது.

திருக்குறளைத் தனது மகனுக்கு ஆறாம் வயதிலேயே முழுமையாக பொருளுடன் மனனம் செய்வித்தவர். உலகில் உள்ள எல்லா மதங்களையுமே அணு அணுவாக ஆராய்ந்துள்ளார். ஜாதி, மதம், உலகியல், ஆய்வு போன்ற எதற்கும் தெளிவான விளக்கம் தருகிறார்.

தமது வாழ்நாளில் பெரும் பகுதியை இலங்கையின் தமிழ ஈழ மன்னரின் கடைசி ஊரான முள்ளிக் குளத்தில் வாழ்ந்தவர். அதனாலோ என்னவோ தமிழ் ஈழம் வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்.

இவரது பரம்பரைத் தொழில் ரத்தினம், மாணிக்க கற்களின் வியாபாரமாகும். அதன் தொடர்பாகவே இலங்கை சென்ற இவர் இலங்கையின் மலை முகடுகளிலும், காடுகளிலும் சுற்றி அலைந்து பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

தமிழ் மேல் ஈடு இணையில்லாத பற்றுக் கொண்டதற்குக் காரணமே இந்த ஆராய்ச்சிகளினால் தெரிய வந்த உண்மைகளே என்கிறார்.

இவரின் ஆராய்ச்சிகளின் விளைவாக இதுவரை 22 நூல்கள் வெளிவந்துள்ளன. சேது முதல் சிந்து வரை 6 எதிர் நீச்சல் (கவிதைகள், 8 பாலை வனத்து ரோஜா (நாவல்) மர்கயாம் சரித்திரம் உபைபிளின் தீர்க்க தரிசனம் நிறைவேறுகிறது. நபிகள் நாயகம் அவர்களின் சரித்திர நிகழ்ச்சிகள் முதலியன குறிப்பிடத்தக்கவை. இதில் சேது முதல் சிந்து வரை

என்ற ஆய்வு நூல் 16.1.1984ல் தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது. அச்சிலிருக்கும் நூல், எல்லாம் இன்பமயம்.

தற்போது டெல்லியில் ஏசியன் உலக நூலாசியர்க்கள் என்ற தலைப்பில் பல சிறந்த நூலாசிரியர்களின் வாழ்க்கை வரலாறு பதிவாகி வருகிறது. அதில் திரு எம். கே. இ. மௌலானாவின் வாழ்க்கைச் சரித்திரமும் இடம் பெறுகிறது.

இவரது இலட்சியம் உலகின் முதல் மனிதன் தமிழன். உலகின் முதல்மொழி தமிழ் என்பதனை உலகிற்குத் தகுந்த ஆதாரச் சான்றுகளுடன் பறை சாற்றுவது.

சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, தாய்லாந்து, ஹாங்காங் முதலிய நாடுகளுக்கும் சென்று கருத்து முழக்கம் செய்திருக்கிறார்.

இந்தப் பரந்த உலகமே எனது பாடசாலை என்று கூறும் இவரிடம் நாம் எதைப்பற்றிப் பேசினாலும் அதன் விளக்கங்களைச் சுவைபட நமக்கு சொல்கிறார்.

இலங்கையில் காட்டுப் பகுதி ஒன்றில் ஒரு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது தனி ஆளாக யானைக் கூட்டத்தின் நடுவில் மாட்டிக்கொண்டதையும், இளமைப் பருவம் முதல் கிடைத்த தாயன்பையுமே தன் வாழ்வில் மறக்க முடியாதவைகள் என்கிறார்.

பிறந்த தேதி – 26.10.1920. முதல் மனைவி – தாஹாமரியம் (ஹாஜி) 3 பையன்களும், 1 பெண்ணும். இரண்டாம் மனைவி – இஃசான்பீவி. இரண்டு பையன்கள். கம்பீரமாக சிவந்து நெடிய உருவமும், பழுப்பு நிறக் கண்களும் கொண்டு பார்வைக்கு ஒரு இராணுவ வீரனைப்போல் காட்சி தரும் இவர் சமீப காலமாக ஒரு காலில் வலியேற்பட்டு, சிரமப்பட்டு நடந்தார். எனினும் இவரின் சுறுசுறுப்பு குறையவில்லை. அவர் மறைந்த தேதி 31.12.90 – கீழ்க்கரை இஸ்லாமிய மாநாட்டில்.

நன்றி – "முகம்"

மறைந்த நாகரிகம்

செந்துறை முத்து
(சேலம்)

மொகஞ்சதாரோ இன்றைய பாகிஸ்தானில் இலார் கானாவுக்கு வடக்கே இருபத்தைந்து கல் தொலைவில் உள்ளது. மொகஞ்சதாரோ என்பதற்கு 'இறந்தவர்களின் மேடு' என்று பொருள். இந்த அழிபாடு 240 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. சிந்து நதி மொகஞ்சதாரோவுக்குக் கிழக்கே மூன்றரை கல் தொலைவில் ஓடுகின்றது. முற்காலத்தில் இந்நதி மொகஞ்சதாரோவின் அருகில் சென்றிருக்கலாம். இந்நகரம் முன்பு நதியின் மட்டத்திற்குக் கட்டப்பட்டிருந்த சிந்து நதி காலந்தோறும் உயர்ந்து வந்தமையால் மக்கள் நகரத்தை உயர்த்திப் புதிய கட்டிடங்களை அமைத்தனர். அவ்வாறு ஒன்றின்மேல் ஒன்றாகக் கட்டப்பட்ட ஏழு நகரங்கள் மொகஞ்சதாரோவில் காணப்படுகின்றன. ஏழாவது கட்டிட அமைப்பு தற்கால இறுதியிலும் உலோகக்கால ஆரம்பத்திலும் அமைக்கப்பட்ட கட்டிடங்களை உடையது.

அவ்வாறு அமைக்கப்பட்ட மொகஞ்சதாரோ, அரப்பா முதலிய நகரங்களில் வாழ்ந்த மக்களின் நாகரிகம் அகழ் வாராய்ச்சியினால் வெளிக்கொணரப்பட்டுள்ளது. சர். ஜான் மார்ஷல் அம்மக்களின் நாகரிகத்தை விளக்கும் பெரிய நூலை இயற்றியுள்ளார். அவற்றின் மூலம் அந்நகரங்களைப் பற்றிய பல்வேறு செய்திகளை அறிய முடிகின்றது. சான்றாகச் சில இங்குத் தரப்படுகின்றன.

தானியக்களஞ்சியம்

அரப்பாவில் 169 அடி நீளமும் 135 அடி அகலமும் உள்ள தானியக் களஞ்சியம் ஒன்று காணப்படுகின்றது. அரப்பாவில் இரண்டு வரிசைகளில் தனித்தனி ஒவ்வொன்றிலும் ஏழு வீடுகள் அடங்கிய பதினான்கு கட்டிடங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவ்விரண்டு வரிசைகளையும் ஒரு பாதை பிரிக்கின்றது. அப்பாதையை ஆறு பாதைகள் குறுக்கே பிரிக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு முற்றமும் இரண்டு அறைகளும் உள்ளன. சிறிய அறை வாயிற் பக்கத்திலும், பெரிய அறை முற்றத்துக்குப் பின்னாலும் உள்ளன. சில இடங்களில் விளக்குத் தூண்கள் காணப்படுகின்றன. அவற்றிலிருந்து வீதிகளுக்கு விளக்கு வெளிச்சம் இடப்பட்டதெனத் தெரிகின்றது.

விளையாட்டுப் பொருள்கள்

சதுரங்கம் ஆடும் காய்கள் பல காணப்பட்டன. அவைகள் மண்ணினால் செய்யப்பட்டவை. எனவே சிந்துவெளி மக்கள் சதுரங்கம் விளையாடும் பழக்கம் கொண்டிருந்தனர் எனத் தெரிகின்றது. இவ்விளையாட்டு உலகெங்கும் பரவி இன்று நடைமுறையிலுள்ள சிறந்த விளையாட்டாகும்.

சிற்பங்கள் :

சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்டவைகளுள் முத்திரைகள், உடம்பில் அணியும் பொருள்கள் முதன்மை யானவை. மனித உருவங்கள் கல்லில் வெட்டப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்ட மனித உருவங்களில் ஒன்று, அலங்கரிக் கப்பட்ட போர்வையை அணிந்திருக்கின்றது. தாடியும், மீசை யும் கொண்டுள்ளது. தலை மயிர் நடுவே வகிர்ந்து விடப்பட்டுள்ளது; தலையைச் சுற்றி நாடா ஒன்று கட்டப்பட்டுள்ளது.

மனித உருவங்களில் பல பெண் உருவங்களாகும். பெரும்பாலும் எல்லா உருவங்களிலும் அணிகலன்கள் காணப்படுகின்றன. அணில், குரங்கு முதலியவை நிறக் கற்களிலும் ஆமை ஓட்டிலும் வெட்டப்பட்டுள்ளன. நிறக்கல்லில் வெட்டப்பட்டுள்ள அணில் இரண்டு அங்குலம் உயரமுள்ளது. வால் நிமிர்ந்து நிற்கின்றது.

வெண்கலத்தினால் செய்யப்பட்ட நாட்டியப் பெண்ணின் வடிவம் ஒன்று மிகவும் கவர்ச்சியுடையதாக உள்ளது. அவ்வுருவத்தில் கை மூட்டு வரையில் வளையல்கள் காணப்படுகின்றன. அரப்பாவில் செம்பினால் செய்யப்பட்ட வண்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வாழ்ந்த மக்கள்

ஆரியர் வருகைக்கு முன் வடநாடு முழுமையும் திராவிட மக்களே வாழ்ந்தார்கள் என்பது ஆராய்ச்சியறிஞர்களின் துணிபு. எனவே சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் திராவிடர்களே எனத்துணியப்பட்டுள்ளது. மொகஞ்சதாரோ, அரப்பா நகரங்களின் நாகரிகத்தை ஆராய்ந்தவராகிய ஹெரஸ் பாதிரியார் வாசித்த பழைய சிந்துவெளி எழுத்துக்களின் ஒலி முறையான உச்சரிப்புக்களில் பெரும்பாலானவை தமிழ்ச் சொற்களாக உள்ளன. எனவே, சிந்துவெளியில் வாழ்ந்த மக்கள் தமிழர்களே என்றும் கருதப்படுகின்றது.

மொழி :

சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் ஒரு சொல்லைக் குறிக்க ஒரு குறியீட்டை வழங்கினார்கள். சர் ஜான் மார்ஷல் டாக்டர் பிராங்பே பார்ட், ஹெரஸ் பாதிரியார் முதலிய ஆய்வாளர்கள் மேற்கு ஆசிய எகிப்திய, சிந்துவெளி வெளி எழுத்துக்கள் சிற்சில வேறுபாடுகளுடன் வளர்ச்சியடைந்துள்ளன என்று ஆராய்ந்து கூறியுள்ளனர்.

மொகஞ்சதாரோ எழுத்துக்களிலிருந்து பிராமி எழுத்துக்களும், பிராமி எழுத்துக்களிலிருந்து வடஇந்திய தென்னிந்திய எழுத்துக்களும் தோன்றின. மொகஞ்சதரோ எழுத்துக்களை ஒத்தவை ஐதராபாத்திலும், திருநெல்வேலி யிலும் கிடைத்த வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பானை சட்டிகளிலும் இலங்கையிலும் காணப்படுகின்றன.

உயர்ந்த நாகரிகம்

சிந்துவெளி மக்களின் நகர அமைப்பு, கட்டிட அமைப்பு, குளிக்கும் அறை, நீராடற்கிணறு, கழிவு நீர்க்கால்வாய், வீதி விளக்கு, அணிகலன்கள், சிற்பக்கலை வளர்ச்சி ஆகிய வற்றையெல்லாம் நோக்குங்கால், அவர்கள் உயர்ந்த நாகரிக வாழ்க்கையில் வாழ்ந்தனர் எனத் தெளிவாகின்றது. சிந்துவெளி நாகரிகம பண்டைய இந்தியாவில் தோன்றி வளர்ந்த பழைய நாகரிகம் என்பதில் ஐயமின்று. அப்பழைய நாகரிகத்தின் காலம் கி.மு 3500 வரையில் என்றுக் கருதப்படுகின்றது. சிந்துவெளியின் ஒளி ஆய்வின் மூலம் மேன்மேலும் ஒளிர்வதாக.

குமரிக்கண்டம் – சில விவரங்கள்

டாக்டர். ஆ. சந்திரசேகரன்
(சென்னைபல்கலைக்கழகம்)

மனித வரலாற்றின் வளர்ச்சி அவன் வாழ்ந்து வந்த நிலச் சூழலின் அடிப்படையிலேயே வளர்ந்து வந்திருக்கிறது. இயற்கையின் அருளும், அதன் சீற்றமும் அவன் வாழ்க்கையில் பல தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. எண்ணற்ற இலக்கியங்களின் வளர்ச்சியையும், பண்பாட்டு வளர்ச்சியையும் கங்கைக் கரைப் பகுதிகளிலும், பொன்னியாறு பொலிந்தோடும் பகுதிகளிலும், இன்னும் இது போன்ற நதிக்கரைப் பகுதிகளிலும் வளமுறக் காண்கிறோம். சிந்து நதி பாய்ந்த பகுதிகளில் ஒரு சிறந்த பண்பாடு செழிப்புற இலங்கியதாக வரலாற்றுச் சான்றுகள் உரைக்கின்றன. அழகு நகரங்களான மொஹஞ்சதாரோ, ஹாரப்பா, லொஹீம்ச தாரோ, லோதல், சான்ஹுதாரோ போன்றவைகள் வடமேற்கு இந்தியாவில் வளர்ந்து, சிறப்புற்று விளங்கிப் பின்னர் சிந்து நதிப் போக்கில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் அழிந்ததாக வரலாறு கூறுகிறது. இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உலகெங்கும் ஏறத்தாழ ஒரேகாலத்தில் வளர்ச்சி யுற்று, இயற்கையின் அருளால் சிறப்புற மிளிர்ந்து கொண்டிருந்த உலக நாகரிகங்கள் பின்னர் இயற்கையின் சீற்றத்தால் மறைந்த நிகழ்சசயையும் வரலாற்றின் மூலம் அறிகிறோம். சிந்து சமவெளி நாகரிகமும், யூப்ரடிஸ், டைகீரிஸ், நதிகளின் கொடையான மெஸபடோமிய நாகரிகத்தின் கூறுகளான, சுமேரிய, பாபிலோனிய, அசீரிய மற்றும் சால்டிய நாகரிகமும்நைல்நதியின்சிறப்பால்எழுந்தஎகிப்திய நாகரிகமும் ஹ்வாங் ஹோ, யாங்ட்ஸி, கியாங் ஆகிய நதிகளின் கரையில் வளர்ந்த சீன நாகரிகமும் தனிச்சிறப்பு கொண்ட கிரேக்க நாகரிகமும், ரோம நாகரிகமும் இன்னும் இது போன்ற சிறந்த நாகரிகங்களும் தோன்றி, வளர்ந்து பொலிந்து, பின்னர் பல்வேறு தன்மைகளிலும், சாயல்களிலும் தங்கள் சிறப்புக்கள் பன்னெடுங் காலம் மிளிர வழிவகுத்து விட்டு மறைந்திருக்கின்றன. அது போன்றதே இன்றைய இந்தியாவிற்குத் தெற்கே, இலங்கைத் தீவுக்குப் பல மைல்கள் கணக்கில் பரந்த பிரதேசமாய் சிறந்து விளங்கி தமிழ் நாகரிகத்தை வளர்த்துத் துலங்கச் செய்த குமரிக் கண்டமெனும், லெமுரியாக் கண்டம்

லெமூரியா என்று அயல் நாட்டு அறிஞர்களாலும், குமரிக்கண்டமென்று தமிழறிஞர்களாலும் அழைக்கப்படும் பரந்த நிலப்பகுதி இந்து மாக்கடலால் பிற்காலத்தில் சூழப் பெற்றது. ஆராய்ச்சியாளர்கள் கிரேட்டேஷியஸ் யுகத்திற்குப் பின்னர் (350 மில்லியன் ஆண்டுகட்கு முற்பட்ட காலம்) ஒரே நிலப் பகுதியாகயிருந்த தென்னிந்தியா, தென்னாப்பிரிக்கப் பகுதிகள் கடலால் மூழ்கடிக்கப்பட்டு தனித்தனிய பிரிந்து விட்டதெனக் கூறுவர். இவர்கள் இப்பரந்த நிலப்பகுதியையே லெமூரியாக் கண்டமென்பர்.[1] அயல் நாட்டறிஞ ர்கள் கூறும் இத்தகைய கடல் கொண்ட விவரங்கள், கோள்களாகத் தமிழ் நூல்களிலே குறிக்கப்பட்டுள்ளன. இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில், "பஃறுளி யாற்றுடன், பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும், கொடுங்கடல் கொள்ள" என்ற வரிகளில், கடல் கொண்ட தென் பகுதி பற்றிக் குறிப்பிடுகிறார். இப்பகுதியில் பஃறுளி, குமரி முதலான ஆறுகள் ஓடியதாகவும், குமரிக்கோடு எனப்படும் பெரும் மலைத்தொடர் ஒன்று இருந்ததாகவும் சில தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. அன்றைக்கு குமரிக் கண்டத்தில் ஓடிய பஃறுளியாறு, பறளியாறு என்றாகி இன்று பழையாறு என்று அழைக்கப்படுகிறது. டாக்டர் கால்டுவெல் இந்தப் பகுதியை பறளி நாடு என்றே குறிப்பிடுகிறார். இந்நிலப் பரப்பில் நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன வென்றும் தமிழ் நூல் செய்திகள் தெரிவிக்கின்றன. நிலத்தோற்றவியலாரும் லெமூரியாக் கண்டத்தில் மனிதனின் மேம்பட்ட வாழ்க்கை யினைப் பற்றிக் குறிக்கின்றனர்.[2]

நிலவியல் ஆராய்ச்சியாளர்களும், மனித இன ஆராய்ச்சியாளர்களும் தமிழகத்தை உள்ளடக்கிய தெக்கணமே மனித இனத்தின் தொட்டில் என்றும் பல வருடங்களாகக் கூறி வருகின்றனர். மேலும் புறப் பொருள் வெண்பா மாலை, தமிழினத்தைக் குறிக்கும் போது, "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றி மூத்த குடி" என்று கூறுகிறது. இக் கருத்து உயர்வு நவிற்சியாக அமைந்த கருத்தாகும். அதாவது உள்ள ஒரு விவரத்தை மிகைப்படுத்திக் கூறுவதாகும். ஆனால் இல்லாத ஒன்றைப் படைத்துக் கூறுவதாக இது இருக்க முடியாது. எனவே தமிழினம், மிகப்

---

1. ம.ரா.போ. குருசாமி, சங்க காலத்திற்கு முன், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர், 1975, pp.49-53.

2. என். பத்மநாபன், தென்குமரியின் புதைந்த வரலாறு, குமரன் பதிப்பகம், நாகர்கோவில், 1972, pp.1-3.

பழமையான இனம் என்பதும், படைப்புக் காலந்தொட்டே இல்லா விட்டாலும் மனித இனம் தோன்றிய காலமுதல், காலப்போக்கில், மேம்பட்ட நாகரிகத்தை வளர்த்து வளமுற வாழ்ந்த ஓரினம் என்பதற்கு இத்தகைய தமிழ் நூல்கள் சான்று பகருகின்றன. இத்தகைய தமிழினமே இக் குமரிக் கண்டத்தில் வாழ்ந்து சிறப்பெய்தியிருக்கின்றனது.[3]

இலங்கை வரலாற்று நூல்களிலும் கடல்கோள்கள் பற்றிப் பேசப்படுகிறது. இவ்விரவங்கள், தமிழ் நூல்கள் கூறுகின்ற விவரங்களுக்குப் பெரிதும் ஏற்புடையதாக இருக்கின்றது. இலங்கைக்குத் தென்புறம் சில மைல்களுக்கு அப்பால் வரை கடல் கோள்களுக்கு முன்னர் நிலப்பரப்பு இருந்திருக்க வேண்டும் என்பது இவைகளினின்றும் உறுதியாகத் தெரிகிறது. இப்போதுள்ள நிலவமைப்பு பல கடல் கோள்களுக்குப் பின்னர் அமைந்த நிலவியலமைப்பாகும். எனவே கடற்கோள்களுக்கு முன்னிருந்த நிலப்பரப்பில் தமிழ்ச் சங்கம் ஒன்று இயங்கியதாக வரலாறும், தமிழ்ச் சங்க நூல்களும் கூறுகின்றன.[4] முச்சங்கங்கள் பற்றி இறையனார் களவியல் உரை, மற்றும் அதன் உரை யாசிரியராகிய பேராசிரியரும், சிலப்பதிகார உரையாசிரிய ராகிய அடியார்க்கு நல்லாரும் விளம்புகின்றனர். குமரிக் கண்டத்தில், துவக்கத்தில், தென் மதுரையில் முதற் சங்கம் இருந்ததையும், பின்னர் கடல் சூழ்ந்த காரணத்தால் அங்கிருந்து தமிழர் இடம் பெயர்ந்து சில மைல்கள் வடக்கே நகர்ந்து கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் அமைத்ததையும், அதுவும் கடலால் தாக்கப்பட்டபொழுது மேலும் கடலால் தாக்கப்படா வண்ணம் நிலம் பல கடந்து, தற்போதுள்ள மதுரையில் (வடமதுரை) மூன்றாம் தமிழ்ச் சங்கத்தை அவர்கள் அமைத்ததையும் வரலாற்று ஏடுகளும் பண்டைத் தமிழ் நூல்களும் கூறுகின்றன. மடகாஸ்கர், மாரிஷியஸ், இலங்கை மற்றும் தென்னிந்தியப் பகுதிகளில் நிலவும் பண்பாட்டு நிலை ஏறத்தாழ ஓரே நிலையிலிருப்பதே இவை ஓரே நிலப்பரப்பாக இருந்திருக்கக் கூடும் எனவும், மக்கள் ஓரே பண்பாட்டைப் பின்பற்றியிருக்கக் கூடுமெனவும் நம்புவதற்கு ஏதுவாகிறது.[5]

---

3. ம ரா. போ. குருசாமி, op.cit. p. 47.

4. ம ரா. போ. குருசாமி op.cit. pp. 94 - 95.

5. V. R, Ramachandra Dikshithar,
Pre Historic South India,
(Sir. William Meyer Lectures 1950 - 51),
University of Madras, 1951,
pp 6 - 7 and pp 229 - 230.

இவ்வாறு குமரிக்கண்டம் கொடுங்கடலால் கொள்ளப் பட்ட பின்னர் குடிபெயர்ந்த தமிழர் கூட்டம் வட குமரிக் கண்டமாகிய தற்போதைய தமிழ்நாட்டு நிலப்பகுதியில் தங்கித் தம் வாழ்க்கைப் பணியை துவக்கினர். தமிழருள் பிறிதொரு கூட்டத்தார், ஆர்வ மிகுதியாலும், வீர உணர்ச்சி வேட்கை யாலும், புதுப்புது நாடுகளைக் காணவேண்டும் என்ற அவா மிக்கவராய் மேலும் வடக்கு நோக்கி நகர்ந்து வடமேற்கு இந்தியாவை அடைந்து அங்கே சிந்து சமவெளியிலே தமிழர் தம் பண்பாட்டைத் துவக்கி, நாடு நகரங்களை அமைத்ததாகவும் வர லாற்றறிஞர்களும், தமிழாராய்ச்சியாளரும் கருதுவர். இச்சமவெ ளியில் அமைந்த சமயம், எழுத்து முறை, கடவுளர் உருவங்கள், ஆகியவை இவைகளுக்குச் சான்று கூறுகின்றன. ஹிராஸ் என்ற ஆராய்ச்சியாளர், சிந்து சமவெளி நாகரிகம், ஒரு திராவிடப் பண்பாடு என்று ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின், பல அமைப்புகளை ஒப்பு நோக்கி உறுதியாகக் கூறுகிறார். பின்னர் ஏற்பட்ட ஆரியரின் தாக்குதலாலோ, சிந்து நதிப் பெரு வெள்ளத்தாலோ மீண்டும் அவர்கள் குடிபெயர்ந்து தென்னகம் ஏகியதாகக் கருத்துக் கூறுபவர்களும் உண்டு.

இவ்வாறாகக் குமரிக் கண்டம் தமிழர்களின் பண்பாட்டுத் தொட்டிலாக இன்றைக்கு ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்திருக்க வேண்டும். தமிழகத்தோடு தொடர்பு கொள்ள வேண் டும் என்று கிரேக்கரும், ரோமரும் பன்னெடுங்காலமாக எண்ணி, இங்கு வந்து வாணிப உறவுகளை மேற்கொண்டும், இங்குத் தங்கித் தமிழர்களோடு உறவாடியதையும் கடைச் சங்கத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. புகார் நகரில் சங்க காலத்தில் கிரேக்க ரோம வீரர்கள் கோட்டைகளைப் பாதுகாத்தனர் என்பதற்குச் சான்றுகள் மிகுதியாக உள்ளன. மேலும் இப்பகுதியில் கிடைத்த கிரே க்க, ரோம, தங்க நாணயங்களும் இதற்கு உறுதி கூறுகின்றன. இவ்வாறு, தமிழ் நாடும் தமிழ்ப் பண்பாடும் அயல் நாட்டவரைப் பெரிதும் ஈர்த்திருக்கின்றன.

எனவே குமரிக்கண்டம், தமிழரது பண்பாட்டின் தொட்டிலாகவும், தமிழரது சிறப்பான வாழ்க்கையின் நிலைக்களனாகவும் பழங்காலத்தில் இருந்து, இலங்கி வந்திருக்கிறது என்பது மிகத் தெளிவாகும்.

குமரியும் சிந்துவும்

இரா. முத்துக்குமாரசாமி

ஆட்சியாளர், சைவசித்தாந்தக் கழகம்

முன்னூறு ஆண்டுகட்கு மேல் இந்தியத் திருநாட்டை ஆண்ட வெள்ளையர்கள் தமிழுக்குத் தம்மையறியாமலேயே பெருமை சேர்த்துச் சென்றனர். வெள்ளையர்களை ஒட்டிக் கிறித்துவ சமயத்தைப் பரப்ப வந்த பாதிரிமார்களான டாக்டர். ராபர்ட் கால்டுவெல், டாக்டர். ஜி. யு. போப் போன்ற பெருமக்கள் தமிழ் மொழியின் பெருமையையும் தமிழகத்தின் பெருமையையும் பாரறியச் செய்தனர். 19 ஆம் நூற்றாண்டின் இடையில் டாக்டர். கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' திராவிட மொழிகளின் பழமையையும் தனித்தன்மையையும் நிலை நாட்டியது. குறிப்பாகத் தமிழ்மொழி பிற உயர்தனிச் செம்மொழிகளான கிரேக்கம், இலத்தீன் போன்றவற்றுக்கு இணையானது என்றும் சமக்கிருத மொழியின் துணையின்றித் தானே தனித்தியங்கக் கூடிய ஆற்றல் படைத்தது என்றும் கால்டுவெல் நிறுவினார். இது மொழி பற்றிய சிந்தனையைத் தமிழர்களிடையே தூண்டியது. தமிழ் மொழியின் சிறந்த இலக்கியங்களான திருக்குறள், நாலடியார், திருவாசகம் போன்றவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இவை சிறந்த உலக இலக்கியங்களுக்கு இணையானவை என்று நிறுவினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவர்கள் தமிழுக்குச் செய்த தொண்டு தமிழர்களின் கண்களைத் திறந்து விட்டது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் இனத்தின் பழம் பெருமையை நிலை நாட்டும் இரண்டு புதிய கண்டுபிடிப்புகள் மீண்டும் சில வெள்ளையர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. ஒன்று சர் ஜான் மார்ஷல் என்ற தொல் பொருள் ஆய்வுப் பேரறிஞர் கண்டு பிடித்த சிந்து வெளி இடிபாடுகள். மற்றொன்று ஸ்காட் எலியட் துவக்கிவைத்த குமரிக்கண்டக் கோட்பாடு இந்த நூற்றாண்டு முழுவதும் இது பற்றிய ஆய்வுகள் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப் பெற்றிருப்பினும் இன்னும் சிந்து வெளி நாகரிகத்திற்குக் காரணமானவர் யார் என்றோ அல்லது குமரிக் கண்டம் கடலுள் ஆழ்ந்து போனது உண்மையா என்றோ யாராலும் முழுவதும் நிறுவமுடியவில்லை. இந்த ஆய்வுகளில் தமிழர்கள்

ஓரளவு ஈடுபட்டு இவை தமக்குச் சொந்தமானவை என்று நிறுவ முற்பட்டிருப்பினும் வேறு எந்தத் திராவிட மொழிப் பிரி வினரும் இந்த ஆய்வுகளில் கவனம் செலுத்தவில்லை என்பது உண்மை.

சிந்து வெளியில் கண்டுபிடித்த அரப்பா, மொகஞ் சோதரோ நகர இடிபாடுகள் அங்கே மாபெரும் நாகரிகம் ஒன்று நிலவி மறைந்திருக்கிறது என்பதை உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த இரு நகரங்கள் பற்றி மட்டுமே தெரிந்திருந்த சூழ்நிலையில் இன்று குசராத் மாநிலம் வரை பல்வேறு சிற்றூர்களின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப் பெற்று அரப்ப நாகரிகம் மத்திய இந்தியாவரை பரவியிருந்தது என்பதைக் காட்டுகின்றன. சிந்துவெளி முத்திரைகளில் உள்ள எழுத்துகள் தமிழ் நாட்டில் உள்ள கீழ்வாலை போன்ற சிற்றூர்களில் உள்ள மலைக் குகையில் உள்ள எழுத்துக்களோடு ஒத்துப் போகின்றன என்பதுடன் இலங்கையிலும் சிந்து வெளி எழுத்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்ற உண்மை தென்னகத்துக்கும் சிந்து வெளிக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது என்பதை நிறுவ முயன்று வந்துள்ளன.

சிந்து வெளியில் காணப்படும் பொருள்கள், அதில் காணப்படும் சிற்பங்கள் ஓரளவு தென்னக மக்களின் தொடர்பைக் காட்டுவதாயுள்ளன. ஆனால் இது பற்றி ஆய்வு மேற்கொண்ட பெரும்பாலான வடஇந்திய ஆய்வாளர்கள். இவற்றுக்கும் தென்னகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை நிலைநாட்டுவதிலேயே கண்ணுங்கருத்துமா யிருக்கின்றனர். சிந்து வெளி எழுத்துகள் பற்றிய ஆய்வு செய்த பேரறிஞர்களுள் ஈராசுப் பாதிரியார் முதன்முதலாக அவை தமிழ்மொழியுடன் தொடர்புடையவை என்று குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து இந்தியாவிலும் ரஷியாவிலும் பின்லாந்திலும் மேற்கொள்ளப் பெற்ற ஆய்வுகள் தமிழ் மொழி உறவை வலுப்படுத்துவதாகவே அமைந்துள்ளன. அந்தப் பணியில் ஈடுபட்டு ஓரளவு வெற்றிகண்டுள்ள மொழியறிஞர். முனைவர். இரா. மதிவாணன் சிந்து வெளி எழுத்துகள் தமிழ் எழுத்துகளே என்றும் அங்குள்ள முத்திரைகளில் காணப் படுபவை நல்ல தனித்தமிழ்ப் பெயர்களே என்றும் கண்டுபிடித்துள்ளார். இந்த ஆய்வுகள் இன்னும் முடிவுக்கு வராமலேயுள்ளன.

குமரிக் கண்டக் கோட்பாடும் இன்னும் முழுவதும் உண்மை வெளிப்படாத நிலையிலேயே உள்ளது. கடல் கொண்ட தென்னகத்தைப் பற்றிப் பழந்தமிழ் இலக்கியமான

சங்க இலக்கியமும் இறையனார் களவியல் இலக்கண உரையும் விரிவாகக்குறித்திருப்பினும் இவ்வாறு இருந்திருக்க இயலாது. இது தமிழர்களின் கற்பனை என்ற வாதமே தலைதூக்கியது. இதற்கிடையில் மேலைநாட்டு அறிவியலாளர்கள் சில உண்மைகளை வெளியிடலாயினர். இன்று வடக்கே உயர்ந்து நிற்கும் இமயமலை பழங்காலத்தில் இருந்ததில்லையென்றும் பெரும் நில அதிர்வின் காரணமாக இந்தியாவின் தென்பகுதியில் இருந்த நிலப்பரப்பு கடலுள் ஆழ்ந்த போது வடபகுதியில் கடலாக இருந்த இடத்தில் இமயமலை தோன்றியது என்றும் கூறுவர். இன்றுள்ள இந்தியாவின் தென்பகுதியில் இருந்த பெரும் நிலப்பரப்பு நில அதிர்வின் காரணமாகப் பிரிந்து சென்ற தென்றும் முன்னொரு காலத்தில் ஆப்பிரிக்காவும் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் ஒரே இணைந்த நிலப்பரப்பாக இருந்த தென்றும் ஒரு சாரார் கூறுவர். இவ்வாறு குமரிக் கண்டத்தைப் பற்றிய பல்வேறு கருத்துகள் நிலவிவருகின்றன.

குமரிக் கண்ட ஆய்வுக்கு ஆழ்கடல் ஆய்வு தேவை. ரஷிய நாட்டிலிருந்து வந்த ஆழ்கடல் ஆய்வாளர்கள் இத்தகைய ஆய்வில் ஈடுபட்டுத் தாங்கள் கண்டுபிடித்தவற்றை 'முக்கடல் புதிர்கள்' என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிட்டனர். அவர்கள் மேற்கொண்ட ஆய்வு ஆயிரத்தில் ஒரு பங்கு என்றே கூற வேண்டும். ஆப்பிரிக்க நாட்டில் இத்தகைய ஆய்வுக்கென ஒரு தனி நிறுவனமே உள்ளது. அவர்கள் குமரிக் கண்டத்தைக் 'கோண்டுவானா' நாடு என்று குறிப்பிடுவர்.

அமெரிக்க நாட்டிலும் இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களே ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்கள் ஒரு காலத்தில் இணைந்திருந்தன என்று கூறியுள்ளனர். இதற்குச் சான்றாக ஆப்பிரிக்கா - ஆஸ்திரேலியாவில் உள்ள தொல்பழங்குடிகளின் பழக்க வழக்கங்களையும் உருவத் தோற்றத்தையும் இந்திய நாட்டுத் தொல் பழங்குடிகளின் பழக்க வழக்கங்கள். உருவத் தோற்றம் ஆகியவற்றோடு ஒத்துப் போவதைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எது எவ்வாறு இருப்பினும் குமரிக்கண்ட ஆய்வும், சிந்து வெளி ஆய்வும் இன்னும் பாதியளவிலேயே நிற்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. இவ்வாய்வுகளுக்குத் தேவையான பெரும் பொருட் செலவைக் கருதிப்பார்க்கும் போது பலர் இம் முயற்சியில் ஈடுபடத் தயங்குகின்றனர். பன்னாட்டு நிதியமைப்புகள் முன் வந்து, அல்லது யுனெஸ்கோ போன்ற உலக அளவிலான அமைப்பு முன் வந்து பெரும் பொருட் செலவை ஏற்றுக் கொண்டால் 21 ஆம் நூற்றாண்டின்

இறுதியிலாவது இவற்றைப் பற்றிய முழு உண்மைகள் வெளிவர வாய்ப்புகள் உள்ளன.

இதைப் பொறுத்த மட்டில் இந்தியாவிலுள்ள வரலாற்று, தொல் பொருள் ஆய்வாளர்கள் ஒருங்கிணைந்து வட இந்தியா, தென் இந்தியா என்று பாராது, ஆரியர் - திராவிடர் என்று பாராது உண்மையை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு பாடுபடுவார்களேயானால் உண்மையான உண்மை ஒரு காலத்தில் வெளிவந்தே தீரும்.

'அரப்பா' என்பதை வேதங்கள் 'அரியூப்பா' என்று குறிப்பிடுகின்றன என்பதைத் திரு. குருவிக்கரம்பை வேலு பெரும் ஆய்வின் மேல் கண்டுபிடித்த பின் இத்தகைய கருத்தை மேனாட்டறிஞர் ஒருவர் 40 ஆண்டுகட்கு முன்னரே தெரிவித் துள்ளனர். ஆனால் இவ்வளவு ஆணித்தரமாக நிறுவவில்லை என்று வேறு ஒரு தமிழறிஞர் குறிப்பிட்டாராம். இந்த உண்மையை நீங்கள் ஏன் முன்னரே கூறவில்லை என்று கேட்டபோது அந்த அறிஞர் சிரித்து மழுப்பினாராம். இத்தகைய உண்மைகளை மறைக்கும் பணியை விட்டுவிட்டு உண்மையை உள்ளவாறு எடுத்துரைக்கும் நெஞ்சுரத்துடன் ஆய்வாளர்கள் பணிசெய்ய முன் வரவேண்டும். அப்போதுதான் உண்மையான உண்மை நிலை நாட்டப்பெறும்.

ஜனநாயகம் சிந்தனைப்போக்கு அங்கு (சிந்து வெளியில்) நிலவியதா என்பது. சிந்து நதி வரிவடிகம் பற்றிய புதிர் விடுவிக்கப்பட்டு எழுத்துபூர்வச் சான்றுகள் கிடைத்தபின்னர் தான் திட்டவட்டமாக நிருபணமாகும். ஆயினும் அதற்கான அறிகுறிகள் காணப் படுகின்றன என்பதுடன் இந்த வழியில். மேற்கொண்டு செய்யப்படும் ஆய்வுகள் 'மக்கள் ஆட்சி ' என்பது சிந்து நதிப் பள்ளத்தாக்கில் தான் முதலில் தோன்றியது என்பது நிலைநிறுத்தலாம்.

- சையது ஏ. நக்வி

(பாகிஸ்தானத்தைச் சேர்ந்த
புகழ் பெற்ற தொல்பொருளறிஞர்)

குமரிக்கண்ட ஆய்வில் புதிய பரிமாணங்கள்

குமரிமைந்தன்

இன்று வரை ஆரியர்களுக்கு உரியதாக ஒரேயோர் அகழ்வாய்வுக் களம் கூடக் கிடைக்கவில்லை என்கிறார் வி. ஆர். இராமச்சந்திர தீட்சதர் (Origin and spread of Tamil). தொல்காப்பியத்தில் கூறப்படும் வருணனும் இந்திரனும் வேதங்களிலும் கூறப்படுகின்றனர். இந்த தெய்வங்கள் ஐரோப்பியாவிலோ, ஈரானிலோ கிடையாது. எனவே வேதம் தொல்காப்பியத்திற்கு வெகுவாகப் பிற்பட்டது என்பது திண்ணம். இந்திரன்பால் சோழர்களுக்கு நெருக்கமான உறவு உண்டு, பாண்டியர்களுக்குப் பகை உண்டு. இந்திரனும் வெள்ளையானையும் கரும்பும் இந்தோனேசியத் தீவுகளிலும் உள்ளன. அத்தீவுக் கூட்டங்களில் பலவற்றிற்குத் தமிழ்ப் பெயர் உண்டு. சு–மத்திரா (= சு + மதுரை = நன் மதுரை) பாலி (தென்பாலிப் பகுதி), மதுரா (மதுரைத் தீவு) மற்றும் புருனை (=பொருனை) போன்றன சில எடுத்துக் காட்டுகள். பேரரசன் இராசேந்திரன் கல்வெட்டின்படி இத்தீவுகளில் சில பகுதிக்கு இலைமூரிதேசம் என்று பெயர் இருந்ததாகத் தெரிகிறது.

குமரிக் கண்ட மக்கள் பரவிய போது பல பழைய ஊர்களை உண்டாக்கிப் பழைய பெயர்களை வைத்தனர். இவற்றை அறிய புராணங்களும் வேதமும் உதவும்.

சமஸ்கிருதத்திற்கும் இலத்தீன் கிரேக்கத்திற்கும் இடையே உள்ள உறவுகளைவிட தமிழுக்கும் இம்மூன்று மொழிகளுக்கும் இடையே உள்ள உறவு மிக நெருக்கமானது.

பினிசியர்கள் தென்னிந்தியாவில் இருந்து பாரசீக வளைகுடா வழியாக ஆசியா மைனர் சென்று குடியேறியவர்கள். அவர்கள் தான் கிரேக்கர்களுக்கு எழுத்துகளும் நாகரிகமும் வழங்கியவர்கள் என்று ஹிரோடோட்டஸ் கூறுகிறார்.

பஃறுளி ஆறே பறளியாறு எனத்திரிந்திருக்கலாம். குமரி மாவட்டத்தில் இரண்டிடங்களலும் கேரளத்தில் ஓரிடத்திலும் சேலம் மாவட்டத்தில் ஓரிடத்திலும் வழங்குகிறது.

ஆதாமும், ஏவாளும் ஈழத் தீவில் தான் வாழ்ந்தனர். அவர்கள் மகள் சேது என்பதன் பெயரால்தான் இலங்கை-இந்தியா நீரிணைப்பு ஏற்பட்டது என்று மௌலானா என்பவர் "சேது முதல் சிந்து வரை" என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

குமரிக் கண்டத்தில் மாபெரும் பொருளியல் வளர்ச்சி இருந்தது. குபேரன் வடிவம் இதற்கொரு சான்று.

குமரிக் கண்டத்தில் பெண்ணாட்சி நிலவியது. மெகஸ்தனிஸ் குறிப்பு, சிலப்பதிகாரத்தில் வரும் பாண்டியர் குலமுதல்வி, திருவிளையாடற்புராணத்தில் கூறப்படும் தாடகை பிராட்டி மற்றும் நாட்டுபுறக் கதைகளில் வரும் அல்லி பவளக்கொடி போன்றன குமரிக் கண்ட உண்மையின் எச்ச மிச்சங்கள் ஆகும். குமரி என்ற பெயரை, சிலப்பதிகார ஆசிரியர் நமக்கு நல்குகிறார்.

நாகமும், பருந்தும் தோற்றக் குறிகள் நாகத்தின் அடியாக நாகர்கள் பெயர் பெற்றனர். முதலில் உலகமெங்கும் பரவியவர்கள் அவர்கள்.

குமரியை ஆண்டவர்களில் துவரைக் கோமானும் ஒருவர். துவரை என்பது துவாரகை அல்ல. த்வாரகா என்பதற்குப் பொருள் கதவம் கதவு. இரண்டாம் கழகப் பாண்டியர் தலை நகராகிய கபாடபுரமே துவாரகை எனப்படும் துவரை ஆகும்.

சிந்துவெளி எழுத்துகள்
வட்ட எழுத்துகள்
தமிழ் பிரம்மி – இந்திய எழுத்துகள்

சாத்தூர் சேகரன்

0.1 அசோகன் பிரம்மி எழுத்து

எழுபது ஆண்டுகளுக்கு முன் சிந்துவெளி எழுத்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. தமிழ் சங்க இலக்கியம், தொல்காப்பியம் ஆகியவனவும் கண்டுபிடிக்கப்படவில்லை, ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளும் அவற்றில் அடங்கிய அற்புதச் செய்திகளும் அக்காலத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலையில் அரைகுறைச் செய்திகளை வைத்துக் கொண்டு மிகக் குறைவான சான்றுகளை வைத்துக் கொண்டு அவசர அவசரமாகச் சிலர் சில முடிவு எடுத்தனர். அவை பின் வருமாறு :–

1. அசோகன் கல்வெட்டிற்குப் பின்னரே தமிழிற்கு எழுத்து முறை வந்தது.
2. அசோகன் கல்வெட்டிற்குப் பின்னரே தமிழ் இலக்கியங்கள் இலக்கணங்கள் உருவாகின.
3. சமஸ்கிருத இலக்கிய இலக்கணங்களைப் பார்த்துதான் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் உருவாக்கப்பட்டன என்றனர் சிலர்.

தமிழ் இலக்கியத்தைப் பயின்றவர்களோ தொல்காப்பியத்தைப் புரிந்தவர்களோ இங்கனம் கூறமாட்டார்கள். ஏனெனில் அவற்றில் வரும் மொழி நடையும் இலக்கிய இலக்கண மரபும் இந்நூல்கள் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே தமிழ் மொழி மூகிழ்த்திருக்க வேண்டும் என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சுட்டுகின்றன.

0.2 புதிய கண்டுபிடிப்புகள்

1927க்குப் பின் சிந்துவெளி, ஆரப்பா நாகரிகங்கள் பற்றி உலகிற்குத் தெரிய வந்தன. தமிழின் பெட்டகமாகிய சங்க நூல்கள் ஏடுகளில் இருந்து அச்சிடப்பட்டன. தொல்காப்பியம் அச்சிடப்பட்டன. இவ்வளவு புரட்சிகரமான செய்திகள் வந்தபோது பல அறிஞர்கள் மனம் மாறி தமிழ் உலகில் உள்ள தொன்மையான மொழிகளில் முதன்மையானது என்றனர். எல்லோருக்கும் எப்போதும் தக்க சான்றுகள் கிடைக்காது. கிடைத்த பின் தனது முதற் கோட்பாட்டை விலக்கிப் புதிய கோட்பாட்டை ஏற்றுக் கொள்வுதே அறிவுடமை ஆகும்.

0.3 பொய்யும் வழுவும் எமது தொழில்

ஆனால் சிலர் ஏற்கனவே பொய்யாகக் கூறப்பட்ட கருத்தையே - அசோகன் பிரம்மிக்குப் பின்னரே தமிழ் இலக்கியம் உருவாயிற்று என்ற தவறான கருத்தையே கூறினார். இவர்கள் இரு சாரார். சமஸ்கிருதத்தின் பழமையைச் சுட்டிக் காட்டி தமிழை இக்ழ்வது என்று கருதிய ஒரு சாரார், அந்த ஒரு சாராரைத் தழுவி வாழ்க்கை நடத்திய இன்னொரு சாரார். இதில் வேடிக்கை என்னவெனில், இரு சாராருக்குமே தமிழும் தெரியாது, சமஸ்கிருதமும் தெரியாது, பிற மொழிகளிலும் பாண்டித்தியம் கிடையாது. வரலாற்றுத் தன்மையோ இல்லவே இல்லை.

வையாபுரியார் போன்றோர் இரண்டாவது பிரிவில் அடங்குபவர். அக்காலத்தில் உயர் நிலையில் இருந்த சிலருடன் பழகிய காரணத்தாலோ, அன்னார் கூறியவற்றை எல்லாம் மெய் எனக்கருதியதாலோ, இப்படிப் பட்ட தவறான கருத்துக்களைப் பரப்பினர். "திருக்குறள் மனுநூலைக் காப்பியடித்தது" என்று பொய்யுரைத்தனர். தொல்காப்பியரோ பாணினியிடம் கடன் வாங்கினார்" என்று நேரில் பார்த்தவர் போன்று சத்தியம் செய்தனர்.

சமஸ்கிருதம் "தம்மொழி" என்று சிலர் கற்பனையாகப் புரிந்து கொண்டுள்ளனர். சமஸ்கிருதம் உண்டாக்கப்பட்ட ஒரு மொழி. வட இந்தியத் தமிழ் திரிந்து இருந்ததால் வட இந்தியத் தமிழுக்கும் தென்னிந்தியத் தமிழுக்கும் ஓர் இணைப்பு மொழியாக உருவாக்கப் பட்ட ஒரு மொழியே சமஸ்கிருதம். தமிழர் உருவாக்கிய மொழி.

அதன் முதல் கல்வெட்டே கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் கிர்நார் என்ற ஊரில் வெட்டப்பட்டது. அப்போது கூட அக் கல்வெட்டின் மொழி தான் சமஸ்கிருதமே தவிர எழுத்து தமிழ் பிரம்மியில் இருந்து திரிந்த வட பிரம்மி ஆகும். அதன்பின் சமஸ்கிருதம் பிராந்திய மொழிகளில் எழுதப்பட்டது. அப்போதும் அதற்கு என ஒரு எழுத்து முறை கிடையாது. இன்று காணப்படும் நகரி முறை எழுத்தும் சமஸ்கிருதத்திற்கு உரியது அன்று. நகரி முறையில் சமஸ்கிருத்ம் எழுதப்படும் வழக்கம் கி. பி. 1600க்குப் பின்னரே சிறு வழக்காக இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் பின்னரே பெருவழக்காக மாறியது. இப்போதும் கூட மொழிதான் சமஸ்கிருதமே தவிர, அதற்கு என தனிப்பட்ட எழுத்து முறை கிடையாது. இவையாவும் தக்க ஆய்வுக்குப் பின்னரே - கள ஆய்வு பல கண்ட பின்னரே எழுதப்பட்ட கருத்து. நுனிப்புல் ஆய்வு அல்ல.

இத்தனை விளக்கமான முன்னுரையின் பின் நம் ஆய்வைத் தொடங்குவோம்.

1. சிந்துவெளி எழுத்துக்கு முற்பட்ட எழுத்துகள்

தமிழகத்தில் மட்டுமல்ல, ஆந்திரத்திலும் கேரளத்திலும் சிந்துவெளிக்கு முற்பட்ட எழுத்துவகைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவை மூன்று வகைப்படும். 1. பெருமுக்கலில் முனைவர் தசரதன் புலவர் கண்ணையனால் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துகள். 2. பாவநாச மலையில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துகள் 3. அகழ்வாராய்ச்சித் துறை இயக்குநர் நடன காசி நாதனால் எனக்கு எழுதிக் காட்டப்பட்ட சிலவகை எழுத்துகள்.

(அ) பெருமுக்கல் எழுத்துகள்

இவற்றின் காலம் கி.மு. 12000க்கு முன் இருக்கவேண்டும். சிந்துவெளி எழுத்துகளின் காலம் கி.மு. 7000.

இங்கு காட்டப்பட்டுள்ளன, பெருமுக்கல் எழுத்துகளில் சில ஆகும்.



(ஆ) பாவநாசமலை எழுத்துகள்

இந்த எழுத்துகள் பாவநாச மலையில் இருக்கும் செய்தியைப் பரப்பியவர்கள் முனைவர் ஜான் சாமுவேலும் அவர் சார்ந்த ஆசியவியல் நிறுவனமும் ஆகும்.

இவைபோன்ற எழுத்துகளை முயன்றால் வேறு சில பகுதிகளில் காணாலாம்.



(இ) நடன காசிநாதன் கூறிய எழுத்துவகை



(ஈ) ஆந்திர எழுத்துகள்

2. சிந்துவெளி எழுத்துகள்

1927ல் இருந்தே சிந்துவெளி எழுத்துகளைப் பற்றிய செய்திகள் வரலாயின. ஆனால் அண்மை வரை படித்தறிய பல முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தும் அவையாவும் வெற்றி பெறவில்லை. 1992ல் முனைவர் இரா. மதிவாணன் எழுத்துக்களைத் தமிழ் எனப் படித்தார். இவர் சொற் பிறப்பியல் அகர முதலி திட்ட இயக்குனர். இவர் பன்னாட்டு மொழி மையத்தின் உறுப்பினரும், சிந்துவெளி நாகரிக ஆய்வாளர் மன்றத்தின் உறுப்பினரும் ஆவார். சிந்துவெளி எழுத்துக்கள் தமிழ் முறைப்படியே உயிரும் மெய்யுமான முறையில் அமைந்துள்ளன.

சிந்துவெளி உயிர் எழுத்து அட்டவணை



சிந்துவெளி மெய்யெழுத்து அட்டவணை



ஆய்வுக் கருத்து 1

பழந்தமிழில் இரட்டை மெய், ப்ப, வ்வ, ம்ம என்பன ஒட்டியோ ஒன்றின் கீழ் ஒன்று இட்டு எழுதும் பழக்கமோ இருந்தது. இன்றும் இப்பழக்கம் தென்னிந்திய தமிழ்க் கிளை மொழிகள் ஆன தெலுங்கு, கன்னடம், மலையாளத்திலும் உள்ளது. வடஇந்திய தமிழ்க்கிளை மொழிகள் என இந்தி, உருது, சிந்தி, வங்காளி, அசாமி, ஒரியா, காஷ்மீரி, மராத்தி, குசராத்தி மொழிகளிலும் உள்ளது. இன்னும் சொல்லப் போனால் இமயமலை தாண்டி நேபாள மொழி திபெத்திய மொழி, பூட்டான் மொழி ஆகியனவற்றின் எழுத்துக்களிலும் உள்ளன. சிந்துமொழி எழுத்துகளிலும் இம்முறை உண்டு.

ஆகவே சிந்துவெளிக்கு முற்பட்ட காலத்திலும் இந்தியா முழுவதும் பரவி இருந்த ஒரு முறையைத் தான் சிந்துவெளித் திராவிட மக்களும் கையாண்டுள்ளனர். எனவே சிந்துவெளிக்கு முற்பட்ட காலத்திலேயே தமிழுக்கு என ஒரு முறை இருந்து வந்திருக்கிறது என்பது தெளிவு.

ஆய்வுக் கருத்து 2

இந்தியாவின் பழைய மொழி தமிழ் மொழி மட்டுமே. இதில் இருந்தே வட இந்திய மொழிகளும் தென்னிந்திய மொழிகளும் பிறந்தன. அவையாவும் கி. பி. 500 – கி. பி. 1000 ஆண்டு காலத்திலேயே உருவாயின. அவற்றின் எழுத்துமுறையும் இக்காலக் கட்டத்திலேயே உருவாயின்.

ஆய்வுக் கருத்து 3

வேதமொழி நாடோடிகளின் (ஜிப்சி) மொழி. அவர்களுக்கு என ஓர் இயங்கும் அரசு இல்லாததால் எத்துறையிலும் அவர்கள் முதிர்ச்சி பெறவில்லை, வல்லவர்களாகவும் ஆகவில்லை.

அந்த நாடோடி மக்கள் கல்வி கற்பதற்காக கி.மு. 500 – 400 காலக்கட்டத்தில் வாய்மொழியாக பல்வேறு மக்களால் உருவாக்கப்பட்ட நாடோடிப் பாடல்களே வேதம். முதலில் ஒன்றாக இருந்தது. தமிழ் மக்களின் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு அடிப்படையான கருத்தின்படி வேதம் நான்காக, பிற்காலத்தில் பிரிக்கப்பட்டன. புலியைப் பார்த்து சூடு போட்டுக் கொண்ட பூனை போல் ருக் வேதம் என்பதை நான்காகப் பகுத்தனர். வேதம் எழுதாக் கிளவி, எழுதாக் கற்பு (குறுந்தொகை 156).

ஆய்வுக் கருத்து 4

வேத மொழி வேறு. சமஸ்கிருதம் வேறு. சமஸ்கிருதம் படித்தவர் வேதத்தைப் படிக்க இயலாது. வேதம் படித்தவர் சமஸ்கிருதச் சொற்களைப் புரிந்து கொள்ள இயலாது. இரண்டு மொழிக்கும் தொடக்கத்திலிருந்தே எழுத்து வடிவம் கிடையாது. கி. பி. 2ம் நூற்றாண்டில் தான் முதல் சமஸ்கிருத கல்வெட்டைக் காண்கிறோம். மொழி சமஸ்கிருதம். எழுத்து வட இந்திய பிரம்மி.

ஆய்வுக் கருத்து 5

வேதம் பின்னாளில் கி. பி. 15–16ம் நூற்றாண்டுகளில் நகரி எழுத்துகளில் எழுதப்படலாயின. பல பிராந்தியங்களில் ஆங்காங்கு இருந்த எழுத்துவகையில் எழுதப்பட்டன. இன்றளவும் வேதத்திற்கு எழுத்து கிடையாது.

ஆய்வுக் கருத்து 6

சமஸ்கிருதம் கி.பி. 2ம் நூற்றாண்டு வரை எழுதப் படவில்லை. இன்றளவும் அதற்கு என சொந்த எழுத்து முறை கிடையாது. இன்று எழுதப்படுவது நகரி எழுத்தில். இதுவும் தமிழ் எழுத்தின் கிளை வகையைச் சார்ந்ததே.

ஆய்வுக் கருத்து 7

அசோகன் கால வட இந்திய எழுத்தான வட இந்திய பிரம்மி முறை திடீரென உண்டாகியது என்கிறார் எஸ். ஆர். கோயல். இம்முறை எப்படி வந்தது, ஏன் வந்தது எங்கிருந்து வந்தது எனத் தொடர் வினா எழுப்புகிறார். எனவே வட இந்திய பிரம்மி வட இந்தியாவில் படிப்படியாக பரிணாம வளர்ச்சி பெற்று உண்டாகவில்லை. வெளியே இருந்து வந்த முறை என்னும் போது, ஏன் தமிழ் பிரம்மியில் இருந்து வந்து இருக்கக் கூடாது?

ஆய்வுக் கருத்து 8

தமிழருக்கு உள்ள உண்மையான மதிப்பைக் குறைக்கும் நோக்கத்தில் தமிழ் எண்களை அரேபிய எண்கள் என்று அண்மைக் காலம் வரை கூறிவந்ததைப் போல, சிந்துவெளி நாகரிகத்தை – சுமேரியர் நாகரிகம் என்று போலியாகச் சிலர் கூறி வருகின்றனர்.

தமிழ் பிரம்மி எழுத்திலிருந்து வட இந்திய பிரம்மி உருவாயிற்று. உண்மை இவ்வாறு இருக்க வட இந்திய அசோகன் பிரம்மியில் இருந்தே தமிழ் பிரம்மி உருவாயிற்று என்ற போலிக் கருத்தைப் பரப்புகின்றனர் சிலர். ஆதாரமோ சான்றுகளோ கேட்டால், கூறுவதில்லை.

ஆய்வுக்கருத்து 9

உலகில் எழுத்துகளை உயிர், மெய் மற்றும் உயிர்மெய் எனப்பாகுபாடு செய்த முதல் மொழி தமிழே.

அகரத்திற்கு ஆகாரம் நெடிலாக இருக்கிறது.
இகரத்திற்கு ஈகாரம் நெடிலாக இருக்கிறது.
உகரத்திற்கு ஊகாரம் நெடிலாக இருக்கிறது.

ஆனால் வட இந்திய பிரம்மி மற்றும் நகரி எழுத்துகளில் ஏகாரமும் ஓகாரமும் இருக்கின்றன. அவற்றின் குறில்கள் எங்கே? குறில் ஓசை இன்றி நெடில் ஓசை

இருக்கவே முடியாது. எனவே தமிழில் இருந்தே வட இந்திய மொழிகளும், சமஸ்கிருதமும் எழுத்து முறையைப் பெற்றன எனலாம்.

ஆய்வுக் கருத்து 10

"உட்பெறு புள்ளி .... " என்ற தொல்காப்பியக் கருத்தால் குறில் எகர ஒகரம் புள்ளி பெற்றிருந்தன.

பழைய முறையில் தமிழ் அட்டவணை

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஒ ஔ

ஏடுகளில் இருபுறம் எழுதியதால் புள்ளி இட்டால் மறுபுறம் துளைத்துச் சென்றுவிடும் என்பதால், புள்ளியிடாலே எழுதினர்.

முற்கால நெடில் இக்கால குறில் அமைப்பில் உள்ளது.

எ ,ஒ → = ஏ , ஓ → எ , ஒ

அண்ணன் என்ற சொல் அணணன என்று ஓலையில் இருக்கும். படிக்கும் போது அண்ணன் என்று படிப்பர். அக்கா என்ற சொல் அககா என்று ஏடுகளில் இருக்கும். அக்கா என்று படித்து அறிவர். அம்மா என்ற சொல் அமமா என்று ஏட்டில் இருக்கும், ஆயினும் அம்மா என்றே ஓதுவர். வந்து போயினான் என்ற கூட்டுச் சொல் வநது போயினான என்று தான் எழுதப்பட்டிருக்கும் என்றாலும் வந்து போயினான் என்றே படிப்பர்.

இன்றும் வட இந்திய மொழிகளில் இவ்வாறே எழுதப்படுகின்றன.

कमलम = கமலம = கமலம்

க ம ல ம என்று எழுதிவிட்டு, கமலம் என்று படிப்பர்.

ஆய்வுக் கருத்து 11

எகர ஒகரம் குறிலும் நெடிலும் ஒன்று போல் இருந்ததால் உண்மையை உணராத நடுக்கால வட இந்திய பண்டிதர்கள் ஒரே எகர ஒகரத்தை எழுதினர். அவை முற்கால அமைப்பின் படி நெடிலாகவே வாசிக்கப்பட்டன.

ஆய்வுக் கருத்து 12

தமிழ் வணிகன் என்ற சொல் திரியும். வணிகன் = வணியன்= வணிய்.
ய = ஜ என்பதால் வணிஜ் என மாறி வரும். வ = ப என்பதால், வணிய் பணிய் என்று மாறி பணியா என குஜராத் பகுதியில் மாறும். தமிழ அகரம் சிலபோது மேற்காசிய தமிழ் மொழியிலும் ஐரோப்பிய தமிழ் மொழியிலும் இகரமாகத் திரியும். பணிய் =பனிஜ்= பினிஜ் – பினிஷ் என மாறி வரும். எனவே பினிஷியர் என்போர் சிறியா நாட்டில் குடியேறிய தமிழ் வணிகர் ஆவார்.

ஆய்வுக் கருத்து 13

இந்த ஆய்வுக் கருத்து என்னுடையதல்ல. அண்மையில் இறந்து விட்ட மாண்புமிகு திருமிகுதிரு சந்திர சேகரேந்திர சங்காராச்சாரி அவர்களின் கருத்து. அவர் சிறந்த சமஸ்கிருத அறிஞர் என்பது பற்றி யாருக்கும் ஐயம் இருக்காது. அவர் என்ன கூறுகிறார்?

"எந்த தேசத்திலும் எந்தக் காலத்திலும் ஸம்ஸ்கிருதம் தேசபாஷையாகப் பேசப்படவில்லை என்று தெரிகிறது"

ஸம்ஸ்கிருத பாஷாப் பிரயோஜனம்

29-10-1932ம் வருஷம் சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அருளிய நன்மொழிகள் இரண்டாம் பாகம் "சங்கர விஜயம்" பக்கம் 4.

மதராஸ் லா ஜர்னல் ஆபிஸ், மயிலாப்பூர், சென்னை. 1933

ஆய்வுக் கருத்து 14

இதே போன்ற மற்றொரு சமஸ்கிருத அறிஞரான கே. ஆர். சுப்ரமணியன் கூறுகிறார்.

"இந்தியாவில் ஏதேனும் ஒரு சில மக்கள் கூட எப்போதாவது சமஸ்கிருதம் பேசினர் என்பது ஐயப்பாட்டிற்கு உரியதே. இலக்கியத்திற்காயினும், சமயத்திற்காயினும் ஊடகமாகவும் அது இருந்தது என்பதுவும் ஐயப்பாடு உள்ளதே."

The origin of Saivism and its history in the Tamil Land (1929)

(இன்னும் பல அறிஞர்கள் இங்கனமே கூறுகின்றனர். விரிவாக்கம் கருதி இத்துடன் நிறுத்தியுள்ளேன்.)

ஆய்வுக் கருத்து 15

கி. மு. 600க்குப்பின் வடக்கில் சாருசேனி, பைசாசி, மகதி, அர்த்த மகதி பைசாசி ஆகியன இருந்தன. மத்திய இந்தியப் பகுதிகளில் மகாராஷ்டிரி இருந்து வந்தது. தெற்கில் தமிழ் இருந்தது.

வல்லொலி சேர்க்கப்பட்டபின் தமிழ் பிரம்மி வட இந்திய பிரம்மி ஆயிற்று.

தமிழில் ஒரே ஒரு ககரம் உண்டு. இதுவே மூன்று நான்கு ஒலிப்பை இடத்திற்கு ஏற்ப மாறும்.

Ka, kha, ga, gha

இந்த மொழிகளில் எதனில் இருந்தும் வட இந்திய பிரம்மி அல்லது அசோகன் பிரம்மி பிறக்கவில்லை. தமிழ் பிரம்மி எழுத்தைச் சிறிது மாற்றியே தம் அட்டவணையைச் செய்து கொண்டிருக்கின்றன.

தமிழ் பிரம்மி: உயிர்



அசோகன் பிரம்மி: உயிர்



தமிழ் பிரம்மி: மெய்



அசோகன் பிரம்மி: மெய்



முன்பே கூறியபடி எகர, ஒகரக் குறில் புள்ளி இல்லாததால் இரு ஏகார ஓகார நெடிலாகக் கருதப்பட்டு வட இந்திய பிரம்மியில் ஒரே ஒரு ஏகார, ஓகார நெடிலை மட்டும் வைத்துக் கொண்டு குறில் அமைப்பை விலக்கிவிட்டனர்.

ஆய்வுக் கருத்து 16

கி.பி. 500 ஆண்டுகளை ஒட்டி இந்தியாவில் இருந்த எழுத்து வகைபற்றி சமவயங்க சுத்த என்ற நூலும் பன்னவயன சுத்த நூலும் கூறுகின்றன. அப்போது 18 வகை எழுத்து வகைகள் இருந்தன என்று தெரிய வருகின்றது. ஆனால் அவற்றில் தமிழி எனக் குறிக்கப்பட்ட தமிழ் எழுத்து தவிர, பிற ஒன்று கூட தற்கால மொழியையோ இடைக்கால மொழியையோ குறிப்பிடவில்லை.

18 வகை எழுத்துகள்

1.	தமிழி	10.	பம்மி (பிரம்மி)
2.	தவனநய்ய	11.	யவர்னனி
3.	சின்னஹய	12.	தோச புரியா
4.	அங்கலிவி	13.	கரோத்தி
5.	கணித (லிவி) லிபி	14.	பொகாயைய
6.	கம்தாவ்ய லிபி	15.	பகாரைய
7.	ஆதாம்ச லிபி	16.	பொக்காரசரிய
8.	மகாசானி	17.	உயமித்ரகாரிய
9.	பொலிம்தி	18.	அக்பர புத்திய

அக்காலத்தில் சமஸ்கிருத எழுத்துகள் இல்லை என்பது உறுதி செய்யப்படுகின்றன, தேவநகரி எழுத்துகளும் உற்பத்தியாகவில்லை.

இந்த 18 எழுத்து வகைகளையும் நான்காகப் பிரிக்கலாம்.

1. தமிழி அல்லது திராவிடி
2. யவனிக்கா
3. கரோஸ்டி
4. பிரம்மி அல்லது பம்மி

இவைபற்றி வரருச்சி கருதுவது : "மகராஸ்டிரி, பைசாசி, மகதி மற்றும் சூரசேனியும் நல்ல பிராகிருதம் ஆகும்"

யாரேனும் பிராகிருத மொழியைச் சுட்டிக் காட்ட விரும்பினால் மகாராஷ்டிரத்தில் உள்ளதைத்தான் காட்டவேண்டும்.

ஆய்வுக் கருத்து 17

தமிழ் வட்ட எழுத்தைப் பற்றி முதலில் கூறியவர்கள் – இவை பிற்காலச் சோழர் (கி. பி. 8ம் நூற்றாண்டு) எழுத்து என்றனர். பின்னர் பல்லவர் காலத்தில் (கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு) உள்ள எழுத்து என்றனர். ஆனால் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலும் வட்டெழுத்து உண்டு என்றனர் ஆழமாக ஆராய்ந்து பார்த்த சில அறிஞர்கள்.

இன்று கி. மு. 5ம் நூற்றாண்டில் உள்ள தமிழ் பிரம்மி எழுத்துக்களின் ஊடே சிற்சில எழுத்துகள் இருப்பதால், வட்ட எழுத்துக்களின் பழமை கி.மு. 5ம் நூற்றாண்டிற்கும் முன்னே செல்கிறது.

ஆய்வுக் கருத்து 18

தமிழ் வட்ட எழுத்து உலகில் 30க்கு மேற்பட்ட மொழிகளில் இருக்கிறது என்று அறியப்படும் பொழுது, வட்ட எழுத்தின் பழமையும் பெருமையும் கூடுகிறது.

அண்டை அயல் மொழிகள்

சாவகம்	சிங்களம்
பர்மிய மொழி	ஆதி மலாய்

இந்திய மொழிகள்

தெலுங்கு	கன்னடம்
ஒரியா	பழைய மோடிமொழி
மலையாள எழுத்து	கிரந்த எழுத்து
பஞ்சாபி எழுத்து	

பாதி வட்ட எழுத்து

தாய்லாந்து	லாவோசு
வியட்நாம்	உருது
அரபி	பெர்சியன்
இராக்கி	ஹிப்ரு
பினிசியன்	சிந்தி
காஷ்மீரி	தமிழ் பிரம்மி
வட இந்திய பிரம்மி	நகரி எழுத்து
திபெத்திய எழுத்து	பூட்டானிய எழுத்து
அசாமி எழுத்து	வங்காள எழுத்து

தொலைதூர மொழிகள்

கொரியா	ரோமானிய வட்டம்

ஆய்வுக் கருத்து 19

தமிழ் பிரம்மியில் இருந்து மட்டுமே வட இந்திய பிரம்மி கிளைத்து இருக்க முடியும் என்று ஏற்கனவே கூறியுள்ளோம்.

ஆனால் சிந்து வெளி காலத்தின் பின் ஒழுங்கான உயிர் மெய் அட்டவணை ஏற்பட்ட பின் குமரிக்கண்டத்திலும் இந்தியாவிலும் இருந்த எழுத்துவகை எது என்ற கேள்வி பிறக்கிறது. அது வட்ட எழுத்தா? அல்லது தமிழ் பிரம்மி எழுத்தா? ஒன்றுக்கொன்று என்ன உறவு? இது அடுத்த கேள்வியாகும்.

சில ஒற்றுமைகளை இங்கே காண்போம்

இன்றைய தமிழ் எழுத்து

தமிழ் வட்ட எழுத்து

தமிழ் பிரம்மி



இன்றைய தமிழ் எழுத்து

தமிழ் வட்ட எழுத்து

தமிழ் பிரம்மி



ஏற்கனவே 30க்கு மேற்பட்ட மொழிகளில் வட்ட எழுத்தின் ஆதிக்கம் இருப்பதாலும் தொலை தூர நாடுகளுக்குச் சென்றிருப்பதாலும் வட்ட எழுத்தின் காலம் கி.மு. 7000 மேல் எல்லையாகவும் கி.மு. 500 கீழ் எல்லையாகவும் இருந்திருக்கக் கூடும். மீண்டும் இரண்டாவது கட்ட வளர்ச்சியாக கி.மு. 300 முதல் கி.பி. 1000 வரை வளர்ந்திருக்க வேண்டும். கி.பி. 1000க்குப் பின் ஓரளவு கோடு சார்ந்த தமிழ் எழுத்தாகி இன்றாய தமிழ் எழுத்தாக மாறி இருக்க வேண்டும். கி. பி. 1000க்குப் பின்னரே இந்த தமிழ் எழுத்து வட இந்திய நகரி எழுத்தாக மலர்ந்திருக்கிறது.

ஆய்வுக் கருத்து 20

சிந்துவெளி எழுத்து – வட்ட எழுத்து – தமிழ் பிரம்மி ஆகிய மூன்று எழுத்து வகைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வோம்.

இன்றைய தமிழ் எழுத்து

சிந்துவெளி எழுத்து

வட்ட எழுத்து

தமிழ் பிரம்மி



இன்றைய தமிழ் எழுத்து

சிந்துவெளி எழுத்து

வட்ட எழுத்து

தமிழ் பிரம்மி



இந்த அட்டவணையைக் காணும் போது வட்ட எழுத்துக்களில் இருந்தே தமிழ் பிரம்மி வந்திருக்கக் கூடும் எனத் தெரிய வருகிறது.

ஆய்வுக் கருத்து 21

ஓலையில் எழுதும் போது சில நுட்பங்களை கவனிக்க வேண்டியுள்ளது. (1) ஓலையில் இருபுறமும் எழுதியதால் புள்ளி எழுத்திற்குப் புள்ளி இடவில்லை. இதனால் பல கிளை மொழிகளில் தமிழ் சற்று மாறியுள்ளது. (2) தமிழில் இடவலமாக எழுதி வர, மேற்கு ஆசிய பகுதி மக்கள் வட்ட எழுத்தை வலமாக எழுத முயன்றனர். இதனால் தமிழ் எழுத்துக்களில் சில பாதி எழுத்தாகின. சில வல மாற்றமோ தலைகீழ் மாற்றமோ பெற்றன. (3) தமிழில் உயிரெழுத்துக்களுக்குத் தனி எழுத்து வகை இருந்து அவற்றையே

இன்று வரை எழுதி வருகிறோம். ஆனால் மேற்காசிய மக்கள் அ, இ, உ என்ற உயிரினை மட்டும் குறியீடுகளாக எழுத்தின் மேற்புறம் அல்லது கீழ்புறம் இடத்தொடங்கினர். இன்றும் அவற்றிற்குத் தனி உயிர் எழுத்து இல்லை. (4) ஓலையில் நுண்ணிய நரம்புகள் நெடுவாக்கில் இருப்பதைக் காணலாம். எனவே 'ப' என்று ஓலையில் எழுதினால் l l இரண்டு கோடுகள் மட்டுமே தெளிவாகத் தெரியும். கிடைக்கோடு சரியாகத் தெரியாது. மாறாக U எனப் பகரத்தை வட்ட எழுத்தாக எழுதினால், பகரம் தெளிவாகத் தெரியும். எனவே ஆதி சிந்துவெளி எழுத்துகளை ஓலையில் எழுதத் தொடங்கிய போதே வட்ட எழுத்து முறை ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆய்வுக் கருத்து 22

திருமந்திரத்தில் தமிழ் எழுத்துகள் 51 என வருகிறது. இந்தியாவின் ஏதோ ஒரு பகுதியில். தமிழை 51 எழுத்துகள் ஆக்கும் முயற்சி நடைபெற்றது என்றும் அதன் பின்னரே தமிழில் இன்றும் இருந்து வரும் 30 உயிர் மெய் எழுத்துகள் வட இந்திய மொழிகளில் இன்றைய 51 எழுத்து வகையாக மாறி இருக்க வேண்டும் என்று தெரிய வருகிறது.

ஆய்வுக் கருத்து 23

(1) வட இந்தியாவின் ஊர்ப் பெயர்கள் நூற்றுக்கு நூறு இன்றும் தமிழாகவே உள்ளன. சில இடங்களில் திரிந்துள்ளன. (2) இவ்வாறே மக்கட் பெயரும் நூற்றுக்கு நூறு தமிழாகவே உள்ளன. சில இடங்களில் திரிபு 40 சதவிகிதம் வரை இருக்கலாம். (3) எழுத்து முறையிலும் வட இந்திய பிரம்மி ஆனாலும் சரி, பின்னர் தோன்றிய நகரி முறை ஆனாலும் சரி இவையாவும் தமிழின் எழுத்து வகைகளில் இருந்து கிளைத்தனவே ஆகும்.

(4) சொற்கள் என்று வந்தால் யாவும் தமிழைச் சற்று திரித்தே தம் சொற்களை அமைத்துள்ளன. (5) இலக்கண முறையும் தமிழ் இலக்கணத்தைச் சற்று மாற்றியோ, திரித்தோ அமைத்துள்ளன. (6) சொற்றொடர் அமைப்பில் நூறு சதவிகிதம் தமிழாகவே வட இந்திய மொழிகள் உள்ளன.

ஆய்வுக் கருத்து 24

சிந்துவெளி எழுத்து முதல இன்றுள்ள அத்தனை இந்திய எழுத்து வகைகளும் இங்கேயே உருவாயின. எல்லாமே தமிழ் எழுத்தைத் திரித்தே பிறந்தன.

இவற்றின் உருவாக்கத்திற்கு ஆரியர் அல்லது வேதமொழி பேசி வந்தோருக்கு எவ்வித ஒட்டோ உறவோ கிடையாது. ஏனெனில் வேதமொழிக்கே எழுத்து இல்லையே!

ஆய்வுக் கருத்து 25

இந்திய எழுத்து முறைக்கே சிந்துவெளித் தமிழ் எழுத்து, தமிழ் வட்ட எழுத்து மற்றும் தமிழ் பிரம்மியே காரணமாகும். இவ்வாறே இந்திய பண்பாடு, கலை, நாட்டியம், இயல், இசை, நாடகம், சித்திரம், சிற்பம், கட்டிடக் கலை போன்ற

அனைத்திற்கும் குமரித் தமிழராகிய இந்தியரே காரணமாகும். வெளியிலிருந்து வந்தோர் பங்கு எதுவுமே இல்லை. இந்திய சமயங்களுக்கும் தத்துவங்களுக்கும் இவ்வாறே குமரித்தமிழராகிய இந்தியரே காரணம். உள்நாட்டு மக்களின் முழு முயற்சியே காரணமாகும். அயலவரின் பங்கு ஒரு சதவீகிதம் கூட இல்லை. இல்லவே இல்லை.

ஆய்வுக் கருத்து 26

சிந்துவெளி எழுத்தின் முற்பட்டதாகக் கூறப்படும் சிலவகை எழுத்துகள் கீழே உள்ளன. இவற்றில் சில வட்ட எழுத்து முறைபோல் உள்ளன. சில கோட்டு எழுத்தாகத் தெரிகின்றன.



எனவே சித்திர எழுத்துக் காலத்தின் பின் தமிழில் சிந்துவெளி எழுத்து முகிழ்த்ததா அல்லது வட்ட எழுத்தும் கோடு சார்ந்த வட்ட எழுத்தும் கிளைத்ததா என்பது ஆய்வுக்கு உரியதுய

ஆய்வுக் கருத்து 27

உலக மொழிகளில் தமிழின் எழுத்துக்களே உள்ளன என்று பல இடங்களில் சுட்டிக் காட்டி இருந்தேன். இங்கு எடுத்துக்காட்டாக சில மொழிகளை மட்டும் பார்ப்போம்.



பிணிசியன்

ஹிப்ரு

அரபி



ஆய்வுக் கருத்து 28

பினிசிய எழுத்துகள் கிரேக்க மொழிக்குப் போய் அதன் திரிபே ஐரோப்பிய மொழிகள் ஆயின என்பது நீண்ட நாளாக நிலவிவரும் ஒரு கருத்தாகும். இது தவறான கருத்து. எப்படி ஐரோப்பிய மொழிகளுக்குத் தமிழே தாய்மொழியோ . அவ்வாறே தமிழ் எழுத்துக்களே ஐரோப்பிய எழுத்துகளுக்கும் தாயாகும். சில ஐரோப்பிய எழுத்துகள் எப்படி தமிழி இருந்து பிறந்துள்ளன என்பதைப்பார்ப்போம்.

இன்றைய தமிழ் ப் , ட் , ல் த் , வ் , ர் , ய் க் ச் ம் ந்

சிந்து வெளி

தமிழ் வட்ட எழுத்து

தமிழ் பிரம்மி

கிரேக்க எழுத்து

ரோமன் எழுத்து



ஆய்வுக் கருத்து 29

இந்திய மொழிகளின் எழுத்துகள் தமிழில் இருந்தே உருவாகியுள்ளன. சிந்துவெளி – வட்டெழுத்து – தமிழ் பிரம்மி, ஆகிய இம்மூன்று முறையின் சாத்தமே வட இந்திய எழுத்துகள். இன்றைய நகரி எழுத்தில் உள் தமிழ்த் தாக்கத்தைப் பார்ப்போம்.



முடிவுரை

சிந்துவெளி தமிழ் எழுத்து –தமிழ் வட்டெழுத்து – தமிழ் பிரம்மி ஆகியனவே உலக மொழி எழுத்துகளின் மூலம் ஆகும்.

இக்கட்டுரை ஆசிரியருக்கு உலக மொழிகள் நூற்றுக்கு மேல் படிக்கத் தெரியும் என்பதால் இங்கு ஆய்வுக் கருத்துகளாக கூறப்பட்டன யாவும் உண்மை என்றே எடுத்துக் கொள்ளலாம். மேலும் இக்கட்டுரை ஆசிரியர் அருளாளர் டாக்டர். நா. மகாலிங்கம் அவர்கள் அன்பாலும், அருளாலும் உலக நாடுகள் பலவற்றிற்குச் சென்று கள ஆய்வு செய்துள்ளார்.

ஒரு மொழிக்கு அடிப்படை எழுத்து – சொல் – சொற்றொடர் – இலக்கணம் ஆகிய நான்குமே. உலகில் உள்ள பெரிய மொழிகள் 400 வரையிலும் – 95 சதவிகித உலகமக்கள் பேசும் மொழிகளை ஆராய்ந்து பார்த்ததில் யாவும் தமிழ் எழுத்து, சொல், சொற்றொடர் இலக்கண அமைப்பைக் கொண்டே இலங்குகின்றன. கால இட வேறுபாட்டிற்கு ஏற்ப திரிபுகள் மட்டுமே உள்ளன. இதுகாறும் உலகில் உள்ள எந்த ஒரு மொழியும் எந்த ஒரு சொல்லையும் படைத்திடவில்லை. யாவும் தமிழ் வேர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு பிறந்தனவே ஆகும். எனவே உலக மொழிகள் யாவும் பழந் தமிழ்மொழியின் (பழந் திருவிட மொழி என்றோ குமரிக் கண்ட மொழி என்றோ கூறிக் கொள்ளலாம்.) கிளை மொழிகளாகவே காட்சியளிக்கின்றன.

எதிர்கால ஆய்வுகள் இவற்றை முற்றிலும் மெய்பிக்கும் என நம்புகிறேன்.

யாதும் ஊரே! யாவரும் தமிழர்!!

நன்றி

தமிழுக்கு அணிகலனாயும் தமிழ் ஆய்பவர்களுக்கு உற்ற கருவியாகவும் விளங்கும் இத் தமிழ் மலருக்கு மனமுவந்து விளம்பரம் தந்து உதவிய அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களுக்கும், தமிழ் வள்ளல்களுக்கும் நிறுவனங்களுக்கும், நன்கொடை நல்கிய நல்ல தமிழ் உள்ளங்களுக்கும் எங்கள் மலர்க்குழு சார்பில் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநாடு நடக்கப்போகும் செய்தி அறிந்து பாராட்டிய அன்பர்களுக்கும் பேராளர் கட்டணத்தை அனுப்பிய நல்லோர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒத்துழைப்பு தந்த பல்வேறு சங்கங்களுக்கும் பேரவைகளுக்கும் எங்கள் நன்றியை காணிக்கையாக்குகிறோம்.

குறுகிய காலத்தில் விரைந்து அச்சிட்டுத் தந்த ஜோதி ஆப்செட் திரு பால்ராஜ் அவர்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

இங்கனம்

மலர்க் குழுவினர்.

மாருதி வாகனங்கள் வாங்கிட, வருகை தாரீர் ABT
மாருதி வாகனங்கள் சர்வீஸ்
செய்திட நாடிடுவீர் ABT.

ABT

எல்லா 'மாருதி' வாகனங்களுக்கும் பிரபலமான
ஒரே ஸ்தாபனம் இதுவே.

எல்லோருடைய தேவைக்கும் ஏற்றபடி
உடனடியாகக் கடன் வழங்க வகை செய்யும் திட்டம்.
குறைந்தபட்ச சர்வீஸ் கட்டணம்.
குறைவான வட்டி விகிதம்.



விலாசம்:

ABT லிமிடெட்,
102, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை-600 032.
போன்கள்: 2352449/2351449/
2350333/2352621/2352622.
தந்தி: Minicar டெலக்ஸ்: 041-8970 ABT IN.

ABT லிமிடெட்,
6, பை பாஸ் சாலை, பாத்திமா நகர்,
மதுரை-625 016. போன்: 37936.

ABT லிமிடெட்,
654, அவிநாசி சாலை, கோயம்புத்தூர் - 37.
போன்: 215366/210153
டெலக்ஸ்: 041-355 ABT IN

ABT லிமிடெட்,
மாம்பலம் சாலை,
சென்னை டிரங்க் சாலை,
திருச்சிராப்பள்ளி-620 005.
போன்: 63199.

MARUTI

With best compliment from

Bannari Amman Sugars Limited

Manufacturers of
HIGH QUALITY WHITE CRYSTAL SUGAR
&
POLISHED GRANITE PRODUCTS-100% EOU

Registered Office :
252 Mettupalayam Road ☆ Coimbatore 641 043
TAMILNADU

Factories :

Alathukombai ☆ Sathyamangalam Taluk
Periyar Dist ☆ TAMILNADU
Alaganchi ★ Nanjangud Taluk ☆ Mysore Dist ☆ KARNATAKA

With best compliments from

Sri Chamundeswari Sugars Limited

Regd. Office :

76, Ulsoor Road BANGALORE-560042

Phone : 577033

Factory :

K. M. Doddi Maddur TK. Mandya Dist.

Phone : 20404 (Mandya)

Next time you visit Madras be a little unfaithful



We know it's not easy.

Many come close to giving in. Few take the plunge.

Yes, we all know how difficult it is to switch hotels.

But now, we've made being unfaithful easier.

Quality Inn Aruna opens in Madras.

And it's not just the fact that QIA is a spanking new luxury hotel.

Or that it has elegantly appointed rooms and suites, a swimming pool, a business centre, speciality restaurants, a coffee shop and a cocktail lounge.

Or even that it is promoted by the Rs.100 crore Aruna Sugars group. In collaboration with Choice Hotels International, the world's largest hotel chain.

It's simply this: the wonderful fact that unlike other hotels, QIA doesn't charge Shylock rates.

Not even the 20% Expenditure Tax that is sneaked in to small print on other tariff cards.

Quite a nice price for infidelity, you must admit.

Quality Inn

Aruna

A member of the world's largest hotel chain

144 Sterling Road, Madras 600 034. Phone: 8259090, Fax: 8258282

4576 R

அறிவாயுதங்களை உருவாக்குவோம்!
அய்யா பணியை நிறைவாக்குவோம்!

- கவிஞர் பல்லவன்

நல்வாழ்த்துகளுடன்...

அடையாறு

மாணவர் நகலகம்

• ADYAR	Opp. Adyar Bus Terminus	Ph : 411358
• ANNASALAI	Near. Anand Theatre	Ph : 8251433
• ANNANAGAR WEST	Thirumangalam Junction	Ph : 6162764
• PONDY BAZZAR	Next. Nagesh Theatre	Ph : 446580
• NUNGAMBAKKAM	Near. Ganpat Hotel	Ph : 8278983
• TEYNAMPET	Opp. Anna Arivalayam	
• MYLAPORE	Opp. Jammi Building	
• GUINDY	Opp. Guindy Railway Station	

ADYAR
STUDENTS XEROX
Integrated Business Services

டி.என்.ஜி. எஸ்.டி எண் 959703
சி. எஸ். டி. எண் 88748
டி. என். சி. டி. ஏ. எண். 83 - சி.

தொலை பேசி : 55 25 21
55 37 50

சந்திரமோகன் கம்பெனி

பருப்பு உற்பத்தியாளர்கள்

171 ஜி. ஏ. சாலை, சென்னை - 600 021.

[ஏ. சங்கரலிங்கம்] எஸ். திருமாறன் & எஸ். ராஜேந்திரன்

எங்கள் சிறப்பு தயாரிப்பு :

சங்கர், 24 காரட்ஸ், மனோரஞ்சிதம், "999" & செண்பகம்.

ராஜ் மாறன் கம்பெனி

டி.என்.ஜி. எஸ். டி 959996 சி.எஸ்.டி 88878 (எம் கிளை நிறுவனம்)

எங்கள் தயாரிப்பு :

ராஜ்மாறன், மார்க், வின்ஸ், ஆகிய உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, பயற்றம் பருப்பு வகைகள்.

WISHES – WISHES – WISHES

Telex : NALLENNAM
Phone : 551269
553538

M.S. MARIAPPA NADAR

Dhall Merchants

118, Surya Narayana Chetty Street,
Royapuram, Madras 600 013.

USE ALWAYS
M.S.M. 'MANI' Special Gundu Orid Dhall
M.S.M. 'ENGINE' Brand Split Orid Dhall
M.S.M. 'BLUE STAR' Dry Gundu Orid Dhall
M.S.M. 'SUKKAN' Brand Dry Split Orid Dhall

TRADE ENQUIRIES WELCOME

With Best Compliments of

M. ARUNJUNAI NADAR & SONS

General Merchants

No.14, Singara Garden 8th Lane, Washermenpet, Madras 600 021

&

CHOLA PRINTERS

15, Singara Garden 8th Street, Washermenpet, Madras 600 021

WITH THE BEST COMPLIMENTS OF

TNGST. NO. 010759
CST. NO. 6114 / 69 -70
TNETAO. NO. 34 -C/ 84 -85

Phone 55 10 86
55 33 10

KUMARAN TRADERS

Dhall merchants
10, Kamaraj Park Street,
Royapuram, Madras - 600 013.

* * *

USE ALWAYS
'S N D' Brand
Best Orid Dhall.

WITH BEST COMPLIMENTS FROM

DIAL : 826 97 06
826 19 22

SATINOOD (P) LIMITED,

60, Pantheon Road, Ist Floor,
Egmore, Madras - 600 008.

DRAWING OFFICE EQUIPMENTS
STEEL OFFICE FURNITURES
COMPUTER FURNITURES
LIBRARY FURNITURES
INDUSTRIAL FURNITURES
MODULAR PLASTIC OFFICE SYSTEMS
AIRODYNE AIR CURTAINS
FIRE PROTECTION CABINETS

TEMPLE OF COSTUMES

LATEST DESIGN
AND
BEST QUALITY

SILK SAREES

PHONE : 44 41 15 (7 Lines)
44 56 57
44 70 52
44 27 75

TELEX : 041 - 23299 - SILK - IN.
FAX - 044 - 443062 .

NALLI CHINNASAMI CHETTY

Silk Cloth and Piece Goods Merchants

(Air Conditioned)

Thiagarayanagar (Panagal Park)

MADRAS - 600 017.

பூம்புகார் பதிப்பகம் வழங்கும் பாவேந்தர் பாரதிதாசனாரின் புகழ்மிக்க நூல்கள்

குடும்ப விளக்கு	(காப்பியம்)	16 . 50
குறிஞ்சித்திட்டு	"	24 . 00
காதலா ? கடமையா?	"	12 . 25
பாண்டியன் பரிசு	"	13 . 00
தமிழச்சியின் கத்தி	"	8 . 00
கண்ணகி புரட்சி காப்பியம்	"	18 . 50
மணிமேகலை வெண்பா	"	12 . 00
எதிர்பாராத முத்தம்	"	6 . 50
தமிழ்	(கவிதைகள்)	34 . 00
இளைஞர் இலக்கியம் - 1	"	10 . 00
இளைஞர் இலக்கியம் - 2	"	16 . 00

பூம்புகார் பதிப்பகம்

63, பிராட்வே
சென்னை - 600 108.
தொலைபேசி : 51 31 43

முன் வெளியீட்டுத் திட்டம்

திருமூலரின் திருமந்திரம்

திருமந்திரம் முழுவதும் விளக்க உரை குறிப்புரையுடன்

* லேசர் அச்சுக்கோப்பு
* நல்ல தாள்
* பக்கங்கள் - 1600
* ஆப்செட் அச்சு
* காலிகோ கட்டு
* நூலின் விலை ரூ 300

முன்வெளியீட்டு விலை ரூ 200
முன் பதிவு செய்ய கடைசி நாள் 15. 6. 94
நூல் வெளி வரும் நாள் 15. 7. 94
தபாலில் தனியே பெற பிரதி ஒன்றுக்கு ரூ 40 / - ஆகும்

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

154, டி. டி. கே. சாலை, ஆள்வார்பேட்டை,
சென்னை - 18.
தொலைபேசி : 45 52 99

இந்தியன் வங்கியின் பிக்சட் டெபாசிட் திட்டம்.

உங்கள் வளமைக்கு வழிகாட்டி.

பாதுகாப்பு
உடனடி பணம் பெறும் வசதி
அதிக வருமானம்

இந்தியன் வங்கியின் பிக்சட் டெபாசிட் திட்டத்தின் கீழ் உங்கள் டெபாசிட்டின் மீது உங்களுக்கு மூன்று மாதத்திற்கொருமுறை வட்டி கிடைக்கிறது. மாத வட்டியும் பெறலாம் — ஆனால் சற்று குறைந்த விகிதத்தில்.

உங்கள் பணம் பத்திரமாக இருக்கும். மேலும், டெபாசிட் முதிர்ச்சி அடையும் காலத்திற்கு முன்பே பணம் தேவைப்பட்டால், விதிகளின்படி கணக்கிடப்பட்ட வட்டியுடன் டெபாசிட் தொகையைப் பெறலாம். 75% வரை கடனாகவும் பெறலாம்.

தனிப்பட்ட கவனம் மற்றும் சிறப்பான சேவையில் புகழ்பெற்ற இந்தியன் வங்கி, வளமைக்கு வழிகாட்டி வாழ்வுக்கு ஒளியூட்டுகிறது.

இந்தியன் வங்கி

உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி

31, இராஜாஜி சாலை, சென்னை - 600 001.